# தாயகம்

கலை இலக்கிய சமூகவிஞ்ஞான இதழ்



ஜூலை-செப்டம்பர் 2018

100/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பண்பு

முருகையன்

இடி, மின்னல், பெருவெள்ளம் புயல்கண்டு
வெருவினோம்; இயற்கை என்ற
கொடிய பல சக்திகளை, குமுறுகிற
பலவிசையின் கூட்டுச் சேர்ப்பை
முடுகிவந்து முன்னெதிர்த்து முடிகின்ற
முற்றுகையின் மொய்ப்பைக் கண்டே
வெடவெடத்தோம்; பரிதவித்தோம்; விடுதலைக்காய்
முயற்சி செய்தோம்; மிக உழைத்தோம்
உடலுழைப்பால் மனவுயற்சி உறலானோம்
சிறிதுசிறி தாக ஓங்கி
இடர்கடக்கும் புதுவழிகள் எத்தனையோ
கண்டுகொண்டோம்; இயற்றி விட்டோம்,

பரந்தநெடும் இயற்கைஎனும் பிரபஞ்ச
முழுவதிலும் பயிலு கின்ற
நிரந்தர வாழ் வுடையசில நியதிகளைக்
கண்டுணர்ந்த நியாயத் தாலே
விரைந்துமுன்னே அடிவைத்தோம்; விண்வெளிக்குள்
மெல்லமெல்ல நுழைய லானோம்
கரைந்துறைந்த நம்மாற்றல் விகசித்து
வெளிப்படுத்தல் கண்டு கொண்டோம்
அருந்திநுகர்ந் தெல்லோரும் ஆனந்த
மாய்வாழும் அமைப்பை ஆக்கின்,
பெருந்திறலும், விஞ்ஞானப் பண்பீன்ற
நற்பலனும் பிறக்கும் மன்றோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய ஜனநாயகம் புதிய வாழ்வு புதிய பண்பாடு

# தாயகம்

**கலை இலக்கிய சமூக விஞ்ஞான இதழ்**
**இதழ் 94**
**ஜூலை-செப்டம்பர் 2018**

---

- பிரதம ஆசிரியர் :
  *க. தணிகாசலம்*
  *தொலைபேசி : +94765283003*
- நிர்வாக ஆசிரியர்:
  *ச. சத்தியதேவன்*
- ஆசிரியர் குழு :
  *சி. சிவசேகரம்*
  *குழந்தை ம சண்முகலிங்கம்*
  *சோ. தேவராஜா*
  *அழ. பகீரதன்*
  *தெ. ஞா. மீநிலங்கோ*
  *வே. தினகரன்*
  *லோ. நிலா*
  *க ஆதித்தன்*
- பக்க வடிவமைப்பு :
  *சிவ பரதன்*
- அட்டை படம் :
  **ஐம்பதுகளில் ருஷ்ய ஓவியம்**
- ஓவியங்கள் :
  **நன்றியுடன் இணையத்திலிருந்து படங்கள்**
  *எஸ்.ரி.அனுஜன்*
- தொடர்பு :
  *ஆசிரியர்,*
  *ஆடியபாதம் வீதி,*
  *கொக்குவில்*
- மின்னஞ்சல் :
  thajaham@gmail.com
  ISSN NO : 2335-9492
- அச்சுப்பதிவு :

J.S.Printers,
Sillalai Road,Pandatheruppu.

## உள்ளடக்கம்

**கவிதைகள்**

*முருகையன்*
*சோ.பத்மநாதன்*
*த ஜெயசீலன்*
*அழ. பகீரதன்*
*ஹேமசந்திர பதிரண*
*றொபின்*
*மாதவி உமாசுதசர்மா*
*கே.ஜிந்தீசன்*
*கவிகலி*
*நிலாந்தி சசிகுமார்*

**சிறுகதைகள்**

*க. சிவகரன்*
*ஸ்ரீலேக்கா பேரின்பகுமார்*
*வனஜா நடராஜன்*
*அதிதன்*

**கட்டுரைகள்**

*சி.சிவசேகரம்*
*அநாதரட்சகன்*
*ஞானசீர்த்தி மீநிலங்கோ*
*தி. செல்வமனோகரன்*
*அதிதன்*
*காந்தரூபன் கேமலாரூபினி*
*வினவு*

**தேசிய கலை இலக்கியப் பேரவை**
இல: 62, கொக்குவில் சந்தி,
கொக்குவில்

*நிதி அனுப்புதல்களுக்கு :*
தாயகம் ஆசிரியர் குழு
Editorial Board of Thayakam
S/A NO : 0072361444
BANK OF CEYLON, CHANKANAI
SWIFT CODE NO : BCEYLKLX

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய ஜனநாயகம்
புதிய வாழ்வு
புதிய பண்பாடு

தாயகம்
கலை இலக்கிய சமூகவிஞ்ஞான இதழ் இதழ் 94 ஜூலை-செப்டம்பர் 2018

# வெகுஜனப் போராட்டங்களும் சமூக அரசியல் விழிப்புணர்வும்

மக்கள் இன்று தமது பிரச்சினைகள் எதுவானாலும் அவற்றுக்காக ஒன்று கூடி வீதியில் இறங்கிப் போராடுகின்றனர். மக்களிடம் தன்னெழுச்சியாக எழும் இப்போரட்டக் குணாம்சம் வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும். பங்கேற்பு ஜனநாயக வழிமுறையின் (Participatory democracy) ஒரு வகைமாதிரியாக நடைபெறும் இத்தகைய போராட்டங்களில் பங்கு கொள்வதன் மூலம் மக்கள் சமூக, அரசியல் விழிப்புணர்வைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன. மக்கள் அரசியல் விழிப்புணர்வு பெறாதவரை பிரதிநிதிகளைத் தெரிவு செய்துவிட்டு அடுத்த தேர்தல் வரை மக்களை ஒதுக்கிவிடும் பிரநிதித்துவ ஜனநாயகத் ((Representative democracy)) தேர்தல் முறையால் மட்டும் மக்களுக்கும், நாட்டுக்கும் பயன் எதுவும் ஏற்படப் போவதில்லை.

இலங்கையில் மீண்டும் தேர்தல்களை நோக்கிய அரசியல் சூடுபிடித்திருக்கும் நிலையில் இவைபற்றிய மீள்பார்வையும், முன்நோக்கும் இன்று அவசியமாகிறது. ஜனநாயக ஆட்சி முறையில் மக்களின் கைகளில் வாக்குச் சீட்டுக்கள் இருக்கும். இன, மத, மொழி, பிரதேச அடையாள அரசியல்களை உரத்துப்பேசி இலகுவாக அதனைப் பெற்று பதவிகளுக்கு வரும் அரசியல் வாதிகளால் தமது வாய்ப்புக்கள், வசதிகளை தொடர்ந்து பெருக்கிக் கொள்ள முடியும். ஆனால் பல்வேறு ஒடுக்குதல்களால் தொடர்ந்தும் துயருறும் மக்களின் வாழ் நிலையை இவர்களால் மாற்ற முடியாது. பதிலாக மக்களை பல்வேறு கூறுகளாகப் பிரித்து ஒடுக்கும் அதிகார வர்க்கத்தினரின் நலன்களைப் பாதுகாக்கும் இந்த அரசியல் பொருளாதார சமூகக் கட்டமைப்பை காலம் காலமாக கட்டிக் காக்க முடிகிறது. இலங்கை அரசியலின் எழுபது ஆண்டுகளின் பின்னரான இன, மத, பால், வர்க்க, சாதிய முரண் நிலைகளின் இன்றைய இருப்பும், அதன் தீர்வற்ற தன்மையும் இதனை யதார்த்தமாக வெளிப்படுத்தி நிற்கின்றன. அனைத்து இனங்கள் மத்தியில் உள்ள தொழிலாளர், விவசாயிகள், உழைக்கும் மக்களின் அடிப்படை வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கான குரல்கள் தொடர்ந்தும் பலமாக ஒலிக்கும் இனவாதக் குரல்களால் நசுக்கப்பட்டு வருகின்றன. அதற்கு மேலாக இந்த அரசியல், சமூக, பொருளாதார அமைப்பு கட்டிக்காத்துவரும் பழமைவாதத்தை பேணும் கல்வி, கலை, மத, பண்பாட்டுச் சிந்தனை முறைகள் மனிதநேயத்தை முற்றாகப் புறந்தள்ளி வருகின்றன.

சுதந்திரம் என்ற போர்வையில் பிரித்தானிய கொலனித்துவ வாதிகள் இலங்கையில் தொடர்ந்தும் தமது நலன்களைப் பாதுகாக்கும் நோக்குடன் சாதாரண மக்களின் கைகளில் வாக்குரிமையையும், அந்த மக்களை ஒடுக்கி ஆண்ட மேட்டுக்குடி அதிகார வர்க்கத்தினரிடம் ஆட்சி உரிமையையும் விட்டுச் சென்றனர். அந்நியர்களை எதிர்த்து தேசத்தின் ஒருமைப் பாட்டை பலப்படுத்திப் போராடமல் அவர்களுக்கு கிடைத்த சுதந்திரம் அது. அச் சுதந்திரத்தை - அதிகாரத்தை - பிரித்தானியரிடம் கற்ற தேசிய இனங்களைப் ‘பிரித்தாளும் தந்திரத்தை’ பின்பற்றிப் பாதுகாப்பதுதான் இலங்கையின் அரசியலாக இன்றுவரை உள்ளது. இதனால் இலங்கைத் தேசம் கூட அனைத்து மக்களுக்கான தேசமாக அடையாளப் படுத்தப்படாமல், பேரினத்தின் தேசமாகவே இன்றும் அடையாளப் படுத்தப் படுகிறது. இத்தேசத்தை தொடர்ந்தும் நவகொலனித்துவ பிடிக்குள் வைத்திருக்கும் ஏகாதிபத்திய வாதிகளுக்கும், அவர்களது அடிவருடிகளாக தொடர்ந்தும் அரசியலில் உள்ளோருக்கும், ஆட்சி புரிவோருக்கும் இது வாய்ப்பாக அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய வாய்ப்பை பயன்படுத்தியே ஏகாதிபத்தியவாதிகள் முன்வைத்த திறந்த சந்தைப் பொருளாதார முறைமையை இங்கு மேற்கொள்ள ஜே.ஆர்.ஜெயவர்த்தனா 77ல் இத்தேசத்தின் கதவுகளை திறந்துவிட்டார். இதற்கு எதிர்ப்பற்ற சூழலைத் தோற்றுவிப்ப தற்காக அவர்களது ஆலோசனையுடன் பல நடவடிக்கைகளை அவர் முன்னெடுத்தார். வேலை நிறுத்தங்களை தீவிரமாக ஒடுக்கி தொழிற்சங்க இயக்கங்களை முடங்கச் செய்தார். 'போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்' என இனங்களுக்கு இடையேயான பிளவை அதிகரிக்க போர்ப் பிரகடனத்தையும் செய்து வைத்தார். அன்னிய முதலீடுகளை அடிப்படையாகக் கொண்ட சந்தைப் பொருளாதாரத்தை பாதுகாப்பதற்காக நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறைமையை முன்வைத்து யூ. என். பி. அரசின் ஆட்சிக் காலத்தை நீடிக்க வழிசெய்தார். இதனால் அதுவரை தேசிய முதலாளித்துவ வர்க்கத்தை பிரதிநித்து வப்படுத்தி வந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் 'மனித முகமுள்ள' பொருளாதாரமாக அதனை ஏற்றுக் கொண்டு தனது வர்க்கத் தன்மையை மாற்றிக் கொண்டது. முப்பது ஆண்டு கால போருக்குப் பின்னர் வடக்குக் கிழக்கு மக்களும் ஏகாதிபத்திய உலகமய நவதாராள பொருளாதார அமைப்பின் கீழ் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டனர். மக்களுக்கு சுதந்திரத்தையும், சமவாய்ப்பையும், சபீட்சமுள்ள வாழ்வையும் தர வேண்டிய அரசு தனியார் மயமாக்கல் மூலம் அவற்றை மறுக்கும் கோப்ரேட் கொம்பனிகளின் இலாப வேட்டைக் காடாக முழு நாட்டையும் மாற்றி வருகிறது. நாட்டின் முதுகெலும்பான தொழிலாளர்கள், விவசாயிகள், உழைக்கும் மக்கள் தமது சுதந்திரத்தை இழந்து கொத்தடிமைகள் ஆக்கப்படுகின்றனர்.

மக்களிடம் நுகர்வுப் பண்பாடு என்ற போர்வையில் திணிக்கப்படும் நுகர்வு வெறியும், பொருளாதாரப் போட்டியை மையப்படுத்திய வாழ்க்கை முறையும் மனித உறவுகளை சீரழித்து வருகிறது. சமூக உணர்வுகளை மழுங்கடித்து வருகிறது. இவை பற்றிய ஆழமான சிந்தனைக்கு இடம் தராத பழமைவாத மத பண்பாட்டுக்குள் இறுகிப் போய்விட்ட சிந்தனை முறையும், இப்பொருளாதார முறைமையைப் பாதுகாக்கும் கல்விமுறையும், இலத்திரனியல் ஊடகங்களுக்கு ஊடாக அழகியல் கவர்ச்சியுடன் கலைவடிவில் திணிக்கப்படும் கருத்தியல், காட்சிப் படிமங்களும் மக்களின் வாழ்வை வடிவமைக்கின்றன. இவையே பல்வேறு ஒடுக்குமுறைகளும், ஏற்றத்தாழ்வுகளும் நிறைந்த இச்சுரண்டற் சமூக அமைப்பை கட்டிக் காக்கும் பலமான அரண்களாக உள்ளன. அத்துடன் இன்றைய சமூக பண்பாட்டுச் சீரழிவுகளுக்கும் அடித்தளமாக இவையே உள்ளன.

இதுவே இலங்கையின் இன்றைய யதார்த்த நிலை. ஆனால் கொலனித்துவ ஆட்சியாளர்கள் விட்டுச் சென்ற ஜனநாயக தேர்தல் முறை மூலம் தெற்கில் பேரினவாத அரசியலும் வடக்குக் கிழக்கில் அதற்கு எதிரான குறுந்தேசிய அரசியலுமே பெரும் அழிவுகளையும், இழப்புக்களையும் தந்த போரின் பின்னரும் கூட தொடர்ந்து மக்களிடம் திணிக்கப்பட்டு வருகிறது. போரை தொடக்கி வைத்ததிலும் முடித்து வைத்ததிலும் ஏகாதிபத்திய, பிராந்திய சக்திகளுக்குப் பங்கு உண்டு. ஆனால் மறந்தும் அரசு மட்டுமல்ல பேரழிவுக்கு உட்பட்ட தமிழர் தரப்பில் இருந்தும் இவர்களுக்கு எதிரான குரல்கள், விமர்சனங்கள் எழுவதில்லை. சொந்தக் கால்களில் நின்று உரிமைகளைப் பெறுகின்ற அரசியலை விடுத்து உதைத்த கால்களையே பற்றிப் பிடிக்கும் அரசியலையே இவர்கள் தொடர்ந்தும் மேற்கொள்கின்றனர். உலக மக்களை ஒடுக்கும் ஏகாதிபத்தியவாதிகளின் கறை படிந்த கைகளுடன் விடுதலையை விரும்புபவர்கள் கைகோர்க்க முடியுமா?

கறுப்பு யூலையில் இருந்து, முள்ளிவாய்க்கால் வரை கற்றுக்கொண்ட பாடங்கள் பன்முகப் பார்வைகள் மூலம் அகலப்படுத்தப்பட வேண்டும். ஆழப்படுத்தப் படவேண்டும். பேரின வாத ஒடுக்குதலுக்கு எதிராக தேசிய இன விடுதலையை மட்டும் மையப்படுத்திய அரசியலே பேரினவாதத்தை மேலும் பலமான நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது. அதற்கு மாற்றாக உழைக்கும் மக்கள் விடுதலையின் அடிப்படையில் தேசிய இனங்களின் விடுதலையைப் பெறும் மார்க்கமே பேரினவாதத்தை பலமிழக்க வைத்து அனைத்து ஒடுக்குமுறைகளில் இருந்தும் அனைத்து மக்களும் விடுபடும் மார்க்கமாக அமையும். இதற்கான மக்களின் தேவைகளில் இருந்து எழும் வெகுஜனப் போராட்ட மார்க்கத்தில் சாதி, இன, மத, பிரதேச வேறுபாடுகள் இன்றி அரசியல் விழிப்புணர்வுடன் அனைத்து மக்களும் இம் மாற்று அரசியலை முன்னெடுக்க ஒன்றிணைய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க இன்றைய ஏகாதிபத்திய மிரட்டல்

அமெரிக்காவின் பிரச்சனை அதன் சனாதிபதி டொனல்ட் ட்ரம்ப் எனக் கருதுவோர் உள்ளனர். அவர்களிற் பலர் பில் கிளின்ற்றன், பராக் ஒபாமா போன்ற சனநாயகக் கட்சிச் சனாதிபதிகளிடம் எதிர்பார்த்த நன்மை எதுவும் கிடைக்கவில்லை. குடியரசுக் கட்சியின் மூத்த, இளைய ஜோஜ் புஷ் ஆட்சிகளின் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக் கொள்கைகளையே கிளின்ற்றனும் ஒபாமாவும் தொடர்ந்தனர். எனினும், 2016இல் ஹிலரி கிளின்ற்றனும் டொனல்ட் ட்ரம்ப்பும் சனாதிபதித் தேர்தலிற் போட்டியிட்ட போது, நம்மிடையே பலர் ஹிலரி கிளின்ற்றன் வெல்வதை விரும்பினர்.

அமெரிக்க அரசியல் நிறுவனங்கள் அமெரிக்க முதலாளியத்தையும் அதன் ஏகாதிபத்திய நலன்களையும் மிரட்டும் எதையும் ஏற்கா. அண்மைய அமெரிக்க வரலாற்றில் சோஷலிசக் கருத்துக்கள் சிலதையேனும் துணிந்து சொன்ன பேர்ணி சான்டேர்ஸ் தனது சனாதிபதி வேட்பாளராக வருவதை சனநாயகக் கட்சித் தலைமை விரும்பவில்லை. சாதாரண மக்களின் பிரச்சனைகளில் ஹிலரியை விட அதிக அக்கறை காட்டிய சான்டேர்ஸின் வெற்றி வாய்ப்பு ஹிலரியினதினும் அதிகம் என அறிந்தும் சான்டேர்ஸைத் தவிர்க்கச் சனநாயகக் கட்சித் தலைமை சூழ்ச்சி செய்து வென்றது. எனினும் ஹிலரியின் அரசியல் முறைகேடுகள் தேர்தலுக்கு முன் அம்பலமானதால் அவர் வெல்லத் தவறினார்.

ட்ரம்பின் அரசியல் பிரகடனங்கள் குழப்பமாய்த் தெரியினும், அவை அமெரிக்க அதிகார நிறுவனத்தின் தேவைகட்கு மாறானவையல்ல. எனினும், முற்போக்காளர்களாகத் தம்மைக் கருதுவோர் பலர் அமெரிக்காவின் சர்வதேச அரசியற் கோளாறுகட்கு ட்ரம்ப்பைக் குறை கூறுவர்.

ரஷ்யாவும் சீனாவும் ஈரானும் ஒரு வலிய சர்வதேசக் கூட்டணியாவதை அமெரிக்க ஆளும் நிறுவனம் வெறுக்கிறது. அம் மூன்று நாடுகட்கும் எதிரான அழுத்தங்களை ஒரே நேரத்திற் செலுத்தியமை அவை ஒற்றுமைப்படும் சூழலை உருவாக்கியதால் அமெரிக்கா பிரித்தாளும் உபாயங்களில் ஈடுபடுகிறது.

சிரியாவில் ஒபாமா தொடக்கிய போரில் ரஷ்யாவும் ஈரானும் வழங்கிய உதவி அமெரிக்கா ஆதரித்த பயங்கரவாதிகளை வீழ்த்தியது. போதாமல், சிரியாவில் தன்னை நிலைநாட்டக் குர்தியப் போராளிகட்கு அமெரிக்கா வழங்கிய ஆதரவு துருக்கியுடன் முரண்பாட்டை ஏற்படுத்தியது. அதை மேலுந் தவறாகக் கையாண்ட அமெரிக்கா துருக்கியை ரஷ்யாவுக்கும் ஈரானுக்கும் நட்பாக்கியது. அதை விட, அராபிய தீபகற்பத்தில்; சவூதி மேலாதிக்க நடவடிக்கைகள் அங்கும் அமெரிக்காவைச் சங்கடத்தில் ஆழ்த்தியுள்ளன. எனவே அமெரிக்காவின் சமகாலச் சர்வதேச நடத்தையை இச் சிக்கலிலிருந்து மீளும் முயற்சியின் ஒரு பகுதியாகவே காணவேண்டும்.

எவ்வாறாயினும், இந்த நூற்றாண்டிற் சீனாவின் பாரிய பொருளாதார வளர்ச்சிக்குப் பின், அமெரிக்கா சீனாவைப் பிரதான எதிரியாகக் காண்கிறது. சீன இராணுவ மிரட்டல் என்பது ஒரு புனைவு. ஆயினும் அதன் பெயரில் இந்தியாவையும் யப்பானையும் தன்னோடு இணைத்துச் சீனாவைச் சுற்றிவளைக்கும் திட்டம் ஒபாமாவின் காலத்திற் தொடங்கியது. எனவே, இன்று அமெரிக்கா சீனாவுடன் தொடுத்துள்ள வணிகப் போர் பழைய சுற்றிவளைப்புத் திட்டத்தின் மேலுமொரு பரிமாணம் மட்டுமே.

ஈரானுடன் மேற்குலகு செய்த அணு ஆயுதத் தவிர்ப்பு உடன்படிக்கையினின்று அமெரிக்க விலகல், ஒரு புறம் சவூதிகளையும் இஸ்ரேலியரையும் மகிழ்விக்க ஈரானைப் பலவீனப் படுத்தும் நோக்கும் இன்னொருபுறம் ரஷ்ய-சீன-ஈரான் கூட்டைச் சிக்கலுக்குட்படுத்தும் நோக்கும் உடையது. எனினும், அது பாக்கிஸ்தானுக்குப் பகையான நோக்கில் ஈரானின் நட்பை நாடும் இந்தியாவுக்குச் சங்கடமானது. இவ்வாறு, அமெரிக்கச் சூழ்ச்சிகள் ஒரு பிரச்சனையைத் தீர்க்கப் போய் வேறு பல பிரச்சனைகளை உண்டாக்குவதைக் காண்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இப் பின்புலத்திற், சர்வதேசப் பிரச்சனைகளில் முற்போக்காளர்கள் எடுக்கவுகந்த நிலைப்பாடு என்ன என்ற கேள்வி எழுகிறது. இன்று உலகில் சோஷலிச முகாம் என ஒன்றில்லை. வலிய சோஷலிச நாடென எதுவுமில்லை. சீனாவும் ரஷ்யாவும் வலிய முதலாளிய நாடுகள். அவற்றில் சோஷலிசம் மீளாத பட்சத்தில் அவை ஏகாதிபத்திய நாடுகளாவது தவிர்க்கவியலாது. இந்தியா, சவூதி அராபியா, இஸ்ரேல் ஆகியன பிராந்திய மேலாதிக்க நாடுகள். அவையும் தென்னாபிரிக்கா உட்பட்ட பிற நாடுகளும் நாளை ஏகாதிபத்திய நாடுகளாகலாம்.

எனவே மேற்கூறிய நாடுகள் தமது பொருளாதாரத்தில் ஆதிக்கஞ் செலுத்தும் வாய்ப்பையிட்டு வலிமை குறைந்த நாடுகள் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். சிலர்; வெகு அகச்சார்பாகச் சீனாவையும் ரஷ்யாவையும் இந்தியாவையும் ஏகாதிபத்திய நாடுகளெனக் கணிப்பர். அக் கணிப்புச் செல்லுமென்று கொண்டாலும், அமெரிக்கத் தலைமையிலான ஏகாதிபத்திய முகாமே உலக நாடுகட்கு உடனடி, இடைக்கால அச்சுறுத்தலாக உள்ளது.

சீனாவும் ரஷ்யாவும் அமெரிக்காவுக்குச் சவால் விடாததாலேயே ஆப்கானிஸ்தானிலும் ஈராக்கிலும் லிபியாவிலும் அமெரிக்கா குறுக்கிட்டு அந் நாடுகளைச் சீர்குலைத்தது. எனவே அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் எந்த நாடும் முரண்படும் போது, அமெரிக்க ஏகாதிபத்தியமே பிரதான எதிரி என்பதை நாம் மறக்கலாகாது. அதன் பொருள், மேலாதிக்க நோக்கிலோ இன ஒடுக்குமுறை நோக்கிலோ செயற்படும் எவரும் அமெரிக்க விரோதி என்பதால், அவரை நிபந்தனையின்றி ஆதரிப்பதல்ல.

ஒவ்வொரு பிரச்சனையையும் குறுகியகால, நீண்டகால அடிப்படைகளில் பிரதான முரண்பாடு எது, துணை முரண்பாடு எது என் ஆய்ந்தறிந்து முடிவுக்கு வருவது விவேகம். நண்பரல்லா அனைவரும் பகைவர் என வாதிப்பது அவிவேகம்.

அகதிகளும் ஆயுதவியாபாரிகளும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இனமத எல்லைகள் கடந்து...

அம்முதாட்டியின் இறுதி யாத்திரை
அயலும் ஊரும் வியக்க நகர்ந்தது
அறுவர் மக்கள் தோள்களில் சுமந்து
வீதி, ஒழுங்கை, சந்தி, முடக்கெனப்
பாதை அமைத்(து) அவள் பாடை நகர்ந்தது.
அறுவர் மக்கள் என்றா சொன்னேன்
பெற்ற பிள்ளைகள் அல்லர் அவர்கள்
வளர்த்த பிள்ளைகள் வலிய தோளினர்!

முப்பத்தேழு ஆண்டின் முன்னர்
இலங்கையிலிருந்து டுபாய் வள நாட்டுக்குப்
பணிப்பெண்ணாகப் பிழைக்கப் போனவள்
அரபு எஜமான் குழந்தைகள் அறுவரை
சொந்தப் பிள்ளைகள் போல், சீராட்டினாள்
சாந்தியை அன்றித் தாய் பிறரறியார்
அம்மா என்றே அழைத்துப் பழகினர்
உணவு சமைத்தல் உடை அணிவித்தல்
எல்லாம் அவள் செய இனிது வளர்ந்தனர்
ஆனால் நிமிர்ந்து தொழில் புரிந்தார்கள்
அம்மா சொற்படி நடந்து கொண்டார்கள்
பிள்ளைகளால் அவள் பெருமை யுற்றனள்

கால சக்கரம் கடிதில் சுழன்றது
முதுமையால் அவளுடல் தளர்ச்சி கண்டது
முன்போல் பணிசெய்ய முடிந்திட வில்லை
நோய்வாய்ப்பட்டாள், மருத்துவம் செய்ய
தாய் நாட்டுக்குத் திரும்ப விரும்பினாள்
"ஏன் ஏன் அம்மா நாங்கள் இல்லையா?
எல்லா வசதியும் இங்கே அமைக்கலாம்!"
என வலியுறுத்தி தாதி ஒருத்தியை
ஏற்பாடு செய்து பேணினர் சாந்தியை.

நோய் தீர்ந்திலது, சுதேச மருத்துவம்
நாடித் தாயகம் வந்து சேர்ந்தாள்
சில மாதங்களில் காலமாகினாள்
செய்தி கேட்ட மைந்தர் அறுவரும்
ஜாஎல வந்தனர்; இறுதிச் சடங்கு
சாந்தியின் சமய முறைப்படி நடந்தது
அம்மா அம்மா என்றழு தரற்றி
அறுவரும் அவளைச் சுமந்து நடந்தனர்
அடக்கம் செய்தபின் மண்ணில் அமர்ந்து
திருக்குர் ஆனை ஓதலாயினர்.

இனம் என்னடா இனம் இனம்!
மதம் என்னடா மதம் மதம்!
உறவல்லவோ உயிரின் மிக்கது!
உணர்வல்லவோ உயர்வு காண்பது!

சோ. பத்மநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுக்குட்டி

ஸ்ரீலேக்கா பேரின்பகுமார்

கிராமத்து பிரதான வீதி, அதிகாலையில் வயலுக்கும், சந்தைக்கும் போகின்றவர்களால் கலகலக்க ஆரம்பித்தது. அழகும், உழைப்பும் சேர்ந்த பொழுது அக்கிராமத்து குளத்தின் கரையில் இருக்கும் சாந்தாவின் வீடும் பர பரக்க ஆரம்பித்தது. நோயோடு படுக்கையில் இருக்கும் தாயாருக்குரிய கடமைகளை முடித் துவிட்டு தோட்டத்திற்குப் போவதற்கு ஆயத் தமானாள். திடீரென பிரதான வீதிப்பக்கம் வழமைக்கு மாறான ஆள் நடமாட்டங்களை அவளால் உணரமுடிந்தது. தயாரிடம் விடை பெற்று வேகமாக வெளியேறினாள். வீதியில் அங்கொன்று, இங்கொன்றாக இருந்த சனக் கூட்டம் ஏதோவொரு அசம்பாவிதம் நிகழ்ந்து முடிந்துள்ளது என்பதை உணர்த்தியது. அங் கிருந்த எல்லோரும் தெரிந்தவர்கள். அதனால் தயக்கமின்றி அருகே போனாள். அவர்கள் பரபரப்பாக போக ஆயத்தமானார்கள்.

"என்னண்ணை ஏதும் பிரச்சினையோ?"

"உனக்கு தெரியாதே பிள்ளை சுக்குட் டியை மடத்துக்கு முன்னாலை ஆரோ அடிச்சு சாக்கொண்டு போட்டாங்கள்"

இந்தச் செய்தியை இலகுவாக கூறிச் சென்றுவிட்டார். சாந்தாவிற்கு கால்கள் பட படக்க ஆரம்பித்தது. பெரும் விம்ம லோடு அழ ஆரம்பித்தாள். மடத்திற்கு முன்னூறு மீற்றர் நடக்க வேண்டும் முன்னே ஓடிக் கொண்டிருந்த ஆண்கள் பின்னே இவளும் வேகமாக நடந்தாள்.

சுக்குட்டி உருவத்தில் சிறியவன் இதன் காரணமாக சுக்குட்டி என்று அழைத்திருப்பர் போலும். அவன் இறந்த செய்தியைக் கேட்டு ஓடும் இவர்களுக்கு சுக்குட்டி உற வுக்காரனில்லை ஆனால் ஊரோடு ஒன்றித் துப் போனவன் கிராமத்திலிருந்து இரண்டு கிலோ மீற்றர் தாண்டி இருக்கும் நகரத்தில் காலையிலிருந்து மதியம் வரை யாசகம் செய்வான். பின் அங்கு வாங்கும் உணவுடன் கிராமத்திற்கு வந்து, பிரதான வீதியில் இருக் கும் பாதசாரிகள் தங்குமடத்தில் இருந்து அதனை சாப்பிட்டுவிட்டு, அங்கேயே படுத் திருப்பான். அவனுக்கு அதிலொரு ஆனந் தம். சுற்றிவர இருக்கும் வயல் வெளியி லிருந்து வீசும் காற்று அவனுக்கு சந்தோ சத்தைக் கொடுக்கும்.

ஊரின் பெரியவர்கள் வாயிலாக, சுக் குட்டியின் தாயார் சித்த சுவாதீனத்துடன், எங்கிருந்தோ வந்து இந்த ஊருக்குள் அலைந்து திரிந்ததாகவும், அவள் சுக்குட்டி யைப்போல சிறிய அழகான பெண் என் பார்கள். பலபொழுதுகள் மடத்தின் ஆறு தூண்களோடும் பேசிக்கொண்டிருப்பாளாம். அந்தப் பேச்சு பெரும்பாலும் ஆங்கிலத்தில் அமைந்திருந்ததாகவும், அதைவைத்து அவள் கௌரவமான படித்த குடும்பத்தில் வளர்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளாக இருப்பாள் என ஊரவர்கள் முடிவு செய்திருந்தனர். ஆனால் ஏன் அவளை யாரும் தேடி வரவில்லை என்பது எவருக்கும் தெரியாது. அவளை உரிய இடத்தில் சேர்த்துவிட ஊரவர்களும் முனையவில்லை. அவளுக்கு பசிக்கின்ற போது தெருவில் இருக்கும் மதகு ஓரம் குந்தியிருப்பாளாம். அவ்வேளைகளில் பெண் என்ற இரக்கத்தில் சாப்பிடவும், குடிக்கவும், உடுத்துக்கொள்ள ஆடையும் கொடுத்தார்கள். யாசகம் செய்வதற்கான தொடக்கப் புள்ளியை கிராமத்து மனிதர்களே இட்டுக் கொடுத்துள்ளனர்.

இவ்வாறு இருக்கும் வேளையில் அந்த அப்பாவி வயிற்றில் சிறிது சிறிதாக மாற்றம் தெரிய, இனங்காணப்படாத ஊர்க்காரன் ஒருவன் அவளைக் கர்ப்பமாக்கி விட்டதை எல்லோரும் தெரிந்து கொண்டனர். அவ்வாறெனில் சுக்குட்டி இந்த ஊர்கார்களுக்கு ஏற்றுக்கொள்ளப்படாத உறவுக்காரன். ஒரு நாள் பெத்தாத்தை என்ற மனிசி வயலுக்குப் போகின்ற நேரம் சுக்குட்டி தொப்புள் கொடியுடன் கிடந்து அழுவதைப் பாத்திருக்கின்றாள். அவள்தான் முதலில் தூக்கி மருத்துவம் பார்த்திருக்கின்றாள். பாலூட்டவும் கற்றுக் கொடுத்ததோடு, பெரிய பூவரசம் தடியைக் கொடுத்து அவளைப் பாதுகாக்கவும் சொல்லிக் கொடுத்தாள் என்று சொல்வார்கள். அந்தத் தடிதான் மடத்தடியில் இன்று நிற்கின்ற பெரிய பூவரசு மரம் என்று கூறுகின்றார்கள். கைக்குழந்தையோடு திரிந்தவள், பின் அக்குழந்தை ஐந்து வயது சிறுவனாக இருந்து அந்தத் தாயை வழிநடத்தி உணவு கொடுத்து பராமரித்து வந்த அந்த நாட்களைப் பற்றி சொல்லி வியப்பார்கள். ஒருநாள் அந்தத் தாய் வயல் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டாள். அந்த மரணத்திற்கான காரணம் இன்று வரைக்கும் தெரியவில்லை. சுக்குட்டி அன்றிலிருந்து தாயில்லாமல் போராடி வாழ்ந்தவன்.

ஊரவர்கள் பின்னேரப் பொழுதுகளில் சிறு வேலைகளுக்கு அழைத்தால் சந்தோசமாகச் சென்று செய்து கொடுப்பான். கூலிக்காகப் பணம் கொடுத்தால் வாங்கமாட்டான். இவ்வாறு வேலைக்குச் செல்வதால் தன்னைச் சுற்றி உறவுகளும் தெரிந்தவர்களும் சூழ்வதாக மனமகிழ்வு அடைவான். ஒருவருக்கு தொடர்ச்சியாக வேலை செய்து கொடுக்கவும் மாட்டான். இந்த விடயத்தில் சுக்குட்டியை ஏமாற்ற முடியாது.

"நேற்றுத்தானே விறகு கொத்தினான் இனி ஒரு மாதத்திற்கு பிறகுதான்"

கண்டிப்பாகச் சொல்வான் எந்தக் கௌரவமான மனிதராயினும் அவனது வார்த்தைகள் கடுமையானதாகவே இருக்கும். இவ்வாறுதான் சாந்தா வீட்டிற்கு தேங்காய் உரித்துக் கொடுக்க வந்தான். வேலையின் இடையே செம்பு நிறைய தண்ணீரை வாங்கி மடக்மடக்கென்று குடித்துவிட்டு தேங்காய்களை உரித்துப் போடுவான். அப்பொழுதெல்லாம் சாந்தாவிற்கு கூலி கொடுக்காமல் வேலை வாங்கும் குற்ற உணர்வு கொல்லும். அதனால் சுக்குட்டி என அழைப்பதை நிறுத்தி ஒருநாள் எதேச்சையாக,

"தம்பி கொஞ்சம் இரு தேத்தண்ணி குடிச்சிட்டுப் போகலாம்"

என்ற பொழுது அவன் கண்களில் ஒரு மின்னல் தெறிப்பதை முதன் முதலாகப் பார்த்தாள். இது அவனுள் தாக்கத்தைச் செலுத்தியதை அவளால் உணர முடிந்தது.

இந்தச் சொல்லின் மந்திர சக்தியால் சுக்குட்டி சாந்தாவின் வீட்டுக்கு வேலைக்கு வருகின்ற போதெல்லாம் தன் எண்ணங்களையும், ஒரு மாதமாக நடந்த சம்பவங்களையும் கூறுவான். சாந்தாவும் சலிக்கமால் கேட்டுக் கொள்வாள். சாந்தா ஐம்பது வயதை அடைந்த முதிர் கன்னி. பூர்வீகச் சொத்துக்கள் இருப்பதால் வருமானத்திற்கு உழைப்பொன்று தேவையற்றதாக இருந்தது. ஆனால் கடினமான வேலைகள் செய்வதற்கு ஆட்கள் தேவையாக இருந்தது. சாந்தா வீட்டிற்கு சுக்குட்டி வருகின்றபோது கொடுத்த வேலையோடு மேலதிகமாக,

"என்னக்கா... மாமரத்திலை குருவிச்சை வளந்து போய்க்கிடக்கு. ஏறி வெட்டி விடுறன்"

"அக்கா உதுலை ரண்டு வாழைக்கன்று வையுங்கோ நல்லா வளரும்"

எனத் தானே தீர்மானித்து செயற்படுத்தியும் விடுவான். அந்த வேளையில்

"ஏ தம்பி... செய்யுற வேலைக்கு காசு கொஞ்சமாவது வேண்டன் உழைச்சு சாப்பிடுற மாதிரி இருக்கும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கதையோட கதையாய்; நக்கல் விடுறாய் அக்கா, காசு வாங்கினால் எனக்கு சாந்தா அக்கா கிடைச்சிருக்காது. எனக்கெதுக்கு காசு, என்னட்டை இருக்கு"

"அப்ப ஏன் உப்பிடி குப்பையாய் திரியிறாய்? நல்ல உடுப்பை வேண்டிப் போடு. தாடி, முடியை வெட்டி வடிவாய் இரு."

"போக்கா ஆக்கள் என்னைப் பார்த்து சிரிக்கவே"

என மறுத்து வெட்கப்பட்டு நெளிவான்

"அக்கா நீயும் கனகண்ணையின்ர பிள்ளையளும் தான் என்னைச் சுக்குட்டியெண்டு கூப்பிடுறேலை. இந்தப் பேரே எனக்குப் பிடிக்கேலை"

இந்த நினைவுகளோடு நடக்க, சாந்தாவின் பெருவிரல் கல்லொன்றின் மீது சடுதியாக மோதியது. அதனால் வந்த வலி, சுக்குட்டிக்காக கலங்கிச் சிதறிய கண்ணீரோடு மேலதிக கண்ணீரைச் சேர்த்தது. சிறு வீதிகளிலிருந்து தெரிந்தவர்கள் செய்தி கேட்டு ஓடிவந்து சாந்தாவோடு இணைந்து கொண்டனர். எல்லோருடைய வார்த்தைகளும் இறந்தவனின் நற்புகழைப் போற்றின கொன்றவர்களை சபித்தன.

"அந்த பாவியை எந்த கொடும்பாவி என்னத்துக்கு கொண்டானோ"

எல்லோருடைய கேள்வியும் இதுவாக இருந்தது.

சாந்தாவின் விரலில் இரத்தம் கசிந்தது. அது சுக்குட்டியின் இன்னொரு நினைவை கொண்டுவந்தது. ஒரு நாள் மாலை அழைக் காமலேயே சாந்தாவின் வீட்டிற்கு வேலை செய்து கொடுப்பதற்காக வந்தான். தலையின் இடது புறம் சிறிய காயம். இரத்தம் கசிந்து காய்ந்திருந்தது. காரணம் கேட்ட போது மடத்தில் நள்ளிரவில் உறங்கிக்கொண்டிருக்கும் போது மதுபோதையில் வந்த இனந் தெரியாத ஒருவர் தன்னைக்காசு கேட்டு கல்லால் தாக்கியதாக கூறினான். அதைக் கேட்டு சாந்தா கல்லால் தாக்கியவனைத் திட்டியபோது,

"பாவம்.... அக்கா பேசாதை.... அம்பது ரூபாய் தாவெண்டுதான் கேட்டு அடிச்சவன் நான் நூறு ரூபாய் குடுத்துப் போட்டன். பாவம்......"

"என்ன அடிச்சவனை பாவமென்டு சொல்லுறாய். உன்னட்டை காசு கிடக்கெண்டே அடிச்சவன்"

"ஏனக்கா என்னட்டை காசில்லையே? உனக்கு சீதனம் குடுத்து கல்யாணம் செய்து வைப்பனக்கா"

"ஐம்பதிலை... சோக்கான கதை. உந்தப் பகிடியை விடு. காயத்துக்கு மருந்துபோடு கொண்டுவந்து தாறன்."

"என்னக்கா நான் பொய் சொல்றன் எண்டு நினைக்கிறாய்? இஞ்ச பார்" என்றவாறு இலையான்கள் எப்பொழுதும் வட்டமிட்டுக் கொண்டிருக்கும் அழுக்கினால் கறுப்பாக மாறிப்போன துணிப்பொதியைப் பிரித்தான். அதற்குள் கை தொடக் கூசும் அழுக்குத்தாள்கள். அதைப் பிரித்தான் அழகாக மடித்துக் கட்டப்பட்டிருந்த காசுக் கட்டுக்கள். சாந்தாவிற்கு அந்தப் பணம் பெருத்த அதிர்ச்சியை, வியப்பை கொடுத்ததைவிட இவ்வளவு பணம் இருந்தும் அவனால் அழகாக தன்னை மாற்றவோ, வாழ்வை மாற்றியமைக்கவோ முடியவில்லையே என்ற மனவருத்தத்தையே கொடுத்தது.

"தம்பி உந்தக் காசை முதலிலை மூடு. எனக்கு பயமாக் கிடக்கு என்னத்துக்கு காட்டுறாய். உதுக்கு சின்னதாய் காணி வாங்கி சின்ன வீடு கட்டு. நான் நல்ல பிள்ளையாப் பாத்து கல்யாணம் செய்து வைக்கிறன்.

"பார் உன்ர பகிடியை... உந்தக் கதையைக் கேட்டால் பிச்சைக்காறன் எண்ட பெயரோடை விசரன் எண்ட பட்டமும் வரப்போகுது.."

"அப்ப உந்தக் காசை வச்சு என்ன செய்யப்போறாய்."

"ஆருக்கு குடுக்கவேணும் போல தோணுதோ அவைக்கு குடுப்பன்.."

"நீ குடுத்தால் வேண்டி வைச்சுப்போட்டு மூச்சு விடமாட்டாங்கள். பிச்சைக்காரனிட்ட வேண்டினதைச் சொல்லி உன்னைப் பெருமைப் படுத்தமாட்டாங்கள். நீ பேசாம சாப்பிட்டு உடுத்து இரு."

"சொல்லாட்டி என்னக்கா... எனக்கு அதிலை சந்தோசம். ஒரு கதை சொல்லுறன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கா உன்ர அம்மா மேல சத்தியம் ஒருத்தருக்கும் சொல்லக்கூடாது."

சுக்குட்டி சொன்ன கதை அவனை தெய்வமாக உயர்த்தியது. அவன் ஊருக்கு வந்து போகின்ற போதெல்லாம் தெருவோரத்து சிறு வீட்டில் இருக்கும் கனகர், சரஸ்வதியின் நான்கு சிறு குழந்தைகளும் அவனை மாமா என்று அழைத்து உறவாடும். இது அவனுள் அளவில்லா ஆனந்தத்தை கொடுத்தது. அதே கணம் அவர்களின் வறுமைநிலை அவனை திண்டாட வைத்தது. நல்ல உடையில்லாது புழுதியில் விளையாடும் அவர்களின் தோற்றத்திற்கும் தன் தோற்றத்திற்கும் வித்தியாசமில்லை எனக் கண்டான். அடிக்கடி வேலை கிடைக்காமல் வாசலில் குந்தியிருக்கும் கனகரையும், அவரை வேலை தேடி போகக் கூறி பேசும் சரஸ்வதியையும், இவற்றைக் கண்டுகொள்ளாது சுக்கட்டியை கண்டவுடன் மாமாவென்று ஓடிவரும் அவர்களது குழந்தைகளிடம் அன்றைய சாப்பாட்டைக் கேட்டால்,

"இனித்தான் அம்மா தருவா"

எனச் சொல்லி முகம் மலரும் அந்த குழந்தைகளிடம் தன் சிறுபருவ வலிகளைக் கண்டான். அது அவனுள் அந்த முடிவை எடுக்க வைத்தது.

ஒரு நாள் கனகரை அழைத்து ஒருலட்சம் ரூபாவைக் கொடுத்து கடை போட்டு உழைக்கும்படி கூறியிருக்கிறான். அவர் அந்தப் பணத்தை வாங்குவதற்கு மறுத்துள்ளார். ஆரம்பத்தில் அந்தப் பணம் எங்கோ களவாடப்பட்டு வந்திருக்கக்கூடும் என நினைத்துள்ளார். ஆனால் சுக்குட்டி அவை யாசகத்ததால் கிடைத்தவை என்று நம்ப வைத்து பணத்தை குழந்தைகளின் நலனுக்காக வேண்டும்படி பலவந்தமாக கொடுத்துள்ளான். அது மட்டுமல்லாமல் அவர் அந்த பணத்தை வீண் விரயம் செய்யக் கூடாது என்பதற்காக தான் வழமையாக செய்யும் வேலைபோல் நின்று கடைகட்டுவதற்கும், நகரத்திலிருந்து கடைக்குத் தேவையான பொருட்களை வாங்கிப் போடுவதற்கும் உதவி செய்துள்ளான். இந்தக் கதைகளை இரகசியமாக கூறி மீண்டும் ஒருத்தருக்கும் சொல்லக்கூடாது என சத்தியத்தை வாங்கிக் கொண்டான்.

சுக்குட்டி குழந்தைப் பருவத்திலிருந்து சமூகத்தோடு போராடி வாழ்ந்த வாழ்வு பல அனுபவங்களைக் கற்றுக்கொடுத்திருந்தது. அவன் கள்ளங்கபடமற்ற புது உலகம். அவனொரு சித்தன். சாந்தா அப்படிப்பட்ட மனிதனுக்கு மரணத்தை கொடுக்கும் காயத்தை ஏற்படுத்தியது யாராக இருக்கும்... ஒருவேளை ஐம்பது ரூபாய் கேட்டு அடித்த குடிகாரனாக இருப்பானோ...? என்ற கேள்வியோடு ஓடினாள்.

வயற் பகுதியை நெருங்க, தூரத்தில் மடம் தெரிந்தது. அதனை சுற்றி ஊர்காரர்கள் கூடி நிற்பது தெரிந்தது. மடத்தின் கூரைக்கு மேலாக செங்கதிரவன் மெல்ல எழுந்தான். கதிரவன் சுக்குட்டி சிந்திய இரத்தத்தில் மூழ்கியெழும்பியது போலிருந்தது. வயலெங்கும் நெற்கதிர்கள் தலை சாய்த்து துக்கத்தை வெளிப்படுத்தின. எல்லா வயல்களிலும் சுக்குட்டியின் உழைப்பு இருந்தது. காலைப் பொழுதில் வழமை போல பாடும் பறவைகளின் சத்தங்களும் சாந்தாவிற்கு ஒப்பாரி போல் காதைப் பிளந்தன.

மடத்தை நெருங்கி, சுற்றியிருந்த கூட்டத்தை விலக்கி உள்ளே புகுந்தாள். மஞ்சள் நாடாக்கள் வழிமறித்தன. அதனுள் நான்கு காவற்துறை அதிகாரிகளும் வெறொருவரும் நின்றனர். சுக்குட்டியின் உடலம் தான் பிறந்த இடத்தில் குப்புறக் கிடந்தது. தலையிலிருந்து வடிந்த இரத்தம் உயர்ந்த மடத்தில் தரையிலிருந்து வடிந்து நிலத்தில் காய்ந்திருந்தது. சாந்தா நெஞ்சு வெடித்து வந்த அழுகையை கூட்டத்தைப் பார்த்து அடக்கிக் கொண்டாள். அவளை மீறி கண்ணீர் தாரை தாரையாக சிந்தியது. புலன் விசாரணை நடந்து கொண்டிருந்தது. கூடியிருந்தவர்கள் சுக்குட்டியின் மரணத்திற்கான காரணத்தை ஆளுக்கொன்றாக எடுத்துக்கட்ட ஆரம்பித்தனர்.

"ஆள்மாறி அடிச்சுப் போட்டாங்கள் போல.."

"சீ.. சிலவேளை குடிச்சிட்டு விழுந்தானோ தெரியாது.."

"இல்லை ஆள் குப்புறக் கிடக்கு ஆரோ அடிச்சிருக்கினம்.."

"பார் கீழை ஒரு கல்லு கிடக்கு அதைத் தான் தலையில போட்டிருக்கிறாங்கள்"

"படுபாவியள் உந்த வேலையை ஏன் செய்தாங்களோ...??"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தா எந்த பதிலும் சொல்ல முடியாது மௌனமாக மூன்றாம் மனுசியாக நின்றாள். திடீரென கனகரின் ஞாபகம் வரவே கூட்டத்தில் கண்ணைத் துலாவினாள். வயலின் வரம்பில் நின்ற பூவரசமரத்தை ஒரு கையால் தழுவியபடியும், மறுகையினால் வடிந்தோடும் கண்ணீரை சுற்றியிருந்தவர்கள் அவதானிக்காதபடி துடைத்துக் கொண்டிருந்தார் கனகர். இந்த கூட்டத்தில் சுக்குட்டியால் நேசிக்கப்பட்ட இருவர் அவன் செலுத்திய அன்பை சொல்லி அழ திறனற்றவர்களாக நின்றிருந்தனர்.

சுக்குட்டியின் மரணத்திற்கான காரணத்தை ஊரவர்கள் அடுக்கும் போது சாந்தாவிற்கு சுக்குட்டியின் பணம் வைத்திருந்த துணி முடிச்சு சடுதியாக ஞாபகத்திற்கு வந்தது. மஞ்சள் நாடாவின் நான்கு பக்கங்களாலும் சுற்றிச் சுற்றி வந்து அதைத் தேடினாள். குப்புறக்கிடந்த அவனது உடலுக்கு கீழ் உள்ளதா எனப் பார்த்தாள். அதைக் காணவில்லை. மரணத்திற்கான காரணமாக அந்த துணிப்பை இருக்குமோ என்ற சந்தேகம் அவளுக்குள் வலுத்தது. அதைச் அங்கிருப்பவர்களுக்கு சொன்னால் "உனக்கு எப்படித் தெரியும்?" "எவ்வளவு இருந்தது...?" "எப்ப... பாத்தனி?" என்று கேள்விகள் கேட்டு தன்மீது கொலைக்குற்றம் திரும்பக்கூடும் எனப் பயந்தாள். ஊரவர்களிடம் காவல் துறையினர் விசாரணையை செய்ய ஆரம்பித்தனர். சாந்தாவின் முறை வந்தது.

"அக்கா செத்தவரை தெரியுமே?"

"ஓம்"

"என்னெண்டு?"

"வேலைக்கு வாறவர்...."

"வேறை ஏதும் தெரியுமே?"

"இல்லை ஒண்டும் தெரியாது"

விலகிச் சென்ற காவல் அதிகாரி கனகரிடம் விசாரணை செய்கின்ற போது நெருங்கிச் சென்று காதைக் கொடுத்தாள்.

"என்ன வேலை செய்யிறியள்"

"கடை வைச்சிருக்கிறன்"

"சுக்குட்டியை உங்களுக்கு எப்படி தெரியும்"

"எல்லாரையும் போல எனக்கு வேலை செய்யிறவன்"

"ஏதும் கொலையிலை சந்தேகமிருந்தால் இல்லை ஆரிலையும் சந்தேகமிருந்தால் சொல்லுங்கோ"

"இல்லை"

அவசரமாக மறுத்து அந்த இடத்தை விட்டு விலகினான். அங்கு நிற்பதற்குப் பயந்தவனாக கிராமத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தான். சாந்தாவிற்கு, அவன் பின்னே ஓடிப்போய் "நீ எப்படி கடை போட்டனி?" எண்டு சொல்ல வேண்டும் போலிருந்தது. சுக்குட்டியின் உடலை திரும்பிப் பார்த்தாள். முன் நீட்டியிருந்த கைகள் சாந்தாவிடம் சத்தியம் கேட்பது போலிருந்தது. அவளது சிந்தனை கனகர் உண்மையை சொல்லாது விட்டாலும் அந்த இடத்தில் நின்றிருக்க வேண்டும் என்றது.. தன்னை மறந்து அழுதுவிட்டாள். கூடியிருந்தவர்கள் அவளைத் திரும்பிப் பார்க்க கிராமசேவையாளர் அருகே வந்தார்.

"ஏதும் தெரிஞ்சால் சொல்லுங்கம்மா"

"இல்லை ஒண்டுமில்லை"

அவசரமாக மறுத்து, கூட்டத்தின் பின்னால் ஒதுங்கினாள். ஊரவர்கள் தங்கள் உறவுக்காரப் பெண் கொலைக்குற்றத்திற்கு தேவையில்லாமல் அகப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக,

"இல்லை அந்தப்பிள்ளைக்கு என்னத்தை தெரிய, அது பயந்த பிள்ளை பயத்திலை அழுகுது." என்று அவசரமாக பதிலளித்தனர்.

சாந்தா எல்லா உண்மைகளையும் சுமந்தவளாக நடுங்கி நின்றாள். தலை சுற்றுவது போலிருக்க சற்றுத் தள்ளி ஆலமரத்தின் கீழ் நாலைந்து பக்கத்து தெருப் பெண்கள் அமர்ந்திருப்பது தெரிய, அங்கு சென்று அவர்கள் அருகே அமர்ந்தாள்.

"சாந்தா நாங்க தான் சுக்கட்டியை முதலிலை பார்த்தனாங்கள் தெரியுமே"

என நடந்தவற்றை விபரித்தனர். மடத்துக்கு பக்கத்திலிருக்கும் வயலில் வேலை செய்வதற்காக அதிகாலை இங்கு வந்துள்ளனர். வழமையாக அந்த நேரத்தில் சுக்குட்டி நகரத்துக்கு போய்விடுவான். இன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகாது படுத்திருப்பதைப் பார்த்துவிட்டு வயல் வேலைக்கு உதவும்படி கேட்பதற்காக அருகில் போயிருக்கிறார்கள். அங்கு அவன் இறந்து கிடப்பதை உணர்ந்து பக்கத்திலிருந்த வயல்களில் நின்ற ஆண்களைக் கூப்பிட்டு செய்தி சொல்லி இருக்கிறார்கள். அவர்களது பேச்சில் சுக்குட்டியின் மரணத்திற்காக கவலைப்படுவதை விடுத்து இறந்த உடலை முதன்முதலாக தாம் பார்த்த பெருமிதமே இருந்தது. சாந்தாவிற்கு அது எரிச்சலைக் கொடுத்தது.

ஆலமரத்தில் தொங்கிக் கொண்டிருந்த வெளவால்கள் அதிக மனிதர்களின் நடமாட்டத்தை உணர்ந்தால் போலும் விசித்திரமாக கத்துவதாக சாந்தாவிற்கு தோன்றியது. கூடியிருந்த பெண்கள் கால்களுக்கிடையில் ஓடிக்கொண்டிருந்த ஆலமர வேர்களை சிறு குச்சியினால் கீறிக்கொண்டு, சுக்குட்டியின் தாயாருக்கு நிகழ்ந்த கொடுமைகளை கூட இருந்து பார்த்தவர்கள் போல் ஆளுக்கொன்றாக விபரித்தனர். சாந்தா அதை கேட்பதற்கு விருப்பமற்று வெளவால்களை எண்ண ஆரம்பித்தாள். அதில் ஒரு வெளவால் மட்டும் பெரியதாக இருப்பது போலிருக்க அதைக் கூர்ந்து அவதானித்தாள். அது வெளவால் அல்ல பின்புறத்து மண்ணைத் தட்டியபடி எழுந்தாள். அந்தக் கிளையின் கீழ் போய்நின்று அண்ணார்ந்து பார்த்தாள். அது சுக்குட்டியின் பணமிருந்த அழுக்குத் துணி. இது இவ்வளவு தூரத்தில் ஒருவர் வீசியெறிந்தால் மாத்திரமே அந்த இடத்தில் கொழுவுப்பட்டிருக்கும்.

பணத்திற்காகவே சுக்குட்டி கொலை செய்யப்பட்டுள்ளான் என சாந்தா முடிவு செய்தாள். பக்கத்திலிருந்த பெண்களை திரும்பிப் பார்த்தாள் அவர்கள் இவளைப் பார்த்தனர். சாந்தா சுட்டு விரலால் மேலே காட்டினாள். மேலே பார்த்தபடி அவளருகே வந்தவர்கள், இவள் எதை சுட்டுகிறாள் என்பதை புரிய முடியாது தடுமாறினர்.

"சுக்குட்டியின்ர துணி மேலை கிடக்கு.."

சாந்தா சொல்லி முடிப்பதற்குள், மரண விசாரணை நடாத்திக் கொண்டிருந்தவர்களிடம் அதையும் தாங்களே முதலில் பார்த்ததாக ஓடிச் சென்று கூறினார்கள் இப்போது கூட்டம் ஆலமரத்தின் கீழ் நின்றது. ஆயினும் விசாரணையில் முக்கியத்துவம் பெறாத ஒன்றாக தொங்கியது அழுக்குத்துணி. அதன் முக்கியத்துவத்தை உணர்ந்தவளும் மௌனம் காத்தாள்.

பலமணி நேர விசாரணை நடக்க, கூட்டம் கலைய ஆரம்பித்தது. இறுதியில் விரல் விட்டு எண்ணக் கூடிய அளவிற்கு ஆட்கள் தொகை குறைந்தது. சாந்தாவும் முதல் கண்ட சாட்சிகளோடு கூடக் காத்திருந்தாள். "அங்கே அம்புலன்ஸ் ஒண்டு வருகுது" என்ற செய்தியோடு அங்கு நோயாளர் காவு வண்டியொண்டு வந்து நின்றது. அதில் சுக்குட்டியின் உடலை ஏற்றுவதற்காக மஞ்சள் நாடாக்களை விட்டு வெளியே தூக்கி வந்தனர். சாந்தாவின் அருகே உடல் வந்து கடந்தது. சுக்குட்டியின் முகத்தை இறுதியாக பார்த்தாள். அவனிடம் மனதார மன்னிப்பு கேட்டாள். சுக்குட்டியின் தாயின் மரணத்திற்கான காரணம் இன்று வரை தெரியாதது போலவே ஏழை யாசகனின் கொலைக்கான காரணமும் ஒருவருக்கும் தெரியாமலே நோயாளர் காவு வண்டி அவனது உடலை சுமந்து கிராமத்திலிருந்து புறப்பட்டது.

திடம்கொண்டு வாழ்ந்திடுவோம் தேம்பல் வேண்டா
தேம்புவதில் பயனில்லை, தேம்பித் தேம்பி
இடருற்று மடிந்தவர்கள் கோடி கோடி
எதற்குமினி யஞ்சாதீர் புவியில் உள்ளீர் ...
... ஆனாலும் புவியின்மிசை உயிர்கள் எல்லாம்
அநியாய மரணம் எய்தல் கொடுமை அன்றோ?
தேனான உயிரைவிட்டுச் சாகலாமோ?

பாரதியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமியின் அசைவுக்கு அவசியமானவள் பெண்...

காந்தரூபன் கேமலாரூபினி, மல்லாகம்

உலகின் இயக்கத்திற்கு சக்தியை அளிக்கும் சர்வ வல்லமை படைத்தவள் பெண். இன்று உலக மெங்கும் வருடந்தோறும் அனேக இடங்களில் பங்குனி 08ம் திகதி மகளிர் தினம் கொண்டாடப்படுகின்றது. ஆனால் அன்று ஒரு நாள் மட்டும் பெண்களையும் அவர்களின் ஆற்றல்களையும் பெருமைப்படுத்துவதிலும் நினைவு கூருவதிலும் மட்டும் நின்றுவிடாது ஒவ்வொரு விடயத்திலும் பெண்களின் ஆற்றல், பணிவு, திறமை, துணிவு, சகிப்புத்தன்மை, விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு போன்ற நற்குணவியல்புகளை அறிந்து கொள்வதில் அசண்டையீனம் செய்வது தான் வியப்பாக இருக்கின்றது.

கல்வித்துறை மட்டுமன்றி சகல துறைகளிலும் துணிச்சலுடன் செயற்பட்டு சாதனை படைக்க கூடிய சிறப்பான பெண்கள் எம் கண்முன்னே உலாவிக் கொண்டிருக்கிறார்கள் என்பது யாவரும் அறிந்ததே. பொதுவாகவே ஒரு விடயத்தை அடைந்து கொள்ள வேண்டும் என்பதற்காக எந்தளவான எல்லைக்கும் போகுமளவிற்கான மன வலிமை அதிகம் படைத்தவர்கள் பெண்கள். இக் குணம் பெண்களுக்கே உரித்தானதொரு சிறப்பியல்பாகும். முற்காலங்களில் கடவுளுக்கு நிகராக பெண்கள் மதிக்கப்பட்டுள்ளார்கள். ஏனெனில் உலகிற்கு உயிரினை படைத்து மனித இனத்தை உருவாக்குபவள். பாடல்கள் காவியங்களில் உள்ள எழுத்துக்களுக்கு உயிர் கொடுத்த பெருமை என்றும் பெண்மையையே சாரும்.

ஒவ்வொரு நாட்டிலுமுள்ள சகல அமைப்புக்களும் இன்று பெண்களின் முன்னேற்றத்தில் மிகப் பெரிய ஆதரவு வழங்கிக்கொண்டிருப்பதே பாரிய தொரு முன்னேற்றமாகும். இதற்கு எடுத்துக் காட்டே எமது நாட்டில் இன்று அரசியலில் பெண்களின் பங்கு.

பெண்களின் வளர்ச்சிப்பாதையில் இன்று பெண்களை விட ஆண்களே ஆர்வம் காட்டுகின்றார்கள். பெண்கள் ஆகிய நாம் அதிகம் வெட்கப்பட வேண்டிதொரு காரணம் உண்டெனில் பெண்களின் முன்னேற்றத்தில் பெண்களே தடைக் கற்களாக இருப்பது தான். அவ்வாறில்லாமல் ஒரு பெண் ஒரு விடயத்தில் சாதிக்க முற்படுகின்றாள் அல்லது போராடுகின்றாள் என்றால் எவ்வளவு கூடியளவிற்கு ஆதரவளித்து ஊக்கப்படுத்தும் ஆற்றலுடைய மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும். ஏனெனில் ஒரு நாட்டையே முழுதாக ஆளக் கூடிய வல்லமை படைத்தவர்களாக பெண்கள் இருக்கின்றார்கள் என்பதை மறந்து விடாதீர்கள்.

உலகளாவிய ரீதியில் பெண்களின் முக்கியத்துவம் தொடர்பாக சமூக ஆர்வலர்கள் பலர் தினந் தோறும் பத்திரிகைகள் வாயிலாகவும் சஞ்சிகைகள் வாயிலாகவும் பல கருத்துக்கள் வெளியிட்டவண்ணமுள்ளார்கள். எனினும் பெண்களுக்கெதிராக நடக்கும் வன்செயல்களுக்கும் குறைவில்லை. இதில் கேள்விக்குரியதொரு விடயம் என்னவெனில் பெண்களிடமிருந்து உயிருருவாக பெற்றவர்களே பெண்களை இன்னல்களுக்கு உள்ளாக்குவது கவலைக்கிடமான தொன்றாகும்.

சமூக செயற்பாடுகள் மட்டுமன்றி பெண்கள் குடும்பத்திலும் மிக முக்கிய பங்கு வகிக்கின்றாள் என்றால் நிகரில்லை. சமுதாயத்தில் குடும்பம் மிகப்பெரியதொரு அலகாகும் குடும்பத்தை சரியாக நிர்வாகம் செய்து எல்லோரையும் அன்பால் அனுசரித்து பிள்ளைகளுக்கு கல்விவழி காட்டி நல்வழிப்படுத்துவதில் ஈடு இணையற்று விளங்குகின்றார்கள். இன்று உலகிலுள்ள அனைத்து துறைகளிலும் பெண்ணால் தடம்பதித்து முன்னேறுவதற்கு மிக முக்கிய காரணமே மனத் தைரியமும் அதிக விடாமுயற்சியுமாகும். ஏனெனில் பெண் சாதனையாளராவது சாதாரணமானதொரு விடயமல்ல. பல தடைக்கற்களை தாண்டியே இலக்கை அடைகின்றாள் நடை முறை சம்பவங்களில் கண்ட உண்மை.

பெண்களைப் போகப்பொருளாக மட்டும் நோக்குவதனாலே அதிக வன்முறைகள் தினமும் இடம் பெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்நிலையானது சமூக மட்டத்தில் மாற வேண்டியதொன்றாகும். வாழ்க்கையில் சாதிக்க துடிக்கும் பல பெண்கள் கூட கொடுமைகளின் காரணமாகவே மூலைகளில் முடங்கிக் கிடக்கின்றார்கள். பெண் நினைத்தால் எதனையும் அடைய முடியும். இதனை இன்று சில தாழ்வு மனப்பாங்கு உள்ளவர்களே புரிந்து கொள்ள தவறுகின்றார்கள்.

சமுதாயத்தில் தினந்தோறும் இடம்பெறும் வன்செயல்களில் அதிகம் பாதிப்புக்குள்ளாவது பெண்களும் சிறுபெண்பிள்ளைகளுமே. ஏனென்று சிந்திக்கத்தான் யாரும் இல்லை. உலகத்தை உருவாக்கும் இக்கோதைகளுக்கு இன்று கூட தீர்வில்லை. காலங்கள் எவ்வளவு மாறினாலும் பெண்களுக்கு எதிராக இடம் பெறும் வன்செயல்களுக்கு மட்டும் எவ்விதமான மாற்றமும் இல்லை. அண்மைக் காலங்களில் இடம்பெறும் சம்பவங்களை நினைக்கும் போது உயிர் துடிக்கின்றது.

கால மாற்றத்திற்கேற்ப தனது செயற்பாடுகள் அனைத்தையும் முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்வதற்காக காலத்தோடு சேர்ந்து ஓடத்தொடங்கியுள்ள பெண்களுக்கு என்றென்றும் உறுதுணையாக நிற்பதே எமது பாரிய பங்களிப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நலிவு

விரிந்ததொரு வளவிருக்கும், நடுவில் நாற்சார்
வீடிருக்கும், முற்றம் முன் பரந்தி ருக்கும்,
சிறுதோட்டம் வாழை, தென்னை பூச்செ டிகள்
தினம் சிரிக்கும் நாம் முயல, கிணறு முன்னே
திறந்திருக்கும், கப்பி துலா தனில் நீர் அள்ளித்
திடம் திரளத் தோளிருக்கும், கக்கூஸ் கொல்லைப்
புறக் கோடி தனிலிருக்கும், நடந்து...குந்திப்
போய் வரவே நோய் நொடிகள் பறந்தி ருக்கும்!

அடிவளவைத் தினம் கூட்டல், ஆட்டுக் கல்லு
அம்மி தனில் திரித்தரைத்தல், உரலில் மாவை
இடித்திடுதல், தோட்டவேலை தனில்மெய் வேர்த்தல்,
இறைத்திடுதல், களை பிடுங்கல், மெழுகுந் திண்ணை
படுத்தெழுதல், பொடிநடையாய் திரிதல், ஓய்ந்து
படர்ந்து முற்ற மண் படியக் களைப்பு ஆற்றல்,
கிடுகு பின்னல், வீட்டு வேலை புரிதல் என்று
கிளர்ந்து....உடல் இரும்பாகி நிமிர்ந்து நிற்கும்!

இன்று ஒரு அறை வீடாய்... மண்ணைக் காணா
இரண்டு அடி முற்றமதில்...தொட்டிக் குள் பூக்-
கன்று நட்டு...குசினி கக்கூஸ் அருகே வைத்து,
களைக்காமல் உண்டு அமர்ந் திருந்து ஊற்றுத்
தண்ணிக்குக் குழாய் திறந்து, வேர்க்கும் என்று
ஜன்னல்கள் சாத்திக் குளிரூட்டி விட்டு
திண்மையில்லா உடல் நலிந்து நோயில் வீழ
சிறக்கிறதாம் நாகரீக நவீன வாழ்வு!

த. ஜெயசீலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலைச்சுழி

க. சிவகரன்



"வேட்டியுடன் தான் கோயிலுக்குப் போறியளோ" மங்களம் கேட்டது வாத்தியாருக்கும் கேட்டது. கேட்டும் கேளாதவர் போல வெளிக்கிட்டார். மங்களம் வேறுயாரு மல்ல. அவர் மனைவிதான். மனைவிமட்டு மல்ல. மூன்று பிள்ளைகளின்தாய். ஊரில் பரம்பரையாய் வாழும் பழங்குடியில் வந்தவள். வாத்தியாருக்குச் சீதனமாய்க் கொடுத்த நாலு பரப்பு வளவின் கல்வீட்டின் சொந்தக்காரி. அதைவிடப் பத்துப் பரப்புத் தோட்டமும் அவளின் சீதனம்தான். மங்களம் அப்படி இப்படிக் கதைப்பதெல்லாம் வாத்தியாருக்குப் பழகிப்போனவிடயம். ஆனாலும் ஒரு முறை இடுப்பைத் தடவிக்கொண்டார். வேட்டி அரையிற்தான் கிடக்கின்றது. மங்களம் கேட்டது பெரிய மானப்பிரச்சனையாய் அவருக்குப்படவில்லை. ஆனாலும் அதில் மங்களத்தின் மானமும் ஒட்டிக்கொண்டிருப்பதுதான் அவருக்குச் சங்கடமாகப்பட்டது.

கோவிலின் ஒலிபெருக்கிகள் ஓயாது கத்திக் கொண்டிருந்தன. அவைமட்டும் போதாது என்று கும்கும் என அடிக்கும் பெட்டிகளும் இடித்துக்கொண்டிருந்தன. கடந்தமாதம் நடந்தது இதுதான். வருடாந்தத் திருவிழாவின் முன்னேற்பாட்டுக் கூட்டம் கோயில் மண்டபத்தில் நடைபெற்றது. வாத்தியார் நிருவாக சபையில் ஒரு உறுப்பினர் அவர் பேசாமல் இருந்திருக்கலாம் அவர் பேசப்போய்த்தான் இன்று வேட்டியைத் தடவிப்பார்க்க வேண்டியிருக்கின்றது.

கூட்டத்தில் ஒன்றும் வாத்தியார் காரசாரமாகப்பேசவில்லை. அமைதியாய்த் தான் பேசினார். முதலில் அவர் பேசியது ஒலிபெருக்கி பற்றித்தான். ஆலயத்திற்கு வெளியே நாலுசந்தியிலும் ஏன் உதைக்கட்டுறியள். அதுவும் சோடி சோடியாக. எண்ணிப்பார்த்தால் மொத்தம் பன்னிரண்டு "கோன்கள்" யாருக்குத் தேவையிந்தச் சத்தம். அதுகிடக்கட்டும் அடுத்த விடயம் என்று செயலாளர் பெடியன் மடக்கென்று திருப்பினான். ஒருநாளைக்குப் பத்தாயிரம் தான் "லைட்" செலவு. "ஸ்பீக்கரும்" அதற்குள் தான். ஏன் இத்தனை "லைற்று" மின்குமிழ்கள் எண்ணிக்கைக்கு ஆட்கள் எண்ணிக்கை குறைவுதானே. வாத்தியார் கேட்டுவிட்டார். இருமல்கள் சருமல்களும், உறுமல்களும் கேட்கத் தொடங்கின. வாத்தியார் அமைதியானார். "கோயில் மேளத்துடன் ஒரு கூட்டம் மேலதிக மேளதாளம். விஷேட சாத்துப்படி வழமைபோல் பகல் அன்னதானம். இரவு திருவிழாக்காரர் விரும்பினால் இட்டலி, தோசை அவரவர் விருப்பம். எல்லா மொத்தச் செலவும் மட்டமாய் ஒரு லச்சம் காசைக் கட்டிப்பற்றுச்சீட்டைப் பெறவும் உபயகாரர் எல்லாம் சரிதானே. பொருளாளர் அவசரப்பட்டார். "என்ன வாத்தியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்கேதும் பிரச்சனையெண்டால் சொல்லுங்கோ" செயலாளர் வாத்தியாரைக் கேட்டான். "தம்பி செலவு கூடிப்போச்சு.." என்று வாத்தியார் இழுக்கவும் கூட்டத்தில் சல சலப்பு ஏற்பட்டது. "அப்ப வாத்தியார் கஷ்ட மெண்டா விடட்டும் வேற பகுதி யொண்டும் கேட்குது கொடுப்பம்" என்று கூட்டத்தில் ஒரு குரல் கேட்டது. வாத்தியார் என்ன நினைத்தாரோ சட்டென்று சரியெண் டார். கூட்டமும் கலைந்தது.

இன்றுதான் நான்காம் திருவிழா. அதுதான் வாத்தியாரிடம் பறிபோன திருவிழா. வாத்தி யார் மங்களம் கேட்டதுபோல் வேட்டியுடன் தான் போறார். அவர் கட்டியிருப்பது சாதா ரண வேட்டிதான். வெள்ளைக்குப் போகாத அயன் பெட்டி காணாத நூல் வேட்டி. அவருடைய கறுப்புடலில் பளிச்சென்று மின் னியது தோட்டத்திற்பாடுபட்ட தேகத்தில் வேட்டி பாசமுடன் ஒட்டிக் கொண்டிருந்தது. ஐம்பது கடந்து அறுபது நெருங்குகின்றது என்பதை நெஞ்சில் இருந்த வெள்ளை மயிர் கள் வெளிக்காட்டின. அவர் பள்ளிக்கூடம் போகும்பொழுது நீளக்காற் சட்டை சேட்டு டன்தான் போவார். ஆனால் இன்றும் துவிச் சக்கரவண்டியிற் பாடசாலை போகின்ற ஒரே யொரு அதிசயப்பிறவி இவர்தான்.

வாத்தியார் பல்கலைக்கழகம் சென்று தமிழ் பாடத்திற் சிறப்புப்பட்டம் பெற்றவர். அதைவிடப் பண்டிதர்பரீட்சையிலும் சித்திய டைந்த பண்டிதர். ஆனால், அவர் ஒரு போதும் தன்னைப் பண்டிதர் என்று பெருமை கூறியது கிடையாது. யாழ்ப்பாணத் தில் இருந்த பல பண்டித வித்தகர்களிடம் பாடம் படித்தவர். அவர்களிடம் காணப்பட்ட எளிமையும் அடக்கமும் ஆராயும் பண்பும் வாத்தியாரிடம் இருந்தன. ஆனால் பள் ளிக்கூடத்தில் வாத்தியாருக்கு அவ்வளவு மதிப்புக் கிடையாது. புதிய தலைமுறை ஆசிரியர்களிடையே அவர் பெரிதும் புறக்க ணிக்கப்பட்டார். அதிபர் அவர் வரும் நேரத்தை வைத்து இன்னும் பெஞ்சனுக்கு எத்தனைநாள் கிடக்குது என அடிக்கடி கேட் டுக்கொள்வார். வாத்தியார் தோட்டத்தை குத்தகைக்குக் கொடுத்துவிட்டு நேரத்திற்குப் பள்ளிக்கூடம் போகும்படி பலமுறை அயல் தோட்டக்காரர்களினால் கேட்கப்பட்டவர். ஆனாலும் அவர் காலத்தைப் பிடிக்கமுடியும் என்ற நம்பிக்கையில் ஓடிக்கொண்டேயிருக் கின்றார். அநேகமாக பிந்தித்தான் போவார். அவரிடம் என்னதான் பெரிய அறிவுப் பொக்கிசம் இருந்தாலும் அவரிடம் கற்கும் மாணவர் பரீட்சைகளில் வெற்றி பெற்றாலும் எழுத்துமூல சாட்சியங்களை அவர் அதிகம் பேணாதவிடயம் அதிகாரிகளிடம் அவரை யோர் தவறான பேர்வழியாக காட்டிக் கொடுக்கப் போதுமானதாக இருந்தது. இவர் காலத்திற்கு ஒவ்வாத ஒருவராய் பாடசாலை யிலும் கணிக்கப்பட்டார். இப்போ ஊரிலும்.

கோயில் விளக்குகள் திடீரென நின்றன. மின்சாரம் இல்லை. ஒலிபெருக்கிகள் ஓய்ந் தன. மூலையிற்கிடந்த பெரிய இயந்திரம் இரையத்தொடங்கியது. மீண்டும் ஒலிபெருக் கிகள் உயிர்பெற்றுவிட்டன. தூரத்தே கேட்ட சிறிய கோயில்களின் சத்தங்கள் ஓய்ந்து போய் விட்டன. இருட்டில் நின்ற கறுப்புரு வம் மின்னொளியில் கால்பதித்து நடக்கின் றது. ஆம் வாத்தியார் முதலாவது ஒலிபெருக் கிக் கடவையைத்தாண்டி சென்றுகொண்டிருக் கின்றார்.

கோயில் நெருங்க நெருங்க மங்களம் கேட்டது வாத்தியாருக்குச் சங்கடமாய்த்தான் பட்டது. கடந்த மூன்று நாட்களும் வந்து போனார். இன்று கொஞ்சம் மனம் கூடுத லாகத்தான் சங்கடப்பட்டது.

கடந்த ஒருமாதமாக வாத்தியார் மங்களம் உறவு சரியாக இல்லை. மாமரத்துடன்தான் பிரச்சினை ஆரம்பமானது. வீட்டு வளவில் ஒரு பெரிய மாமரம். இந்த முறை நல்ல காய். கறுத்தகொழும்பான் என்றால் யாழ்ப் பாணத்தில் நல்ல கேள்வியான மாம்பழம் தான். மாமரமும் மற்றவர் கண்ணிற்படும் படியாய் ஒழுங்கையோரம் நின்றது. ஒருவன் வந்து மரமாக விலைகேட்டான். மங்களம் பேசி முடிப்பதற்குள் வாத்தியார் குழம்பி விட்டார். "நீங்கள் கொண்டுபோய் மருந் தடிச்சு ஊரையே நாசங்கட்டப் போறியள். நான் தரமாட்டன்" எனக்கூறி விட்டார். மங்களம் ஏதோ தர்ம நியாயம் புரிந்தவள் போல் பேசாமல் விட்டாலும் வாத்தியாரின் செயற்பாடு அவளிற்குப் பிடிக்கவில்லை. ஆட்பிடித்து அதைப்பிடுங்கி அழுகவத்து மிச்சத்தைச் சந்தையிலே கொண்டுபோய் விற்க முடியாது வீட்டை கொண்டுவந்த பொழுது மங்களம் முன் தான் காலத்திற்கு ஒவ்வாத பேர்வழி என்பதை வாத்தியார் நிரூபித்துக்காட்டி விட்டார். வாத்தியாருக்குப் பதிலடி கொடுப்பது போல் மங்களம் பலா மரத்தை அப்படியே விலைபேசி விற்றுவிட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாள். வாத்தியார் பள்ளிக்கூடத்தால் வரும் பொழுது பலாக் காய்கள் இறக்கப்பட்டுக் கொண்டிருந்தன. ஓடிப்போய் மரத்தடியிற் பார்த்தார். இரண்டு மூன்று காய்கள் மட்டும் கிடந்தன. "தம்பியவை, ஒரு இரண்டு காய் மரத்திற்கு விடுங்கோ. வாயில்லாச் சீவன்கள் வாழவேண் டும்" என்றார். "ஐயா, இப்பவே கூடக்காசு கொடுத்தாச்சு. இரண்டு காய் விடலாம் இரு நூறு தாங்கோ" என்றான் மரத்தில் நின்றவன். "நீ இறங்கு நான் தாறன்" என்றார். உச்சியிலே கிடந்த இரண்டு காய்களை விட்டுவிட்டு அவன் இறங்கினான். பேசியபடி சட்டைப் பையில் இருந்து சம்ப ளக்காசில் தன் வீட்டுப் பழத்திற்கே இருநூறு ரூபாய் கொடுத்து தருமம் காத்தார். மங்களம் அதை ஒன்றும் கண்டு கொள்ளவில்லை. வாத்தி யாரும் கணக்கு வழக்கு ஒன்றும் பேச வில்லை. மங்களம் தன் கட்டுப்பாட்டில் இல்லை என்பதை அவர் மனம் மட்டும் நம்ப மறுத்தது.

வழக்கம்போல், ஆலயத்தில், அவ்வளவு கூட்டம் இல்லை. வசந்தமண்டபப்பூசை நடக்கின்றது. கடந்த பல வருடங்களாக வாத்தியாரும் தேவாரம் பாடுவது வழக்கம். ஆனால் கடந்த வருடம் நடந்த சம்பவம் ஒன்று வாத்தியாரை மதவிரோதியாகக் கூட சிலராற் காட்டப்பட்டு விமர்சிக்கப்பட்டது. அது தமிழ் விடயம். அன்று வழமைபோல் வாத்தியார்தான் தேவாரம் பாட நின்றார். அன்று புதிதாக வந்த குருக்கள் "திராவிட வேதம் அருளிப்பாடுக" என்றார். வாத்தியார் பாடாமல் வெளியேறிப் போய்விட்டார். பின் ஒரு பெண்பிள்ளை ஓடிவந்து பாடியது. கேட்டதற்கு "தேவாரம் அருளி பாடுக" என்றுதானே கூறவேண்டும். அதுவென்ன திராவிடவேதம் என வாத்தியார் கேட்கவும் அதன்பின் அவரை பாடும்படி யாரும் கேட்பதுவும் இல்லாமற்போய்விட்டது. அந் தப் பழைய நினைவுகள் வாத்தியார் மனதில் பற்றியதோ என்னவோ உள்ளே போகாது வெளியே நின்று கொண்டார்.

மேளதாளத்துடன் சுவாமி வெளிவீதி வரு கின்றது. புதிய உபயகாரனைமட்டும் காண வில்லை. உபயகாரர் அற்றுத் திருவிழா நடக்கின்றதோ. வாத்தியார் மனம் சஞ்சலப் பட்டது. தான் பட்டும்படாமல் இருப்பதால் நிருவாகமே திருவிழாவைச் செய்கின்றது போல என எண்ணவும் தலைப்பட்டார். ஒருவன் இளம்பொடியன், 'இன்று சாப்பாடு உண்டு. எல்லோரும் சாப்பிட்டுவிட்டுப் போங்கோ' எனக்கூறிக்கொண்டு திரிந்தான். வாத்தியாருக்குக் கேட்கும்படி. செல்வத்திடம் பலமாகக்கூறிவிட்டுப் போனான். வாத்தியார் செல்வத்தைப் பார்த்தார்.

செல்வம் வாத்தியாரின் கையைப்பிடித்து இருட்டான இடத்திற்குக் கூட்டிச் சென்றான். "இன்றைய திருவிழாவை நீங்கள் விட்டுட்டி யள் என்று மட்டும் நினைக்காதையுங்கோ. உங்கட திருவிழாத்தான் மறைமுகமாய் நடக் கிறது. மங்களம் அக்காதான் ஏற்பாடு. உங்கடை மகளிற்குப் பேசி முடிக்கப்பட்ட கனடா மாப்பிள்ளைதான் நிர்வாக சபைக்குக் காசு போட்டவர். மாமாவுக்குத் தெரியக் கூடாது என்று சத்தியம் கூட வாங்கி விட்டார். உங்கடை மகளும் மங்களம் அக்காவும் விஷயத்தை அவரிடம் கூற அவரின் ஏற்பாட்டில் உபயகாரர் யார் என்று தெரியாமல் திருவிழா நடக்குது. நான் கூறியது என்று வீட்டிலை காட்ட வேண் டாம்" என்றான். புறோக்கர் காசும் இல்லா மற்போய்விடும் எனச் செல்வம் மன்றா டினான்.

கல்யாணப்புரோக்கர் செல்வம் கதையைப் போட்டுடைத்தவுடன் வாத்தியார் இருட்டில் நழுவி மின்னொளியைத்தாண்டி வேகமாக நடக்கலானார். மின்சாரம் தடைப்பட்டிருப்ப தால் ஆலயத்திற் கப்பாலே இருள் மண்டி யிட்டுக்கிடந்தது. மேலே மூடிய மரங்க ளிடை வீதிமட்டும் குகைபோல காட்சி யளித்தது. வாத்தியார் அக்குகைக்குள் கால் வைத்தார்.

அவர் கால்கள் வீதியிற்படாது மேலே மேலே எழுந்தன. அவரின் சிந்தனைகள் கருத்துகள் கால்களாகி வழி தேடினாலும் அக் குகையின் இருள் மலத்துள் நீந்தலா னார். வீதிக்கரையில் ஊரவர் கட்டிப்போட்ட 'உரப்பை' மூட்டைப்பற்கள் அவரைப் பார்த் துச் சிரித்தன. காலச்சுழி அவரைக் கால் கொள்ளவிடாது இழுத்துச் சுழட்டியது. அவர் வேட்டியுடன் அம்மணமாய்ச் சுழல்கின்றார். அவர் மருமகனின் செலவில் நடக்கும் திருவிழாவின் மேளச்சத்தம் மட்டும் கேட்டுக் கொண்டேயிருக்கின்றது.

உள்ளத்தின் உறுதியோடு கொள்ளும் நியாயமான ஆசை காலப்போக்கில் நிறைவேறாமல் போகாது.

லெனின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிகலியின் கவிதைகள்



## பக்தி

காவடி கரகம்
நட்டுவ மேளம்
கொட்டி முழங்க
ஆதி சங்கரன்
வீதியுலா வருகிறான்
பக்திப் பரவசம்
முத்திய மக்கள்
வடக்கு வீதிவந்து
எம்பெருமான்
கிழக்குவாசலில்
இருப்பிடம் செல்ல
இறங்கிய போது
ஆர்ப்பரித்து
அரோகராச் சொல்லி
ஆகாயம் நோக்கி
கைகள் உயர்ந்தன
கைகூப்பி
வணங்கவல்ல
கைத்தொலைபேசியில்
காட்சிப்படுத்த...

## பேரானி


நடந்து முடிந்த போரில்
இடிந்து நொருங்கிய
கோயில்களும்
தேவாலயங்களும்
பள்ளிக்கூடங்களும்
நூல் நிலையங்களும்
துரிதகதி நெடுஞ்சாலைகளும்
குளத்து நீரேரிகளும்
வயல் நிலங்களும்
வரப்புகளும்
புனர் நிர்மாணம் பெற்றன
ஆனால், உடைந்துபோன
உன் இதயமும், வாழ்வும்
புனர்வாழ்வு பெறவில்லை

## கோடையில் வந்த மாரி

நீர் நிலைகளில் நீட்டிய கதிரின்
கூர் முனைகளால் குடித்தநீரை
கார்முகில் காற்றில் கலைந்து
ஓர் இடம் குவிந்து, குளிர்ந்து
பேர்மழை பொழிந்து பேயானது...
ஊர்முடி ஊர்வலம் போய்
சேர் இடம் நிரம்பி சேராத மீதி
வேர்களுடன் பிடுங்கியது வேகமாய்
சீர் இழந்து சீண்டியது மானுடத்தை...
தேர்போல் உயர்ந்து நிற்கும் தேசத்தை
தார்மிகம் தான் தாகமும் பசியும் தீர்த்தது
ஈர் எதிர்முகங்களின் ஈனமற்ற
போர் முடிந்த பேரிழப்பிலும்
சார்பு நிலை மக்கள் சமாதானமாகவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்னோர் பூமியின் கடவுள்

அதிதன்

நீங்கள் கடவுளைப் பார்த்திருக்கிறீர்களா, அவருக்கு என்ன என்ன சக்திகள் எல்லாம் இருக்கிறது என அறிவீர்களா, அவரது கண்கள் எவ்வளவு தூரம் பார்க்க வல்லன, அவரது செவியின் துல்லியம் எவ்வளவு, அந்த மூக்குகள் சுவாசிக்கும் ஆற்றலையும் மோப்பத்திறனையும் கொண்டிருக்கின்றனவா?

அடுக்கடுக்காய் கடவுள் பற்றிக் கேள்விகள் கேட்பதால் நாத்திகம் பேசும் கட்டுரை என்று நினைத்துவிடாதீர்கள். இது கடவுள் பற்றிய ஒரு குட்டிக் கதை.

ஈரேழு பதினான்கு உலகங்களில் ஏதோ ஒரு உலகத்தின் கடவுளின் கதை. எந்த உலகம் என்று சரியாக நினைவில் இல்லை. கதை போகின்ற வழியில் ஞாபகம் வந்தாற் சொல்கிறேன். இப்போதைக்கு வேண்டுமானால் "பூமி" என்றே வைத்துக் கொள்வோம்.

பூமியின் கடவுள் பற்றி எண்ணிலடங்காக் கதைகள் இருக்கின்றன. அவர் எப்படிப்பட்டவர், எவ்வளவு சக்திவாய்ந்தவர், அவர் எப்படிக் கடவுளானார், கண் தெரியாமலே உலகை ரட்சிக்கும் அவரது வல்லமை, எனப் பல கதைகள்.

நீங்கள் நினைப்பது கேட்கிறது. ஆமாம், அந்தப் பூமியின் கடவுளுக்கு கண்கள் தெரியாது. எங்கள் பூமியில் இருக்கும் சர்வ வல்லமை கொண்ட கடவுள்மார் அங்கு இல்லை. என்ன செய்வது.

அந்தப் பூமியைக் காப்பாற்ற அவர் கண்களை நம்பியில்லை. அவரிடம் சிறந்த காதுகளும் மூக்குகளும் இருப்பதால் அவற்றாலேயே பூமியை அவர் நன்றாய் உணர்ந்துவிடுவார். அபாரமான கேட்டற்திறன் மக்கள் பேசுவதை மட்டுமல்ல மக்கள் மனதில் இருக்கும் அனைத்தையும் அறியப் போதும் என்பது அவரது வாதம். இறுதித் தீர்ப்பு நாளில் தீர்ப்பளிக்கும்போது எவரது உருவமும் தீர்ப்பை மாற்றக் கூடாது என்பதற்காகத்தான் அவரது பார்வைத்திறன் பறிக்கப்பட்டது.

அவரது கேட்கும் சக்திதான் இப்போது அவருக்கு எல்லாமே. அவருக்குப் பூமியைப் படைக்கும் சக்தி இருந்ததா என சரியாகத் தெரியாது. இந்தப் பூமியைக் கடவுளின் தந்தை படைக்கும்போது இவர் சிறு குழந்தையாக இருந்தார் என்றொரு பழைய கதையும் இருக்கிறது. எனினும் தந்தை பற்றிய விவரமான குறிப்புகள் எதுவும் பூமியில் இல்லை, எமக்குத் தெரிந்ததெல்லாம் பூமியை தற்போதிருக்கும் கடவுள் படைக்கவில்லை என்பதுதான். தந்தை இளைப்பாறிய பின்னர் எல்லாப் பொறுப்பும் அவரின் தலையில்தான். பாவம் கடவுள்...

தனது வேலைகளை இலகுவாக்க தனக்கென ஒரு துணையையும் தேடிக் கொண்டார். முதலில் மனைவி பின்னர் மகன்கள் எனக் குடும்பம் நீண்டு கொண்டே போனது. பதினேழாவதாக மகள் வந்து சேர்ந்ததுடன் கடவுளுக்கு பொறுப்புக்கள் முற்றாகக் குறைந்து போயின. ஒரே அறையில் இருந்து வேலையை முடிக்கக் கூடிய அளவுக்கு வேலைகள் குறைந்து போயின. கால் மேல் கால் போட்டு ஒய்யாரமாய் வேலை எதுவும் செய்யாமல் இருப்பதையே கடவுளும் விரும்பினார். பாவம் அவர் மட்டும் சோம்பேறியாய் இருக்கக்கூடாதா என்ன?

அறையிலேயே இருப்பார், எல்லா சத்தத்தையும் கேட்டு, ஒவ்வொன்றாக பரிசீலித்து, அவற்றை வேலைகளாகப் பிரித்து தன் குருட்டுப் பிள்ளைகளிடம் கொடுத்துவிட்டு உறங்கிவிடுவார்.

இறுதித் தீர்ப்பு நாளுக்கு பிள்ளைகளும் தயாராக வேண்டும் என பிள்ளைகளது பார்வைத் திறனும் பறிக்கப்பட்டதை, நான் மீளச் சொல்லத் தேவையில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோம்பலத்தனத்தில் பிள்ளைகளும் ஒன்றும் சளைத்தவர்களில்லை. தங்கள் வேலையை செய்ய ஆளுக்கு நூறு அடிமைகளை வைத்திருந்தார்கள் அவர்கள்.

தனது பதினேழாவது மகள் தானியிடம் மட்டும் அவர் வேலைகளை சொல்வதேயில்லை. அப்பா சொல்லிவிட்டார் என்பதற்காக மட்டுமே அவள் ஒரு வேலையை செய்துவிடமாட்டாள், ஆயிரம் கேள்வி கேட்பாள். கேள்விக்கு பதில் சொல்லும் சோம்பலிலேயே அவளுக்கு வேலை சொல்வதை விட்டு விட்டார்.

கடவுள் படைக்கும்போது அவளைப் பதில் களின் தேவதையாகத்தான் படைத்தார். பதில் சொல்கையில் கேள்விகளைக் கேட்டுக் கேட்டு கேள்வி களின் தேவதையாகவும் மாறிவிட்டாள். இப்போது அவள்தான் கேள்விகள் பதில்கள் இரண் டுக்கும் தேவதை.

ஒருமுறை கண்களைப் பற்றிக் கேட்டாள். "தந் தையே... கண்களின் பார்க்கும் சக்தியை இல்லா மல் செய்ததற்குப் பதிலாக, ஏன் தீர்ப்பு நேரத்தில் துணியால் கண்ணைக் கட்டியிருக்கக்கூடாது?"

அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லத் தொடங்கி, பின் அதில் இருந்து அவள் மீண்டும் கேள்வி யைக் கேட்க, அவரும் பதில் சொல்லிச் சொல்லி அந்தக் கேள்வி பதில் நேரம் நீண்டு கொண்டே போனது. பதில் சொல்லியே கடவுள் களைத்துப் போனார். அதில் இருந்து தேவையில் லாமல் மகளிடம் கதைப்பது இல்லை என்ற முடிவுக்கு வந்தார் கடவுள்.

கடவுளின் சோம்பல் பற்றி மக்களும் கொஞ் சம் அறிவார்கள். "நல்ல கடவுள்தான் ஆனால் கொஞ்சம் சோம்பேறி..." அடிக்கடி இப்படித்தான் மக்கள் புலம்பித் தீர்ப்பார்கள்.

அதிலும் இப்போது அடிக்கடி புலம்புகிறார் கள். உணவுத் தட்டுப்பாடுதான் அப்படிப் பேச வைக்கிறதுபோலும். எப்போதும் இருக்கும் பிரச் சினை தான் என்றபோது இந்தவருடம் கொஞ்சம் அதிகமாகவே பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

ஆனாலும் கடவுள் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார். இல்லை, கேட்டுக்கொள்வார் என்ற அசைக்கமுடியா நம்பிக்கையில் அவர்கள் அமைதி யாக இருக்கிறார்கள்.

எல்லோரும் அமைதியாக இருக்கிறார்களா எனக்கேட்டால், இல்லை எனத்தான் சொல்ல வேண்டும். அங்கேயும் ஒரு கேள்விக் கும்பல் இருக் கிறது. அவர்களுக்கும் கடவுளுக்கும் ஒத்தே வராது. அதில் பலர் கடவுள் இல்லை என்பார் கள். இன்னும் சிலர் கடவுள் இருக்கிறாரோ இல்லையோ அவர் எமக்குத் தேவையில்லை என்பார்கள்.

கடவுளுக்கும் அவர்களைப் பிடிக்கவே பிடிக் காது. என்னதான் நல்ல கடவுளாக இருந்தாலும் கொஞ்சம் திமிர் இருக்கத்தானே செய்யும். ஆனா லும் கடவுள் அவர்களை பெரிதாகக் கணக்கி லெடுப்பதில்லை.

"பிரச்சினை பெரிதாக இருக்கும்போது மக்கள் அவர்கள் பின்னால் போவார்கள். பிரச்சினை கொஞ்சம் சிறிதானாற்போது நான்தான் காப்பாற்றி னேன் என்று என்பின்னால் வந்துவிடுவார்கள். அதனால் கவலைப்படவும் தேவையில்லை, கணக்கில் எடுக்கவும் தேவையில்ல" கடவுள் பிள்ளைகளிடம் அடிக்கடி சொல்வார்.

அன்று ஒருநாள் தானியிடமும் இதையே சொல் லிக் கொண்டிருந்தார்.

“நீங்கள் பிரச்சினைகளை வேகமாகத் தீர்த்து விட்டால் மக்கள் அந்தப் பக்கம் போகவே மாட்டார்களே அப்பா... இந்த உணவுப் பிரச்சினையை எப்போது தீர்க்கப் போகிறீர்கள்?” தானி கேட்டாள்.

“நீ வளரும் பிள்ளை தானி. உனக்குத் தெரியாதது பல இருக்கின்றன. பிரச்சினைகளை அதன் பாட்டிலேயே விட்டுவிடவேண்டும், நாங்கள் தீர்வைக் கொடுக்கக்கூடாது.”

“ஏன் தந்தையே?”

“உலகம் தன்பாட்டிலேயே இயங்கும் அம்மா. அப்படித்தான் அது உருவாக்கப்பட்டிருக்கிறது."

“அப்படியானால், படைத்தலும் அழித்தலும் மட் டுமா இப்போது எங்கள் வேலை?”

“இல்லையில்லை... அதைக்கூட மனிதர்களே செய்துகொள்வார்கள்.”

“படைக்கும் சக்தியையும் அழிக்கும் சக்தி யையும் இப்போது நீங்கள் பயன்படுத்துவது இல்லையா?”

“அழிக்கும் சக்தி மட்டும்தான் இருக்கிறது மகளே, அதை எப்போதாவது பயன்படுத்துவது உண்டு.”

"அப்படியானால் மனிதர்களுக்கு நாம் தேவை யில்லைத்தானே?” தானி மெதுவாய் முணு முணுத்தாள்.

கூர்மையான காதுகள் கொண்டவரல்லவா அவருக்குக் கேட்டுவிட்டது. அவரது முகம் கறுக் கத் தொடங்கியது. ஆனால் அதைத்தான் தானி யால் பார்க்க முடியாதே. தொடந்து சில வசனங் களை உதிர்த்தாள் பின் எழுந்து போய்விட்டாள்.

இந்தக் கேள்விக் கும்பலும் பலவழிகளில் அவளைப் போலத்தான். ஆனால் அவர்களுக்கு கொஞ்சம் அதிகமாகவே பூமியின் பிரச்சினை பற்றியும் தெரியும், கண்களும் தெரியும். நாட்கள் போகப் போக கேள்விக் கும்பலின் பின்னால் மக்கள் கூட்டம் அதிகமாகச் சேர்கிறது. மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்விகளை எழுப்பி எழுப்பி கடவுளைப் பயமுறுத்தத் தொடங்குகிறார்கள்.

அவசர ஆலோசனைக்காக கூட்டத்தை கூட்டு கிறார் கடவுள். அதிலிருந்தே அவர் பயப்படத் தொடங்கிவிட்டார் என்று நீங்கள் புரிந்துகொள் ளலாம். அதே நேரத்தில் தந்தையிடம் இருந்தும் செய்தி வருகிறது.

"உன் கண்களைப்போலவே மூளையும் செய லிழந்து போய்விட்டதா? இப்போது உன்னையே அஞ்சவைக்கும் அளவுக்கு வந்து விட்டார்கள். இரும்புக் கரங்கொண்டு அந்தக் கும்பலை ஒடுக் கியிருந்தால் இப்போது உனக்கு இந்தப் பிரச்சினை வந்திருக்குமா? இப்போதும் சிக்கல் எதுவும் இல்லை அழிக்கும் சக்தியைப் பயன்படுத்து, அவர்களைக் கொன்று ஒரு பாடத்தைப் புகட்டு... கடவுளை அவர்கள் நம்பாததாற்தான் பிரச்சினை இன்னும் தீராமல் இருக்கிறது என்று உன் அடிமைகளை வைத்து மக்களுக்கு புத்தி புகட்டு. இப்படிக்கு அன்பு அப்பா." என்று செய்தியை சொல்லி முடித்தது காற்று.

அனைத்துப் பிள்ளைகளும் கடவுளின் அறைக்கு அழைக்கப்பட்டார்கள். பிள்ளைகளின் அடிமைக ளைக்கொண்டு ஒரு படையை உருவாக்கினார் கடவுள். பிள்ளைகளில் ஒருவரை தளபதியாகச் சொன்னார். ஒவ்வொரு பிள்ளையும் கண்முன் இருந்த பொறுப்பை கைமாற்றிவிட்டார்கள். மூத்தவன் இரண்டாமவன் மூன்றாமவன் என ஒவ்வொருவராய் மாறி தானியிடம் வந்து சேர்ந்தது பொறுப்பு.

தானி பேச முற்பட்டாள்.

"கேள்விகள் கேட்காதே... சொன்னதை செய்... இன்றிலிருந்து கேள்விகளை நான் தடை செய்கி றேன்." கோபத்தில் உறுமினார் கடவுள்.

பதில்களின் தேவதையும் தானே என்பதை உணர்த்த எண்ணினாள் தானி.

"உங்கள் பிரச்சினை தீர்க்கப்படும்."

"எந்தப் படையும் தேவையுமில்லை."

இரண்டே வசனங்களில் கடவுளின் கோபத்திற் கான பதிலையும் தன் தந்தையின் பயத்திற்கான பதிலையும் சொல்லிவிட்டு, கடவுளின் அறையில் இருந்து வெளியேறி வீட்டின் வாசலுக்கு வந்தாள் தானி.

இதுதான் அந்த வீட்டிலிருந்து வெளியேறப் போகும் முதற் சந்தர்ப்பம். தனக்கு உண்டான கோபத்தில் படைகளை உதறிவிட்டு வந்திருக் கிறாள். வாசலுக்கு வரும்போதுதான் தனக்கு பார்வை இல்லை என்பது ஞாபகம் வருகிறது. கண் தெரியாமல் என்ன செய்யப்போகிறோம் என்ற அச்சத்துடனே கதவருகே நின்றாள்.

அந்தவீட்டின் பிரதான கதவின் அருகிலே இப்போதுதான் முதன் முதலாய் வந்திருக்கிறாள். உண்மையில் கடவுளின் குடும்பத்தில் யாரும் அந்தக் கதவைத் தாண்டியதில்லை. இவள்தான் முதலாவது ஆள்.

கதவைத் திறந்தாள். கதவு திறக்கவில்லை. ஒரு சிறையின் கதவு போல இறுக்கமாக இருந்தது அந்தக் கதவு. இதையே காரணம் சொல்லி திரும்பிவிடுவோமா என எண்ணியவள் தனக்குத் தானே "இல்லை... கதவை உடை." எனச் சொல்லியவாறு கதவை முட்டுகிறாள்.

கதவு திறக்கிறது.

தன்னுடன் சேர்த்து தானியின் கண்களையும் திறந்து விடுகிறது கதவு. நட்சத்திர ஒளியும் மின்மினிகளின் ஒளியும் அவள் முன் விரிந்து படர்கின்றது.

தானி பார்வை அற்றவளில்லை. அந்தக் கண் ணிற்கு பார்வை புதிதாய் வரவில்லை. இத்தனை நாளும் அவை இருளையே பார்த்தவண்ணம் இருந்தன.

உறைந்துபோய் நிற்கிறாள் தானி. கேள்விகளின் தேவதைக்கு ஆயிரம் கேள்விகள் மனதில். முன் வைத்த கால்களை இரண்டு அடி பின்வைக் கிறாள். கதவை மீண்டும் மூடுகிறாள். இருள் அவளது கண்களை அப்பிக்கொள்கிறது.

மீண்டும் கதவைத் திறக்கிறாள். பதில்களின் தேவதையை கட்டி அணைக்க மின்மினிகள் பாய்ந்து வருகின்றன.

வெளியே வந்து கதவை மூடினாள். அமைதியாய் வாசற்படியில் அமர்ந்தாள். மனதில் தோன்றிய அத்தனை கேள்வியையும் ஒன்றன்பின் ஒன்றாய் மீள அசைபோட்டாள்.

எவ்வளவு காலம் அங்கேயே அமர்ந்திருந்தாள் என அவளுக்கே தெரியாது. சில இரவுகளும் பகல்களும் மாறியமை மட்டும் அவள் அறிவாள். பல கேள்விகளுக்கு பதில் தெரிந்தது. சில புதிர்களாய் மாறிப் போயின.

எல்லாக் கேள்விகளும் மறைந்து, "பசி எடுக்கிறதே என்ன செய்யலாம்?" என்ற கேள்வி மட்டுமே நினைவில் நின்றது. மக்களின் பசி தேவதையையும் தொற்றிக்கொண்டது.

ஊருக்குள் செல்லும் பாதையில் நடக்கத் தொடங்கினாள். காடுகள் மலைகள் தாண்டி உடைந்த கோட்டை ஒன்றிற்கு வந்து சேர்ந்தாள். அங்கே கூட்டம் ஒன்று நடந்து கொண்டிருந்தது. ஆண்கள் பெண்களாக பதினாறு பேர் கூடி யிருந்தனர்.

"எனக்குப் பசிக்கிறது." கூட்டத்தைக் தானியின் பக்கம் திரும்பவைத்தது அந்த வசனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யாருக்குத்தான் பசியில்லை." உடனே பதில் வந்தது.

"நான் சில நாட்களாக உண்ணவேயில்லை" தானியின் குரல் தளதளத்தது.

"இங்கு எல்லோரும் அப்படித்தான், கொஞ்சம் தண்ணீர் இருக்கிறது குடிக்கிறீர்களா?" தண்ணீர்க் குவளையோடு வந்தான் ஒருவன்.

தண்ணீர் அருந்தி மக்கள் வயிற்றை நிரப்பிய செய்தி கேட்டபோது, தானி அவற்றையெல்லாம் நம்பவேயில்லை. அடிவயிறை நீர் தொட்ட கணத்தில் அவளது கண்கள் கலங்கிப்போயின. அவள் இப்போது அதை நம்புகிறாள் என்பதற்கு அந்தக் கண்ணீர்தான் சாட்சி.

"கண்ணீர் பசியைப் போக்காது... கண்ணீரைத் துடை... எங்களோடு போருக்கு வா சகோதரி, ஊருக்கே உணவளிப்போம்... வருகிறாயா?" அந்தக் கூட்டத்தின் தலைவி கேட்டாள்.

"யாருக்கு எதிராய்ப் போர்?" கேள்விகளின் தேவைதயின் விடை தெரியாக் கேள்வியின் எண்ணிக்கை ஒன்றாக உயர்ந்தது.

"எங்கள் எஜமானுக்கு எதிராக." தூரத்தில் ஒரு கோட்டையைக் காட்டினான் ஒருவன்.

"அவர் என்ன செய்தார்?" தானி தொடர்ந்து கேட்டாள்.

"எல்லாம் அவர்தான் செய்தார். கடந்த வருடத்தைவிட அதிகமாய்த்தான் உழைத்தோம். அதிகமாய் விளைந்தது. ஆனால் பஞ்சம் வந்து விட்டதாம் அதிக நட்டமாம். விளைச்சலில் ஊருக்கு வரவேண்டிய பங்கு வரவில்லை." அமைதியாய் பதில் சொன்னாள் தலைவி.

"போர் வேண்டாம். வாருங்கள் போய்க் கேட்போம். இரக்கம் காட்டக்கூடும் அல்லவா?" தானியின் மென்மையான மனதின் வார்த்தைகள் உதிர்ந்தன.

சிரித்தான் ஒருவன். சிரித்தபடி தன் முதுகைத் திருப்பி வாள் கிழித்த காயத்தின் தளும்பினைக் காட்டிச் சொன்னான், "மரியாதையுடன் கேட்ட போது கிடைத்த கூலி. இரந்து பிச்சைக்காக போகவேண்டும் என்கிறாயா?"

நீண்ட நேரம் அமைதியாய் இருந்தாள் பதில்களின் தேவதை. அந்தப் பதினாறு பேரின் கண்களிலிலும் அவள் தனக்குத் தேவையான பதில்களைக் கண்டாள்.

"வாளா கோடரியா? எது இருக்கிறதோ அதையே தாருங்கள்" தானி எழுந்தாள்.

பதினேழாவது சகோதரியாக தானியையும் சேர்த்துக் கொண்டு போருக்கு போனார்கள். சகோதரர்கள் வாள்களைச் சுழற்றினார்கள். சகோதரகள் கோடரிகளை உயர்த்தினார்கள். சகோதரர்களது ஈட்டிகள் பாய்ந்தன. கோட்டைக் கதவு தகர்ந்தது, கோட்டையும் விழ்ந்தது, எஜமான் கைதியானார், தானியங்கள் நிரம்பிய களஞ்சிய சாலை மக்களுக்கு சொந்தமானது.

போர் முடிந்தது.

மூட்டை பிரித்து கொஞ்ச தானியத்தை எடுத்து உணவு சமைத்து, தானியை உணவருந்த அழைத்தார்கள் சகோதரர்கள்.

"உணவு வேண்டாம், பதிலாக கைதியை மட்டும் ஒப்படையுங்கள் தண்டனையை நான் வழங்கிக் கொள்கிறேன்." தானி தெளிவான ஒரு முடிவுடன் இருந்தாள்.

சகோதரியை அப்படியேயா பசியுடன் அனுப்பி வைப்பார்கள். கைதி, உணவு இரண்டும் தானியிடம் இப்போது.

தானி மீண்டும் வீட்டுக்கு வந்தாள். இந்த முறை கதவை மெதுவாக முட்டவில்லை. வாளால் தூள் தூளாக்கினாள். மின்மினிகள் கடவுளின் வீட்டுக் குள் படையெடுத்தன.

கடவுளின் அறைக்கதவும் கூட உடைக்கப் பட்டது. கடவுளின் அறையும் மின்மினிகளின் ஒளியால் நிறைந்தன.

"உங்களுக்கும் கண்கள் தெரியும் தந்தையே..." தண்டனைக்காக கைதியை இழுத்தபடி உள்ளே வந்தாள் தானி.

கடவுள் அறையைப் பார்த்தார். மின்மினிகளைப் பார்த்தார். தானியையும் கைதியையும் உற்றுப் பார்த்தவாறே எழுந்து வந்தார்.

"தந்தையே, என்னைப் படைத்தவரே... எதற்காக எனக்கு கண் தெரியாது என்று சொன்னீர்கள்? எதற்காக அப்படிப் பொய் சொன்னீர்கள்? பதில் சொல்லுங்கள் என் தந்தையே..." கைதியின் முன் மண்டியிட்டபடி கடவுள் தன் வாழ்நாளின் முதலாவது கேள்வியைக் கேட்டார்.

★★★

அந்த உலகத்தின் பெயர் இன்னமும் ஞாபகம் வரவில்லை. நீங்கள் அதைப் பூமி என்றே சொல்லிக் கொள்ளுங்கள். பிரச்சினை இல்லை.

மண்ணுக்குள் எவ்வுயிரும் தெய்வம் என்றால்
மனையாளுந் தெய்வமன்றோ? மதிகெட் டீரே
விண்ணுக்குப் பறப்பதுபோற் கதைகள் சொல்வீர்
விடுதலையென் பீர், கருணை வெள்ளம் என்பீர்
பெண்ணுக்கு விடுதலைநீர் இல்லை என்றால்
பின்னிந்த உலகினிலே வாழ்க்கை இல்லை.

பாரதியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குணம்

த. ஜெயசீலன்

வானிலே சிட்டாய் மகிழ்ந்தேறிப் போம்;
நூறு
கானம் இசைத்துக் கவிக்குயிலாய்ச் சுற்றிவரும்.
மீனாக ஆழ்கடலில் விளையாடும்.
வளை நண்டாய்
ஓடி உயிர்ப்பயத்தில்
ஒதுங்க இடம் தேடும்.
மாடாய்த் திமிறும்.
மந்தியாய்க் கிளைதாவும்.
வேடமிடும்...பச்சோந்தி போல நிறம்மாறும்.
சேற்றுள் எருமையாகித் திளைக்கும்.
குழிபறித்துக்
காத்திருக்கும் பன்றியாகும்.
காமவேகக் குதிரையாகும்.
காற்றும் கலங்கப் பிளிறும் காரியாகும்.
ஏய்க்கின்ற காகமாகும்.
ஏமாற்றிக் கிளிபோல
வாய்ப்பாடும் சொல்லிவிடும்.
பூனைபோல் வளைக்க நிற்கும்.
வண்ணத்தி போல் ஒளிரும்
உருமாறி மயிர்க்கொட்டி
என்றும் தொடச் சுணைக்கும்.
ஈசல் போல் ஏமாறும்.
பேய்க்கழுகாய் உயிரோடு கொத்த
எங்கோ வட்டமிடும்.
வீம்புநாயாய்ப் பிறரை விரட்டும்.
விசம்கக்கி
பாம்பாய் இரைபிடித்து
பசியாற அதைப்புசிக்கும்.
எட்ட இருந்து நாக் கெறிந்து
பசையில் உயிர்
ஒட்டச் சுவைக்கும்...ஓணான் தவளைகளாய்.
வெட்டுக் கிளி நுளம்பு ஈயாய்
பிறரு(வு)க்குக்
கஷ்டம் கொடுக்கும்.
கருத்தற்றுச் சிலவண்டாய்
திசைச் செவியைச் செவிடாக்கும்.
திமிங்கில வாய் திறந்தனைத்தும்
ஏப்பமிடப் பார்க்கும்.
யாரும் நிஜம் கண்டு
தொட்டாலோ அட்டையாய்ச் சுருளும்.
எதிரிவந்தால்
நத்தையாய் ஓட்டுள் நடுங்கியோயும்
கணவாயாய்
சட்டென்று மை கக்கித் தப்பியோடி
நரியாய்
வஞ்சகம் புரிந்து தாக்கும்.
இரக்கமின்றி...அப்பாவி
கெஞ்சவும் புலியாய் உயிர்கிழிக்கும்.
மேலாண்மை
கொண்டு சிங்கமாகிக் குரலடக்கும்!
நம் மனமோ....
மனிதனாக அன்றி
மற்ற விலங்குகளின்
குணத்தோடே கூடிய காலம்
உயிர் வாழும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இசையும் இளந்தளிரும்

அதீதன்

இசை இப்போதுதான் இயற்கையை ரசிக்கப் பழகிக்கொண்டிருந்தான். அவன் இன்னும் மழலை மாறாதவன். ஒரு பசுந்தளிர். மூன்றே வயது. அவன் பிறந்ததில் இருந்தே மரங்களுடனும் மலர்களுடனும் வளர்ந்தான். அவனது புருவங்களின் அருகே வைத்த கண்ணூற்று இலைகள் தொட்டு அவன் வருடும் செம்பருத்திப் பூ வரை, அவனைச் சுற்றி இயற்கை நிறைந்திருந்தது. வாடிய பூக்களை வருடி உயிர்கொடுப்பான். வளைந்து விழும் சிறு செடி நிமிரும்வரை அதை தாங்கிப் பிடித்து நிற்பான். இயற்கையின் வண்ணத்தில் சேர்ந்த புது வண்ணம் அவன்.

சூழ எது இருக்கிறதோ அதையே பார்த்துக் குழந்தைகள் வளர்வதாய்ச் சொல்வது எவ்வளவு உண்மை. இயற்கையைக் காதலிக்கும் மனிதர் சூழ அவன் வளர்ந்தான். இயற்கையை வெறும் வளமாகவும் ரசனைப் பண்டமாகவும் பார்க்கும் உலகில், அன்புக்காய் இயற்கை ஏங்குவதைக் காணும் கண்கள் அரிது. இசையின் கண்கள் அவ்வகையானவை.

அவன் பிறந்ததிலிருந்து அவனது பிஞ்சுக் கைகளைப்பிடித்து நட்ட மரங்கள் ஏராளம். நடக்கத் தொடங்கிய வயதிலேயே அவன் தன் பிஞ்சுக் கைகளால் ஒரு குட்டிக் கோப்பையில் தண்ணீரை எடுத்து குடுகுடுவென ஓடிப்போய் அந்தச் செடிகளுக்கு தண்ணீர் உற்றுவான். கொண்டுபோகும் தண்ணீரில் பாதி வழியிலேயே சிந்திவிடும். அவன் சிந்தும் தண்ணீரைக் குடிக்க நிலமும் காத்திருக்கும்.

ஒரு பூவைக் கூடக் பறிக்க அவன் விடமாட்டன். அருகில் அமர்ந்து மணிக்கணக்கில் கதைபேசுவான். இசை ஒரு அற்புதமான குழந்தை.

★★★

ஒரு காலைப் பொழுதில் கண்விழித்தவன், தாயைத் தேடி முற்றத்துக்கு வந்தான். தாயும் தந்தையும் முற்றத்தில் இருந்த வாங்கில் அட்டைகளைப் பரப்பி எதையோ எழுதிக் கொண்டிருந்தனர்.

"என்ன செய்றிங்க" என்றவாறே அருகில் வந்தான்.

தந்தை அவனைத் தூக்கி மடியில் வைத்தார். போராட்டத்துக்குப் பதாதைகள் எழுதுவதை அவனுக்கு எப்படி விளக்குவது என அவர்களுக்குத் தெரியவில்லை. போராட்டம் என்றால் என்னவென்றே விளக்க முடியாதளவு சிறுவனான இவனுக்கு நிலக்கரி அனல் மின்னிலையத்தை அவர்கள் எதிர்க்கப் போவதைச் சொல்லத் துளியும் வாய்ப்பு இல்லை.

இசை மீண்டும் கேட்டான், "என்ன செய்றிங்க?"

தாய்க்கு ஒரு யோசனை வந்தது. தயாரித்திருந்த ஒரு பதாகையைக் கையில் எடுத்தாள். அட்டையோடு பிணைத்திருந்த தடியை இறுக்கிப் பிடித்துப் பதாகையை உயர்த்தினாள். "இயற்கைக்காய்ப் போராடுவோம், இறுதிவரை போராடுவோம்" என்று கோஷமிடத் தொடங்கினாள். போராட்டம் என்றால் என்னவென விளக்கமுடியாத அவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுக்குப் போராட்டத்தை நடத்திக்காட்டினாள்.

அவளையும் பதாகையையும் மாறி மாறிப் பார்த்தான். பதாகையில் வரைந்திருந்த மரம் அவனது கண்களை ஈர்த்தது. தாயின் சொற்களின் கருத்தை விளங்க இயலாதவனுக்கு, அந்த மரம் மட்டும் விளங்கியது. மெதுவாகத் தந்தையின் மடியில் இருந்து இறங்கினான். குடுகுடுவென வீட்டின் பின்புறம் ஓடினான். வெட்டிப் போட்டிருந்த ஒரு நீண்ட மரவள்ளித் தடியுடன் ஓடிவந்தான். சிறிய இளந்தளிர்களுடன் இருந்த மரவள்ளித் தடியைத் தாயிடம் நீட்டினான். அவர்களுக்குப் புரியவில்லை.

"என்ன கண்ணா?" என்றாள் தாய்.

பதாகையில் ஒட்டியிருந்த தடியைக் காட்டினான். மீண்டும் தன் கையில் இருக்கும் தடியைக் காட்டினான். "இது பெருசு..." என்றான். இளந் தளிர்களைத் தாங்கியிருந்த அந்த மரவள்ளித் தடி அந்தப் பதாகைக்கு கோடி அர்த்தங்களைச் சேர்க்கவல்லது. ஆனால் அவனுக்கு அது எதுவுமே தெரியாது. இசையைப் பொறுத்தவரை பதாதையில் கூட, மரம் உயர்ந்துதான் நிற்க வேண்டும்.

தடியைத் தாயிடம் கொடுத்துவிட்டு மரங்களுடன் பேசச் சென்றுவிட்டது அந்த அற்புதம். இசை என்கிற இந்த இளந் தளிர் வெறுமனே இயற்கையை ரசிக்கப்போகும் ஒருவனாக வளரமாட்டான். அவனுக்குள் போராட்ட விருட்சம் இன்று துளிர்த்திருக்கிறது.

இந்தப் பிஞ்சுக் கைகளுக்காத்தானே இந்தப் போராட்டங்கள் எல்லாமே. "எல்லாக் காலத்திலும் பிஞ்சுகளின் கைகளில் மலர்கள் இருக்கவேண்டும்" என்று அடுத்த பதாகையை எழுதத் தொடங்கினார்கள் இசையைப் பெற்றவர்கள்.




**இலங்கையின் மூத்த எழுத்தாளர்**

**என். கே இரகுநாதன் அவர்களுக்கு அஞ்சலி**

இலங்கையின்; மூத்த எழுத்தாளர்களுள் ஒருவரும், சமூக மாற்றத்துக்கும், முன்னேற்றத்துக்குமான செயற்பாடுகளுக்கு தனது எழுத்துக்களால் பங்களித்தவருமான என்.கே. இரகுநாதன் தனது 89வது வயதில் கனடாவில் காலமானார். இவர் தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஆரம்பகால நடவடிக்கைகளில் தனது பங்களிப்பை ஆற்றியிருந்தார். அத்துடன் வடபகுதியில் நிகழ்ந்த தீண்டாமை ஒழிப்பு வெகுஜனப் போராட்ட காலத்தில் எழுந்த கலைவடிவங்களில் ஒன்றான காத்தான் கூத்து மெட்டில் அமைந்த 'கநதன் கருணை' நாடகத்திற்கான கருவை வழங்கி அப்போராட்டத்துக்கு தனது எழுத்துக்களால் வலுச் சேர்த்திருந்தார். அவரது மறைவுக்கு தேசிய கலை இலக்கியப் பேரவையும், தாயகமும் அஞ்சலியை செலுத்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாதவி உமாசுதசர்மா

# தோசைக் கல்லிலே நிலவு வார்ப்பவர்கள்!

இந்த அம்மாக்கள்
தோசைக்கல்லில்
நிலவு வார்ப்பவர்கள்.

அப்பா கட்டிய
வீடாய் இருந்தாலும்
அது எமக்கு
அம்மாவீடுதான்.

அடுப்படியே
அம்மாவின்
அலுவலகம்
அன்பு மட்டுமே
எதிர்பார்க்கும் சம்பளம்.

பிள்ளைகள்
வெளியூரில்
பணியிலிருக்கும்
ஒரு வீட்டில்,
பக்கத்து வீட்டுக் குழந்தைகள்
சாப்பிட்டுக்கொண்டு இருப்பார்கள்.

அப்பா வாசம்
வெயில் வாசம்
அம்மா வாசம்
நிலா வாசம்
எமது வீடுகளின்
சமையலறை எங்கும்
நிலா வாசம்.
எமக்குக்காய்ச்சல்
வந்தால்,
மருந்து தேவையில்லை!
அடிக்கடி வந்து
தொட்டுப் பார்க்கும்
அம்மாவின் கையே
போதுமானது!
பிள்ளைகள்
ஊரிலிருந்து
கொண்டுவரும்
பயணப்பையில்
இந்த அம்மாக்கள்
எதிர்பார்ப்பது,
இன்னும் கொஞ்சம்
அழுக்குத்துணிகள்!

மகனுக்கான
அப்பாவின்
கோபத்திற்கெல்லாம்
அம்மாவின்
முதுகுதான்
கிழக்கு!

இங்கே பலரது
அகராதியில்
வீடு என்ற
சொல்லுக்கு நேரே
அம்மா என்று
தான் உள்ளது!

புகைவண்டியில்
பிதுங்கி வழியும்
பெருங்கூட்டத்தில்
ஊர் போய்ச்சேர
ஒற்றைக்காலில்
நின்று கொண்டு
எட்டு மணிநேரம்
ஒருவன்
பயணிக்க முடிவதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றெழுத்துக் காரணம்,
அம்மா!

அம்மா தாயே!
என்று
முதன்முதலில்
பிச்சை கேட்டவன்
உளவியல் மேதைகளுக்கெல்லாம்
ஆசான்!

எந்தப் பொய்
சொல்லியும்
அம்மாக்களை
ஏமாற்றி விடமுடியும்!
"சாப்பிட்டு விட்டேன்"
என்ற
ஒரு பொய்யைத் தவிர!

வெளியூர் செல்லும்
பிள்ளைகளின்
பயணப்பைக்குள்
பிரியங்களைத்
திணித்து வைப்பவர்கள்
இந்த அம்மாக்கள்!

வீட்டுக்குள்,
அப்பாவும்
இருந்தாலும்
அம்மா! என்றுதான்
கதவைத் தட்டுகிறோம்.

அம்மாக்களைப்
பற்றி எழுதப்பட்ட
எல்லாக் கவிதைகளிலும்,
குறைந்த பட்சம்
இரண்டு கண்ணீர்த்துளிகள்
ஈரம் உலராமல்!

எங்கேனும்,
பொது இடங்களிலோ,
சுப நிகழ்ச்சிகளிலோ
நாம் சந்திக்கும்,
அம்மாக்கள்,
ஒன்றைச் சொல்லிக்கொண்டு
தத்தம் வீடுகள் நோக்கி
ஓடுகிறார்கள்.
அவர்கள் சொல்வது
இதுதான்
"என் பிள்ளை
பசி தாங்காது"



## கையளவு சாம்பல்தான்...

எந்தப்பறவை பறந்தாலும்
ஏற்கிறது வானம்,
எந்த சுரத்திலும் பிறக்கிறது
ஏழிசை கானம்
எந்தக் கைகள் யாசித்தாலும்
கொட்டுகிறது இயற்கை!
எந்த விழிகள் தொழுதாலும்
அன்பைத் தருகிறது மதங்கள்!
எந்த விரல்கள் பட்டாலும்
பூக்கள் சிரிக்கின்றன,
எவர் ஊற்றினாலும்- நீரை
உள்வாங்குகிறது வேர்கள்!
எந்தக் கண்களுக்கும்,
ஏழு நிறங்களைக் காட்டுகிறது
வானவில்!
எவர் கிழித்தாலும்
ஏழு நாட்களாய் உள்ளது
நாட்காட்டி!
எவர்நின்றாலும்,
நிழல் அளிக்கிறது மரம்!
எவர் வீழ்ந்தாலும்
தாங்குகிறது பூமி!

பிறகென்ன...
முடிவில் ஒரு கையளவு சாம்பல்,
சாம்பல் எதையும் ஏற்கிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனத்து இலக்கியப்போராளி லூசுன் படைப்புக்கள்

## பார்வையும் பதிவும்

மு.அநாதரட்சகன்



கடந்த நூற்றாண்டின் வரலாறு என்பது, ஆசியநாடுகளின் மக்களிடையே எழுந்த விடுதலைப்போராட்டத்தின் வரலாற்றுக்கூறுகளையும் வெளிப்படுத்தி நிற்கிறது. அவ்வகையில், இருபதாம் நூற்றாண்டின் வரலாற்றினை விடுதலைப்போராட்டங்களின் வரலாறு எனக் கூறின் அது மிகையல்ல.

இவ்விடுதலைக்கான எழுச்சியானது, மேற்குலகின் காலனித்துவ ஏகாதிபத்தியத்திற்கும், நிலவுடமை அமைப்புக்கும் எதிராகப் பல தளங்களில் வெளிப்பட்டது.

ரஷ்யாவில் இடம்பெற்ற 1917 ஒக்ரோபர் புரட்சியின் உந்துவிசையினால் மேலும் உத்வேகம் பெற்ற இவ் எழுச்சியானது, ஆசிய நாடுகளான சீனா, வியட்நாம், மற்றும் ஏனைய நாடுகளில் பல அரசியல் மாற்றங்கள் ஏற்பட ஏதுவாகியது. இதன் எதிரொலி இலக்கியத் தளத்திலும் சில சாதனையாளர்களை உருவாக்கியது. அவ்வகையில் இந்தியாவில் மகா கவிகளான தாகூர், பாரதி, மற்றும் வியட்நாமில் ஹோசிமின், சே லான் வியன், போன்றோர் இலக்கிய உலகில் சாதனைகள் படைத்தனர். இக்காலகட்டத்தில் சீனாவில் நடந்த சமூக விடுதலைப் போராட்டமானது, லூசுன் என்கிற இலக்கிய மேதையை உருவாக்கித் தந்தது. அவரே சீனாவின் நவீன இலக்கியத்துக்கு வழிகாட்டிய ஆளுமையாக விளங்கினார்.

லூசுன் 1881ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21ந்திகதி சீனாவில் செக்கியாங் மாகாணத்தில் 'ஷாவோசிங்' எனும் ஊரில் பிறந்தவர். சிறு வயதிலேயே தந்தையை இழந்து தாயாரின் அரவணைப்பில் வளர்ந்தவர். இதனால், அவரது குடும்பம் வறுமைக்குள்ளானது. வறுமை நிலையிலும் மருத்துவராக வரவேண்டுமென்ற அவாவினைக் கொண்டிருந்தார். ஜப்பானுக்குச் சென்று மருத்துவக்கல்லூரியில் இணைந்து கொண்டார். வறுமை காரணமாக அதனைத் தொடர முடியாது நாட்டுக்குத் திரும்பினார். நாடு திரும்பியதும் தீவிரமாக இலக்கியப் பணியில் ஈடுபட்டார்.

ரஷ்ய ஒக்டோபர் புரட்சி சீனாவில் ஏற்படுத்திய அருட்டுணர்வு சீன மக்களை ஏகாதிபத்தியத்துக்கும், நிலவுடமை அமைப்புக்கும் எதிராகப் போராடத்தூண்டியது. இந்த எதிர்ப்பு இயக்கமே சீன வரலாற்றில் 1919ல் எழுச்சி கண்ட 'மே நான்கு' இயக்கமாகும். இந்த இயக்கத்தின் தாக்கமும், படிப்பினையும் 1921ல் சீனப்பொதுவுடமைக் கட்சியின் உருவாக்கத்திற்கு வழிவகுத்தது. இச்சூழலில் தான் லூசுனிடம் சமூக அக்கறையுடனான சிந்தனை கூர்மை பெற்றது. அதன்வழி அவரைச் செயலூக்கமுடன் செயற்பட வைத்தது. லூசுன் அன்றைய சீன மக்களது யதார்த்த நிலைமைகளைக் கருத்தில் கொண்டு அவர்களது விடுதலைக்கான இலக்கியங்களைப் படைத்தார்.

அவரது முதல்கதை 'புதிய இளைஞர்' என்ற பத்திரிகையில் 1918ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் வெளிவந்தது. 'ஒரு பைத்தியக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரனின் குறிப்புக்கள்' (A madman's Diary) என்ற தலைப்பிலான இக்கதை பலரது கவனத்தையும் ஈர்த்தது. சீனப்புத்திலக்கியத் தின் ஆரம்பப் புள்ளியாகவும் இக்கதை அமைந் தது. இதில் அவரது மனித நேயப்பண்பு வெளிப்பட்டது. கதையில் சிதைவுற்றுவந்த நிலவுடமைச் சமூகத்தின் பிற் போக்குத்தனத் தையும், அது போதித்த அற நெறிகளையும் கேள்விக்குட்படுத்தினார். அத்துடன் இக்கதை யின் மூலம் சீன நிலவுடமைச் சமூகத் துக்கெதிரான திசை வழியையும் திறந்து காட்டினார்.

இதைவிட 'அருமருந்து' (medicine), 'எனது பூர்வீகவீடு' (my old home), 'ஆ கியூவின் உண்மைக்கதை' (The True story of Ahq), 'புத்தாண்டுப்பலி' (The New year's sacrifice), 'விவாகரத்து' (The Divorce) என்ற கதைகள் அன்றைய சீனதேசத்தையும் மக்களையும் பிணித்திருந்த துன்பதுயரங்களை யும், மூடநம்பிக்கைகளையும் தெளிவாக எடுத்துக்காட்டின.

இக்கதைகளில் வருகின்ற கதாபாத்திரங் களான பித்தன், குங்யீழி, குண்டு, ஆ கியூ, ஐக்கு ஏனைய பிறவும் அன்றைய சீனாவின் யதார்த் தப் படைப்புக்கள் ஆகும்.

இக்கதைகளில் மக்களை ஈவிரக்கமின்றி அடக்கியாளும் நிலச்சுவாந்தர்களை அம்பலப் படுத்தி அவர்கள் மீது தாக்குதல் தொடுக் கின்றார். அதேவேளை நிர்க்கதியற்று அடி மைத் தனத்துக்குள்ளான மக்களது கோரிக் கைகள், விருப்பங்கள், ஆற்றல்களையும் இக் கதைகளில் வெளிப்படுத்தியுள்ளார். மக்களது விடுதலைக்கான மார்க்கம் சமூகப்புரட்சியே என்பதனையும் வலியுறுத்துகிறார்.

'ஆ கியூவின் உண்மைக்கதை' என்பதில் காலாகாலமாக அடிமைப்பட்டு அல்லலுற்றுக் கிடந்த சீன மக்களது அவல நிலையினை சித்தரித்துள்ளார். அத்துடன், இக்கதை 1911ல் நிகழ்ந்த முடியாட்சிக்கெதிரான புரட்சியை யும் படம்பிடித்துக் காட்டியது. பெருந் திரளான விவசாயிகளை அணி திரட்ட முடியாததால் அப்புரட்சி துரதிஸ்ட வசமாகத் தோல்வியை தழுவிக் கொள்கிறது. அதன் படிப்பினையையும் இக்கதை எடுத்துக் காட்டியது.

'புத்தாண்டுப் பலி' என்ற இன்னொரு கதை ஏழைவேலைக்காரியான ஷியாங் லின்னின் மனைவி என்ற பாத்திரத்தை மையப்படுத்தியது. அவள் நிலவுடமையாளர் கள், அதிகாரிகளால் கொடுமைக்கும், அவ மதிப்புக்கும் உள்ளாகி துன்புறுவதை சித்தரிக் கிறது. இறுதியில் தனது வாழ்க்கையின் தலை விதியைத் தானே தீர்மானித்துவிடுகிறாள். அறநெறிதான் சீனமக்களது வாழ்வியல் நெருக் கடிகளுக்கு காரணம் என்பதையும் தனது படைப்புக்களில் வெளிப்படுத்தினார். அத்துடன் இத்தகு அற நெறிகளை நிலவுடமையாளர்கள் மக்களை ஒடுக்குவதற்கான போராயுதமாகவும் பயன்படுத்தினர். இவர்களது மேலாதிக்கத்தில் நிகழ்ந்த கொடுமைகள் பேரச்சமூட்டுபவை யாக இருந்தன. எதிராகக் கிளர்ந்தெழுந்த இளைஞர்களும், பெண்களும் யாரால் கொல் லப்படுகின்றனர் என்பதே தெரியாமல் கொன் றொழிக்கப்பட்டனர் என்பதையும் அவரது படைப்புக்கள் வெளிச்சமிட்டுக்காட்டின.

சீன மக்களது புதிய வாழ்க்கைத் தடத்துக்கு நம்பிக்கையூட்டும் கதையாக, 'எனது பூர்வீக வீடு' என்ற கதையை லூசுன் எழுதினார். இக் கதையில் வரும் ஜாண்டு என்ற கதாபாத்திரம் அன்றைய சீன விவசாயியின் வகை மாதிரிப் பாத்திரமாகும். இக்கதையில் கொள்ளையர்கள் பட்டாளத்துக்காரர்கள், அதிகாரிகள், நிலக்கி ழார்கள், வரிவசூலிப்போர் எனப்பலராலும் சுரண்டப்பட்டு தொல்லைகளுக்குள்ளான விவ சாயி ஒருவனின் (ஜாண்டு) நேர்மையான வாழ்வு சித்தரிக்கப்பட்டுள்ளது. சீனாவில் மக்கள் புரட்சிக்கு முதன்மையான உந்துவிசை யாக விளங்கியவர்கள் விவசாயிகளே. அக் காலத்தில் அவர்கள் அனுபவித்த வறுமை நிலையையும் இக்கதை அம்பலப்படுத்தியது. அத்துடன், விவசாயிகளின் விழிப்புணர் வினையும், புரட்சிக்கு அவர்கள் ஆற்றப்போ கும் பங்களிப்பையும் முன் கணித்தது என்பது முக்கியமானது.

அவரது படைப்புக்கள் நடப்பியல் வாதப் பண்பினைக் கொண்டு நிலவுடமையாளர் களின் சுரண்டலை அம்பலப்படுத்துபவையாக விளங்கின. அவர் அடிமைப்பட்டிருந்த மக் களது ஆழ்மன அவலங்களையும், அபிலாசை களையும் தனது படைப்புக்களில் வெளிப் படுத்தினார்.

லூசுன் தனது படைப்புக்களில் பழைய சீன வாழ்க்கையையும், நடைமுறைகளையும் விமர் சனத்துக்குள்ளாக்கினார் என்பது முக்கியமா னது. மக்கள் தமது அவலங்களிலிருந்து விடுபடுவதற்கான ஒரே வழி சமூகப் புரட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சியே என்பதனையும் அவர் வலியுறுத்தத் தவறவில்லை. தவிர, அடிநிலை மக்களது அவலங்களை மட்டும் விவரிக்காமல், அவர் களிடம் பொதிந்துகிடந்த ஆற்றல்களையும் எடுத்துக்காட்டினார்.

லூசுன் 'கிராமத்து இசை நாடகம்' (village opera) என்ற கதையில் நாட்டுப்புற மக்களின் நல்ல பண்புகளையும், மதிநுட்பத்தையும், மகிழ்ச்சிமிக்க அவர்தம் சிறார்களையும் சித் தரித்துள்ளார். அம்மக்களின் உணர்வுகள் கலைத்துவமிக்க கவிதைநயத்துடன் வெளிப்ப டுகிறது. இன்னொரு கதையான 'விவாக ரத்து' (The Divorce) என்ற கதையில் பிரதான பாத்திரமாக நாட்டுப்புறப்பெண் ஐக்கு ஒரு அதிகாரமிக்க குடும்பத்தில் திரு மண உறவை கொண்டிருந்து, பின்னர் எழுகின்ற முரண் நிலையில் மணமுறிவினை எதிர்கொள்கிறாள். திருமண உறவு நிலைக்காத போதும், நெஞ்சு ரம்மிக்க பெண்ணாக நம்பிக் கையுடன் தன் வாழ்வைத் தொடர்கிறாள் என்பதை பெண்ணு ரிமை சார்ந்து சித்தரித் துள்ளார்.

அத்துடன் தன் படைப்புக்களில் சீனதேசத் தின் தொன்மங்களையும், நம்பிக்கைகளையும் கருப்பொருளாகக் கொண்ட படைப்புக்களை யும் எழுதியுள்ளார்.

சந்திரனுக்குப் பறப்போம் (The Flight of the moon) என்ற கதை கொடுங்கோல் ஆட்சியை எதிர்த்து நின்று வஞ்சம் தீர்க்கும் மக்களின் போக்கினைக் காட்டுகிறது.

லூசுன் சிறுகதைகளுடன் கவிதை, கட்டு ரைகள், நினைவுக்குறிப்புகள் எனப் பல இலக்கிய வடிவங்களையும் கையாண்டு தனது புரட்சிகரமான கருத்துக்களை மக்கள் மத்தியில் வெளியிட்டார். அநீதியும், ஒடுக்கு முறையும், ஏற்றத்தாழ்வும், மூடநம்பிக்கை களும் மலிந்திருந்த சமூக அமைப்பிலே, ஒரு கல்வியாளன், இலக்கியவாதி எத்தகைய சமூக நோக்கினையும், வாழ்வியல் நிலைப் பாட்டினையும் கொண்டிருக்க வேண்டும் என்பதற்கு ஓர் ஆதார புருஷராக லூசுன் பணியாற்றினார்.

லூசுன் புகழ்பூத்த இலக்கியவாதி மட்டு மல்ல, மகத்தான சிந்தனையாளராகவும், புரட்சியாளராகவும், தேசப்பற்றாளராகவும், சர்வதேச வாதியாகவும் திகழ்ந்தார். அவரது படைப்புக்கள் கோடிக்கணக்கான மக்கள் கூட்டத்தை வீரஞ்செறிந்த போராட்டங்களில் அர்ப்பணிப்புடன் ஈடுபடத் தூண்டியுள்ளது. அன்றைய சீனதேசத்தில் மக்கள் அனுபவித்த இருளடர்ந்த வாழ்வினை ஒழித்து, மனித னோடு மனிதன் சரிநிகர் சமமாக வாழ்வ தற்கு வழிசமைப்பதில் லூசுனின் படைப் புக்கள் ஊக்கியாய் அமைந்தது எனின் மிகையல்ல. அவரது படைப்புக்கள் ஒவ் வொன்றிலும் அந்நாட்டு உழைப்பாளிகளின் வாழ்வாதாரத்தின் மீது கவிந்திருந்த துன்ப துயரங்கள், தினம் தினம் அவர்கள் பட்ட வேதனைகள், அனுபவித்த வலிகள் என அனைத்தும் செறிந்துள்ளன.

லூசுனின் படைப்புக்கள் சீன தேசத்தில் புதியதோர் உலகம் உருவாவதற்கான எழுச் சியை ஏற்படுத்தின. அவற்றினால் புடம் போடப்பட்டு விழிப்புற்ற உழைக்கும் மக் கள் சீனப்புரட்சியின் வெற்றிக்கும் துணை நின்றனர்.

அந்த வகையில், லூசினின் படைப்புக்கள் புதிய உலகின் விடிவுக்கான புத்திலக்கியமாக, அறிவாயுதமாக விளங்கின என்பதுடன், சீன தேசத்ததில் புதிய பண்பாட்டுச் சூழலை உருவாக்கிய பணியினையும் ஆற்றியது.

குறிப்பு: சீன தேசமும் மக்களும் விடுத லையை வெற்றி கொள்வதற்கு முன்னரே 1936ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19ந்திகதி லூசுன் உயிர் நீத்தார் என்பது குறிப்பிடத் தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோ பவின் தென்னாசியக் கவிதைகள்

தி.செல்வமனோகரன்

எல்லா மொழிகளிலும் உள்ள இலக்கிய வடிவங்களில் அரசோச்சுவது கவிதையே. கவிதையை வசப்படுத்தியவன் கவிதையால் வசப்பட்டவன் கவிஞனாகிறான். கட்டமைக்கப் படும் கவிதை அச்சொற்களைக் களைந்து தனித்து பிரவகித்து நிற்கும். அதுவே உன்னத கவிதையுமாகும்.

கிறிஸ்ற்றோஃவர் கோட்வெல் என்பார் 'கவிதை மொழிபெயர்ப்புச் செய்யப்பட இய லாத ஒன்று; ஆனால் அது கட்டாயமாக மொழிபெயர்க்கப்பட வேண்டியதாகும்' என் கிறார். இது சற்றே மிகைபடத்தோன்றினும் மூலப்படைப்பை ஆக்கிய கவிஞனே அத னைப் பிறிதொரு மொழி மீளாக்கம் செய்யும் போது கூட முழுமுழுமையாய் மூலக்கவிதை தந்த கலானுபவத்தை – கவிதையின் விகசிப் பைத் தரமுடியாத சந்தர்ப்பங்களே அநேகம்.

பொதுவில் மொழிபெயர்ப்பு என்பது ரான்ஸிலேஷன் (Translation) எனப் படும். ஆக்க இலக்கிய மொழிபெயர்ப்பை ரான்ஸ் கியேஷன் (Transcriation) என்பர். ஆக, ஆக்க இலக்கிய மொழி பெயர்ப்பு என்பதும் மொழிபெயர்ப்பு என்பதும் வேறானது. தமிழில் மொழிபெயர்ப்பு என்ற சொல் தொல்காப்பியத்தில் 'மொழி பெயர்த்து அதர்ப்பட யாத்தல்' என இடம் பெறுகிறது. ஆனால் தமிழரின் மொழி பெயர்ப்பு வரலாறு தொல்காப்பியத்தின் பின்பே ஆரம்பமாகிறது. சமஸ்கிருத, பாளி உள்ளிட்ட இந்திய மொழிகளின் வழி இது நிகழ்த்தப்படுகிறது. ஆனால் இம்மொழி பெயர்ப்புக்கள் தமிழ் படுத்தும் செயற்பாடுக ளாகவே அமைந்தன. உதாரணம் ஷேக்ஸ்பியரின் எழுத்தை விபுலா னந்தர் மதங்க சூளாமணியாக எம்முன் நிறுத்துதலைக் குறிப்பிடலாம்.

தேசிய விநாயகம்பிள்ளை, ச.து.சு.யோகி யர், அ.சீநிவாசராகவன், புரசு பாலகிருஷ் ணன் எனத் தொடங்கி இப்பட்டியல் நீள் கிறது. ஈழத்தில் K.கணேஷ், சி.வி.வேலுப் பிள்ளை, பண்ணாமத்துக் கவிராஜர், முருகை யன், M.A.நுஃமான், சிவசேகரம், சோ.ப, அ.யேசுராசா, சத்தியபாலன், சித்தாந்தன், தானா விஷ்ணு என இப்பட்டியல் அகலிக்கிறது.

மொழிபெயர்ப்பு என்பதை சொற்பெயர்ப் புக்களாகவும், மையத்தை விளக்கி பெயர்ப் பதாயும், மையத்தை விளக்கிக் கொள்ளும் அதேவேளை தத்தம் சமூகப் பண்பாட்டுச் சூழமைவுகளுக்கேற்ப ஆக்கப்படுவதாயும் கையாளுதலை நாம் அவதானிக்கின்றோம். மூலமும் கெடாது தன் சமூக சூழமைவுக் கேற்ப இசைவுபடுத்தித் தன் மொழி பெயர்ப்பை நிகழ்த்துபவரே சோ.ப.

இவர் நீண்ட காலம் கவிஞராக அறியப்பட்டிருப்பினும் 1998இல் தான் முதற் கவிதைத் தொகுப்பான வடக்கிருத்தல் வெளி வந்தது. அதன் பின்னான இருபது ஆண்டு களுள் நினைவலைகளின் பதிவு களாகச் சுவட்டெச்சம், நினைவுச் சுவடுகள் என்பவற் றையும் மொழிபெயர்ப்புக்களாக பர்மிய பிக்கு சொன்ன கதைகள், Tamil Short Stories from Sri Lanka, Sri Lankan Tamil Poetry மற்றும் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் நாடகங்கள், தென்னிலங்கைக் கவிதைகள், ஆபிரிக்கக் கவிதைகள் என்பவற்றைக் குறிப் பிடலாம்.

இவரின் தென்னாசியக் கவிதைகள் எனும் இந்நூல் 226 பக்கங்கள், 87 கவிதைகள், 65 கவிஞர்கள் என அகலித்து நிற்கிறது. இத் தொகுப்பு, தென்னாசியாவில் உள்ள முக்கிய கவிஞர்கள் - அவர்களின் எழுத்துக்களை தமி ழுக்கு அடையாளப்படுத்துகிறது. தென்னா சிய மொழிகளிலிருந்து ஆங்கிலத்துக்கு மொழிபெயர்க்கப்பட்டவற்றை கவிஞர் தமி ழுக்குத் தருகிறார்.

'சென்றிடுவீர் எட்டுத்திக்கும் பலகலைச் செல்வங்கள் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்' என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதியின் கூற்றை மெய்ப்பிப்பதாய் தென்னாசியாவின் கலைச்செல்வங்கள் சிலவற்றை இந்நூல் எமக்கு அறிமுகம் செய்கிறது.

'இது பூமியாய் இருக்கின்ற படியால்' என் பது ஹிந்தி மொழிக் கவிஞர் அனுப் குமாரின் கவிதை இது. இக்கவிதை உலக மெங்கும் உள்ள பெண்களின் அவலநிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறது. உழைப்புச் சுரண்டலை ஒடுக்கு முறையைக் கட்டவிழ்ப்புச் செய்கிறது. இக்கவிதையில் நிர்வாணமாய் நிற்கிறது மனிதம்.

'குருடர்களின் தரிசனத்தில்' பெண்ணை - அவளது அழுகையை - மீள முடியா நீண்டதுயரத்தைக் கூடப் புரிந்து கொள்ளாது சமூகக் குருடர்களைத் தன் கவிதை பதிவு செய்கிறது. பெண் எனும் கவிதையில் புத்தரின் குருடர் பார்த்த யானையின் கதை வடிவத்தைப் பயன்படுத்தியுள்ளார் கவிஞர். 'சந்தியில் ஆதி வடிவம் அப்பெண் நிற்கிறாள்' பெண்மைத்துவத்தின் மகத்துவத்தை இக்கவிதை அழுத்திச் சொல்கிறது. நேபாளக் கவிஞர் பனிரா கிரியின் கவிதை இது.

கோடரியின் கதை எனும் கவிதையில் நனவோடை உத்தி கையாளப்பட்டுள்ளது. ஜமதக்கினி முனிவர் - பரசுராமன் - தாய் ரேணுகா எனும் பாத்திரங்களின் வழி தொன்மக் கதையை மீள்வாசிப்புச் செய்கிறார் பாலாமணி அம்மா (மலையாளம்). சிவனின் பரிசாக கோடரி கிடைத்தல் – தாய் கொலை, பசு கவர்தல், அரசன் கார்த்த வீரியார்ச்சுனன், தந்தை கொலை சத்திரியர் அழிவு, எனும் கட்டுமானங்களின்வழி கவிதை வாசகரை நோக்கிவிரிகிறது. தெரிந்த கதை – ஆனால் தெரியாத நுண்ணிய செய்திகளை அலசும் அழகு மிகு கலையாய்; மிளிர்கிறது இக்கவிதை.

'ஓர் ஒளிக்கீற்றுக்காக' எனும் இக்கவிதையின் பாடுபொருளாக விளங்குகிறது. கவனிப் பற்றுப் போன மனிதனின் மரணம். அன்பளிப்பு விலை மாது ஒருத்தியின் கதை இது. அவள் உப்புக்கும் அரிசிக்கும் இளந் தசையை விற்கக் கற்றுக்கொண்டாள். அவளுக்கு,

*"நீங்கள் ஒவ்வொருவரும், கடைசியில்,*
*ஏதோ கொடுத்தீர்கள்*
*ஆனால்*
*நீங்கள் மட்டும்*
*ஓர் அரிச்சுவடியும், ஸ்லேற்றும், பென்சிலும்*
*கொடுத்திருந்தால்"*

என முடியும் இக்கவிதை வாசகர் மனதில் கனத்த மௌனத்தை வழங்கிச் செல்கிறது. சமூக விமர்சனமாக - பொறுப்பற்ற மனிதர்களின் வெற்று மொழிகளின் மீது கசையைச் சொடக்குகிறார் கவிஞர் கிருஷ்ணா போஸ் (இந்தியா). 'ஓளக்கன சிலை' எனும் கவிதை ஆத்மவிசாரணையாக அமைகிறது. யாரையும் வழிபடாத ஒருவனின் குரல் இது. விவேகானந்தர் கடவுள் இருக்கிறாரா எனக் கேட்டதை நினைவுபடுத்துகிறது. இறுதியில்,

*தேவனே உன் திருவடியில் வீழ்ந்து*
*பணிந்து வேண்டுகிறேன்:*
*இந்த வாழ்வின் அர்த்தத்தை*
*- அப்படி ஒன்று இருந்தால் -*
*எனக்கு விளக்குவாயா?*

எனவரும் வரிகளின் வழி இதனைத் தெளிவுறுத்துகின்றார்.

'நானும் என் கிழவியும்' எனும் கவிதை சுதந்திர இந்தியாவை விமர்சிக்கிறது.

*இது பாவம் எனத் தெரியும்*
*ஆனால் சொன்ன சொல்லைக் காக்கவேண்டும்*
*எங்கள் வாக்கு உங்கள் மனுபாய்க்குத்தான்*
*சொல்லுங்கோ, தலைக்கு பன்னிரண்டு தருவீர்களா?*
*பெறுமதி மிக்க இரண்டு வாக்குகள் வைத்திருக்கிறோம்*
*நானும் என் கிழவியும்!*

சமகால இந்தியாவை இறுதி வரிகள் பதிவிடுகின்றமை குறிப்பிடத்தக்கது. அரசியல் நிலைப்பட்ட கவிதை இது. 'அம்மாவும் என் கவிதையும்' தாய்மையின் சிறப்பைப் பேசும் கவிதை. இது படிப்பறிவில்லாத தாயின் உண்மைப் பாசத்தை – உணர்வுந்துதலைப் பதிவிடுகிறது. 'விலைமாது தன் மகளுக்குச் சொன்னது' எனும் கவிதை மாதவி –மணிமேகலை உரையாடல் என்றே சொல்லத் தோன்றுகிறது. விலை மாதுகளுக்குள் இருக்கும் மனிதத்தை, வாழ்க்கையைப் பற்றிய புரிதலை தத்துவார்த்த தளத்தில் இது வெளிப்படுத்தி நிற்கிறது.

'சிலை' - பெண் பற்றிய முக்கிய கவிதை இது. இக்கவிதை

*"ஆனால் எனக்கு ஓர் உண்மை தெரியும்*
*கோயிலின் விக்கிரமாக மாற்றப்பட்ட*
*தேய்ந்துபோன*
*வெறும் அடுக்களைப் பாத்திரம் நான் என்று"*

என முடிகிறது. 'நான் போகமாட்டேன்' தன் யுத்தம் சூழ்ந்த தேசத்தை விட்டு விட்டுப் போகாத ஒரு மனிதரின் குரல் என முடியும் இக்கவிதை - பங்களாதேசத்தைச் சேர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸம்ஷ_ர் ரஹ்மானின் கைவண்ணமாகும். ஆழ்ந்த சமூக அவதானிப்பின் வெளிப்பாடாக இக்கவிதை அமைகிறது. வெளிப்பாட்டுமுறை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

'கிருஷ்ணனின் மரணம்' கிருஷ்ண அவதாரம் பற்றிய மறுவாசிப்பும் சமகால நிகழ்வு வழியான வெளிப்பாடாகவும் இக்கவிதை அமைகிறது. சமகால அரசியல் சூழலை அலசமுற்படுகிறது. இத்தொகுப்பின் முக்கிய கவிதையில் இதுவுமொன்று.

'பிறக்கு முன்பே மரணத்தைத் தழுவிவிட்டேன்' 2016 ஜூலை முதலாந் திகதி குல்ஷான் படுகொலையில் கொல்லப்பட்ட சிமோனா மொன்ரியின் பிறக்காத குழந்தையின் நினைவாக தரிக் சுஜெற்றால் (பங்களாதேஷ்) இயற்றப்பட்டது இக்கவிதை. எப்பொழுதும் ஆளும்வர்க்கம் தன் ஒடுக்குமுறைக்கு எதிரானவர்களை எந்தத் தளத்திலேனும் தண்டிப்பதை இக்கவிதை படம் பிடித்துள்ளது.

'நாடு இழந்தோர்' எனும் கவிதை ஒடுக்கப் பட்ட மக்களிடம் விடுக்கப்பட்ட அறை கூவலாக அமைவன. இதனை,

*பற்றி எரியுங்கள்*
*என் மக்களே*
*பற்றி எரியுங்கள்*
*எரிந்து*
*நெருப்பிலிருந்து*
*பொன்னாய் வெளியே வாருங்கள்!*

எனும் வரிகள் உணர்த்தி நிற்கின்றன.

நாடு இழந்தோர், கனவுகளின் மிச்சம், இறுதிப் போர் உள்ளிட்ட கவிதைகளில் போரின் வக்கிரத்தை அதனால் விழைந்த அவல வாழ்க்கையைப் பதிவிடுகின்றன. இறுதிப் போர் ஒடுக்கப்பட்ட இனத்தின் குரலாய் அவாவாய் அமையும் அதேவேளை நம்பிக் கையால் நிமிர்ந்து நிற்கிறது இக் கவிதையில் வரும்

*எண்ணிறந்த அம்மனித மரணங்கள்*
*காலத்தின் மடிப்பில் புதையுண்டு போகட்டும்*
*ஓர் அமைதியான தொடக்கத்தின் அடையாளமாக*
*ஒரு 'போதிசித்த' மூமரக்கன்றை நடுங்கள்*
*காலத்தைப் பலியிட்டு*
*அதைப் புனிதராக்க உங்களால் முடியாது*
*என்றோ ஒருநாள் இருளைப் பின் தள்ளியபடி*
*உங்கள் பிடியிலிருந்து விடுபட்டு*
*ஒரு புதிய சூரியன் வெளிவருகையில்*
*காலம் புன்னகைக்கும்!*

எனும் வரிகள் இதற்குத் தக்க சான்றுகளாக உள்ளன.

இந்நூலின் கவிஞர் கவிதையின் மையம் கெடாது தமிழ் சூழலுக்கேற்ப மொழி பெயர்த்துள்ளது. அவரின் பேச்சின் வசீகரம் அவரின் வரிகளிலும் உள்ளது. 'நிர்வாணமாக இடையூறின்றி அச்சமின்றி சந்தியில் தன் ஆதி வடிவில் நிற்கின்றாள் பெண்', 'காலத்தின் மடிப்பில் புதையுண்டு போனது', 'சுழல் காற்றாய் கிழப்பினேன்', 'நீலவானின் கீழ் விரிந்த பச்சை வாழை யிலை போல் கிடக்கும் என்நிலம்', 'ஒரு பேரரசு புழுதியில் கிடந்தது'.

எனும் வரிகள் அவரின் மொழியாளுமைக்குச் சிறந்த உதாரணங்களாகத் திகழ் கின்றன.

தென்னாசியக் கவிஞர்களை அவர்களது கவித்துவத்தை தமிழுக்கு அறிமுகம் செய்யும் முயற்சியாக இத்தொகுப்பு அமைந்துள்ளது. இதில் கவிதைத் தெரிவு என்பது கவிஞரின் மனவோட்டம், அரசியல், பண்பாட்டியல், நம்பிக்கை, விருப்பு என்ப வற்றோடு மொழிபெயர்க்க ஏற்ற கவிதை எனும் பண்பியலும் இணைந்து கொள்கிறது. ஆதலால் தெரிவு பற்றி நான் இங்கு உரையாடவில்லை. இந்நூலில் இடம்பெற்றுள்ள பெரும்பாலான கவிதைகள் துக்கத்தால் நிரம்பி வழிகின்றன. வீடற்று, நாடற்று, நாதியற்றுப் போனவர்களினது வாழ்வியல் அவலத்தைப் பதிவிடுகின்றன. ஒடுக்கப் பட்ட மனிதர்கள், பெண்கள், விலைமாது மற்றும் சமூகவியற் குறை பாடுகள் தென்னாசியா எங்கும் நிறைந்திருப் பதை இக் கவிதைகள் ஆதாரப்படுத்து கின்றன. மூன்றாமுலக நாடுகள், அங்கு வாழும் மக்களின் ஆத்மாக்களின் குரல்கள் இவை. குறியீடு படிமங்கள் தாண்டி தொன்மங்களின் வெளிப்பாடுகள் அதீதமாக உள்ளது. கவிதை எங்கும் ஓசை நிறைந்துள்ளது. எளிய சொற்களால் ஆக்கப்பட்டுள்ளன. துக்கக் கவிதை எழுதப் பட்ட காகிதத்தை மார்போடணைக்கும் அம்மாவின் மனமாய் கனக்கிறது எம்மனது. கவிஞராய் இருந்து மொழிபெயர்ப்பிலீடு படுவதே அவரது பலம்.

சோ.ப அவர்களின் மொழிபெயர்ப்பு பணிகள் தொடரவேண்டும். மொழிபெயர்ப் புப் பற்றிய இவரின் கட்டுரைகள் முக்கிய மானவை; அவற்றையும் அவர் தொகுக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புத்தகங்களின் எதிரிகள்

அதீதன்

இந்த உலகு புத்தகங்களின் எதிரிகளுக்குச் சொந்தமானது என்றால் நீங்கள் நம்பித்தான் ஆகவேண்டும். இது பற்றி எழுத வேண்டும் என்ற எண்ணம் நீண்டநாள் இருந்தது. இன்று எப்படியும் எழுதியாக வேண்டும் என்று அமர்ந்தே விட்டேன். இந்தப் பதிவை எழுது வதற்கு இன்றைய நாளைவிட பொருத்தமான நாள் எனக்குக் கிடைக்கப் போவதில்லை. யாழ் நூலகம் தீயிடப்பட்ட கருப்பு தினம். அதனாற் தான் இன்று இதை எழுதியே தீர்வது என்கிற முடிவுடன் எழுதுகிறேன்.

காலம் தோறும் புத்தகத்தின் எதிரிகள்தான் உலகை ஆண்டிருக்கிறார்கள். அது பற்றிப் பார்க்கும் முன்னர் எனது பார்வையில் புத்தகம் என்றால் என்ன என்பதைச் சொல்லவேண்டி இருக்கிறது. புத்தகம் ஆத்மார்த்தமானது, அது ஒரு அனுபவம் என்கிற அழகியல்வாத கருத்துக் களில் இருந்து கொஞ்சம் வெளியே நின்று புத்தகங்களை நோக்குபவன் நான் (அதற்காக புத்தகம் குறித்த அழகியல் வாதக் கருத்துக்களை முற்றாக மறுப்பவன் அல்லன். புத்தகம் ஒரு அனுபவமும் தான்). என்னைப் பொறுத்தவரை புத்தகம் என்பது ஒரு கருவி. ஒரு ஆயுதம். வாய் மொழிக் கதைகளுக்கு அடுத்ததாக மனிதனிடம் இருக்கும் சிறந்த தொடர்பாடல் ஊடகம் அது. புத்தகம் என்பது உலகின் ஒட்டுமொத்த அறிவும் சேமிக்கப்படும் ஒரு தொட்டி. இப்படித்தான் நான் புத்தகங்களைப் பார்க்கிறேன்.

புத்தகத்துக்கு எதிரிகள் இருகிறார்கள் என்பது அறிவுக்கு எதிரிகள் இருக்கிறார்கள் என்பதன் நேரடி மொழிபெயர்ப்பே. அறிவுக்கு எதிரிகள் உலகில் இருக்கமுடியுமா என்கிற கேள்வி மிக வும் முக்கியமானது. வரலாற்று ரீதியாகப் பார்க்கும்போது உலகின் எல்லாச் சமூகமும் இன்னொரு சமூகத்தின் அறிவை வளர்ப்பதற் கான உரிமையை ஏதோ ஒரு கால கட்டத்தில் மறுத்தே வந்திருக்கின்றன. இது உண்மையில் அதிகாரம் சார்ந்த பிரச்சினையாய் இருந்திருக் கிறது. அடிமைகளுக்கும் ஒடுக்கப்பட்டவர்களுக் கும் அறிவுக்கான பாதை மறுக்கப்பட்ட வர லாறு எல்லா நாகரிகங்களுக்கும் சொந்தமானது. போர்களில் நூலகங்களை எரிப்பது எல்லா இடங்களிலும் நடந்திருக்கிறது. ஒரு ஒடுக்கு முறைச் சக்தி ஒடுக்கப்பட்ட மக்களின் அடுத்த தலைமுறையின் அறிவைக் குறிவைக்கிறது. அந்தக் குறியின் முதற் பலி நூலகங்களும் அதனுள் இருக்கும் புத்தகங்களும்.

அதிகாரவர்க்கம், ஒடுக்கப்பட்ட மக்களது கையில் இருக்கும் துப்பாக்கியை விட அவர்களின் கையில் இருக்கும் புத்தகங்களைக் கண்டே அதிகம் அஞ்சுகிறது. புத்தகங்களின் வலிமையை ஒடுக்கப்பட்ட மக்களை விட ஒடுக்குபவர்கள் நன்கு அறிந்துவைத்திருகிறார் கள். வேதத்தை பிராமணர் அல்லாதவர் வாசிக் கக் கூடாது என்று சொன்னதுகூட இன்னொரு வகையான அதிகார ஒடுக்குமுறையே. 37 வரு டங்களுக்கு முன்னர் யாழ் நூலக எரிப்பிற்குப் பின்னாலும் அதிகாரம் என்கிற ஒன்றுதான் காரணமாக அமைந்தது. அதிகாரத்தின் கோர முகங்களில் இதுவும் ஒன்று.

அதிகாரம் மட்டுமா புத்தகங்களின் எதிரி என்று கேட்டால், அதற்கான பதில் இல்லை என்பது தான். கொஞ்சம் விரிவாகப் பார்ப்போம்.

நூலகங்களை சட்டவிரோதமானதாக்கும் முயற் சிகள் நடந்து கொண்டிருப்பதை நீங்கள் ஒரு வேளை அறியாமல் இருக்கக் கூடும். அப்படி ஒரு முயற்சி சில காலங்களாக பெரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்பகங்களால் செய்யப்பட்டு வருகின்றன. ஒரு புத்தகத்தை விலைகொடுத்து வாங்கி ஆயிரக் கணக்கானர்வர்களுக்கு படிப்பதற்கு கடனாக வழங்குவது அநியாயமானது, இதனால் தங்களது விற்பனை சரிகிறது, கஷ்டப்பட்டு எழுதும் ஒரு எழுத்தாளனுக்கு அவனது உழைப்புக்கான சரியான ஊதியம் கிடைக்காமல் இருப்பதற்கு நூலகங்கள் ஒரு காரணமாகின்றது என்கிற ஒரு வாதம் அண்மைக்காலங்களாக முன்வைக்கப் பட்டு வருகிறது.

இலாபம் என்ற ஒற்றைச் சொல்லை அறமாக்க நினைக்கும் முதலாளித்துவம் அறிவு சார் பொருளாதாரத்தில் இலாபம் சம்பாதிக்க முற் படாமல் இருக்கப்போவதில்லை. காப் புரிமை என்பதும் புலமைச் சொத்துரிமை என்பதும் அறிவு சார் பொருளாதாரத்தின் இலாபத்தை குறையவிடாமல் காக்க முதலா ளித்துவம் கண்டுபிடித்த இரண்டு சட ரீதியான ஆயுதங்கள்.

அண்மையில் வாங்கிய ஒரு புத்தகத்தில் "நீங்கள் வாங்கிய இந்தப் புத்தகத்தை நீங்கள் மாத்திரமே வாசிக்க வேண்டும். இதனை நீங்கள் யாருக்கும் வாசிப்பதற்காக கடனாக வழங்கவோ, பகிரவோ, மீள்விற்பனை செய்யவோ கூடாது. அப்படிச் செய்வதாயின் பதிப்பாளரின் சம்மதம் எழுத்துவடிவில் பெறப்படவேண்டும்." என்கிற தொனிப்பட காப்புரிமையை உறுதி செய்வதற் கான வசனங்களாக அவை அச்சிடப்பட்டி ருந்தன. என்னை கேட்டால் காப்புரிமைதான் அறிவின் முதல் எதிரி என்பேன். ஒட்டுமொத்த சமூகத்தின் கூட்டு உழைப்பின் பயனான மொழியின் மேல் ஏறி நின்று ஒட்டுமொத்த சமூகமும் வழங்கிய அறிவினைப் பயன்படுத்தி உலகினைப் பார்த்துவிட்டு அதன்மூலம் தான் கண்டடைந்ததை மாத்திரம் தனிச்சொத்தாகப் பாவனை செய்தல் மானிட இருப்புக்கு விரோதமானது.

சாதாரண புத்தகங்களின் நிலைமை இப்படி யிருக்க துறைசார் ஆக்கங்களின் (புத்தகங்கள் மற்றும் ஆய்வுக் கட்டுரைகள்) நிலைமை வித்தியாசமானதாக இருக்கிறது. அதிக விலை மட்டும் வேலியாக நிற்கவில்லை. இன்றைய நிலையில் துறைசார் ஆக்கங்கள் பெரும்பாலும் இணைய நூலகங்களுக்கு ஊடாகவே பெறப்பட வேண்டிய சூழல் இருக்கிறது. அதுவும் ஆய்வுக் கட்டுரைகளைப் பொறுத்த வரையில் அதிகம். உண்மையில் இந்த இணைய தளங்களை நூலகங்கள் எனச் சொல்வதைக்காட்டிலும் புத் தகக் கடை என்பதுதான் பொருந்தும். இலகுவாக

**சமூகத்தின் கூட்டு உழைப்பின் பயனான மொழியின் மேல் ஏறி நின்று ஒட்டுமொத்த சமூகமும் வழங்கிய அறிவினைப் பயன்படுத்தி உலகினைப் பார்த்துவிட்டு அதன்மூலம் தான் கண்டடைந்ததை மாத்திரம் தனிச்சொத்தாகப் பாவனை செய்தல் மானிட இருப்புக்கு விரோதமானது**

குறைந்த பொருட்செலவில் பெருமளவு மக் களிடம் ஒரு ஆக்கத்தை கொண்டு செல்லும் வாய்ப்புகளைக் கொண்ட இணையத்தின் கதவுகளின் பின்னால் இந்த ஆக்கங்கள் அதிக விலை கொடுத்து குறைந்த பயனர்களால் மாத்திரமே அணுகக்கூடிய வகையில் சிறை வைக்கப்பட்டிருக்கின்றன.

ஒரு எழுத்தாளரின் உழைப்புக்கான ஊதியம் என்பதை எல்லாம் தாண்டி இன்றைய பதிப்புலகு எங்கோ சென்றுவிட்டது. அதற்கு எழுத்தாளர்கள் பற்றிக் கிஞ்சித்தும் கரிசனை கிடையாது. அதற்கு வேண்டியதெல்லாம் இலா பம் மாத்திரமே. இலாபம் கிடைக்குமாயின் பதிப்புத்துறையில் ஏகபோகம் செய்ய விரும்பும் ஒரு நிறுவனத்தினால் ஏற்படும் பிரச்சினைகள் பற்றி அந்த நிறுவனமே புத்தகத்தை வெளி யிடும். முதலாளித்துவத்துக்கு எல்லாத் துறை களிலும் ஒரே முகம்தான்.

அண்மையில் ஒரு மக்கள் போராட்டத்தில் இருக்கும் நியாயங்களை அலசிப்பார்க்கும் நோக் கில் இலங்கையில் மயானங்கள் தொடர்பான சட்டங்கள் என்ன சொல்கின்றன என்பதை தேடிக்கொண்டிருந்தேன். அதற்கான சட்டத்தின் மின்பிரதி இருக்கும் இணைய தளத்தை பார்த்துவிட்டபோதும் அச் சட்டத்தை வாசிக்க வேண்டுமாயின் அந்த இணைய தளத்தில் சந்தா இருக்கவேண்டிய சூழல். புத்தகங்களாக அச் சிடும் செலவுடன் ஒப்பிடும்போது மிகச்சிறி யதான செலவின் மூலம் அரசாங்கத்தால் மக்களிடம் அனைத்துச் சட்டங்களின் மின் வடிவையும் கொண்டு சேர்க்க முடிகிறபோதும் அரசு அதனை செய்திருக்கவில்லை. இது இங்கு மட்டுமல்ல தொழிநுட்ப தரங்களை நிர்ணயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் அளவுக்கு வளர்ந்திருக்கும் நாடுகளின் அரசுகளும் அவற்றை செய்ய முன்வருவதில்லை. அரசுகள் மக்களுக்குத் தேவையானதை செய்யவேண்டிய அமைப்பு என்கிற சிந்தனையை எல்லாம் முதலாளித்துவம் தகர்த்து எறிந்து பல காலம் ஆகிறது.

இந்த இணைய நூலகங்களும் இணைய புத்தகக் கடைகளும் வாசகருக்கும் நூலுக்கு இடையில் இருந்த உறவினை நிறையவே மாற்றியிருக்கின்றன. நீங்கள் ஒரு புதிய ஊருக்கு செல்கிறீர்கள், ஒரு புத்தகக் கடையைக் காண்கிறீர்கள், உள்ளே சென்று உங்களுக்கு பிடித்த நூல் ஒன்றை வாங்கிவிட்டு உங்களைப்பற்றி விபரங்கள் எதையுமே சொல்லாமல் நீங்கள் வந்து விடமுடியும். புத்தகத்தை வாசிப்பதற்கான உங்க ளுடைய உந்துதலுக்கு உங்களுடைய அடை யாளம் உங்களுக்குத் தேவையில்லை. அதே போலவே ஒரு நூலகத்துக்குள் போய் ஒரு புத்தகத்தை எடுத்து வாசித்துவிட்டு மீளவும் அங்கேயே வைத்துவிட்டு வர உங்களுக்கு உங்களது அடையாளம் தேவையில்லை. நீங்கள் எந்தவித அடையாளமும் இல்லாது வாசகனாக மாத்திரம் புத்தகத்தை அணுகமுடியும் என்ற உறவும் உரிமையும் உங்களுக்கும் புத்தகத்துக்கும் இடையில் இருந்தது. இந்த உறவை மாற்றியிருக்கின்றன இன்றைய இணையப் புத்தகக் கடைகள் மற்றும் இணைய நூலகங்கள். ஏதோவொரு அடையாளத்தை நீங்கள் தாங்கித் தான் அந்தப் புத்தகத்தை நீங்கள் வாங்க/படிக்க கூடியதாக இருக்கிறது.

இப்படிக் கண்ணுக்குத் தெரியாத வேலிகள் புத்தகங்களுக்கும் வாசகர்களுக்கும் இடையில் முளைத்துக் கொண்டே வருகின்றன. முளைக்கும் ஒவ்வொரு வெளியும் நாட்கள் செல்ல செல்ல மதில்கள் ஆகி, பின்னர் அகழிகள் ஆகி, கடைசியில் நீந்திக்கடக்கமுடியா சமுத்திரமாகி வாசகனை நிரந்தரமாக நூல்களிடமிருந்து பிரிக்க வல்லது. வாசகனிடம் பணம் இருக்கிற போதினில் மாத்திரம் ஒரு படகை வாடகைக்கு எடுத்துச் சென்று புத்தகங்களை வாசித்து விட்டுத் திரும்பும் துர்ப்பாக்கிய நிலையை ஏற்படுத்தவும் வல்லது. அதிகாரமும் இலாபமும் அதற்கு அடிபணிந்து கிடக்கும் தொழிநுட்பமும் புத்தகத்தின் எதிரிகளாக வாசகர்களைச் சுற்றிக் கொண்டிருக்கின்றன.

புத்தகங்களை அவற்றின் எதிரிகளிடம் இருந்து காக்கும் கடமையும் வாசகர்களைச் சுற்றித்தான் இருக்கிறது என்பதையும் மறவாதீர்கள்.




# நரகத்தில் ஆட்பட்டோம்

நாங்கள் பிறந்தது
பிறப்பிப்பதற்கு
தான்
என்ன செய்வது
அதிக நேரங்களில்
நாங்கள் கடமைக்குள் மூழ்கடிக்கப்படுகிறோம்
எழ நினைக்கும்
ஒவ்வொரு தருணமும்
தலையில் தட்டி
அடக்கப்படுகிறோம்
மீண்டும் மீண்டும்
தலையில் தட்ட மட்டுமே
உங்களால் முடியும்
எங்கள் கை ஓங்கும்
நேரம் வரும்
அன்று நீங்கள் கையை
மட்டும் அல்ல
கண்ணை நிமிர்த்திக் கூட
பார்க்க மாட்டீர்கள்
கடவுளின் தேவதைகள்
நாங்கள்
எதற்காய் சபிக்கப்பட்டோம்
இங்கு வாழ
சாபமில்லை இது
நரகத்தை மாற்ற
அனுப்பப்பட்டோம்
சேற்றில் செந்தாமரையாய்
வளர்ந்தெழுவோம்
வாழ்வை மாற்றுவோம்.

நிலாந்தி சசிகுமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூலக்கதை முதல் மேடைச்சுவடி வரை: படைப்புச் சுதந்திரமும் மூலத்துக்கு விசுவாசமும்

சி.சிவசேகரம்

எந்தப் புராண, காவியக் கதையும் கூத்துச் சுவடியாகும் போது அது மாற்றங்கட்கு உட்படும். எனினும் அம் மாற்றங்கள் மூலக்கதை பற்றிச் சமூகத்தில் நிலவும் அறிவை அடிப்படையாகக் கொண்ட ஒரு புதிய வாசிப்பாகவோ மாற்று வாசிப்பாகவோ திருத்தமாகவோ இருக்கலாம்.

சமூகம் மாறும் போது சமூக விழுமியங்கள் மாறுகின்றன. மூலக் கதையில் அதன் சமூகச் சூழலில் ஏற்புடையதாக இருந்த ஒரு விடயம், மாறிய சமூகச் சூழலில் ஒவ்வாததாகலாம். இராமாயண நிகழ்வுகளும் உபகதைகளும் காலங்காலமாகக் கூத்துகளாக அரங்கேறியுள்ளன. அவற்றுட் பொதிந்திருந்த அற விழுமியங்கள் ஏற்கத்தகாதனவாக இருந்த போதும் கூத்துச் சுவடிகளில் அவை நீண்ட காலமாக மாற்றமின்றிப் பேணப்பட்டன. பல சமயங்களில், மூலக் கதைகளில் உள்ள அநீதிகளை விளங்கியோ விளங்காமலோ, மூல வடிவை ஒட்டி அவற்றை வழங்குவதை நியாயப்படுத்தும் போக்கை நாம் அறிந்திருப்போம்.

துரோணர் ஏகலைவனுக்கு இழைத்த அநீதி வர்ணாசிரம தருமத்தின் அடிப்படையில் நியாயப்பட்டது. பாரதப்போருக்கு முன்பிருந்தே பாண்டவர்களின் நலனுக்காக அறஞ்சாராத செயல்கள் நிகழ்ந்தன. போரின் போது அவ்வாறு பல நிகழ்ந்தன. ஆனால் நல்லோர்-தீயோர்,• தருமம் - அதருமம் எனுமாறான முரண்களைக் காட்டி ஒவ்வொரு அநீதிக்கும் நியாயங் கற்பிக்கப்பட்டது. தேவர்களின் சார்பாக அசுரர்களை அழிக்கப் பல்வேறு தெய்வங்கள் அநீதியாகக் குறுக்கிட்டுள்ளன. தேவ, அசுர அடையாளங்கள் கூறும் சமூக அடையாளங்கள் பற்றிய சமூகக் கவனிப்புப் பலவீனமானது.

எவ்வாறாயினும் சமூக நீதிக்கான வேட்கை பல்வேறு வடிவங்களிற் கிளர்ச்சியாகப் புலப்பட்டுள்ளது. தமிழகத்தில் ஈ.வே.ரா. (பெரியார்) தலைமை தாங்கிய பகுத்தறிவு இயக்கம் இவ்வகையில் முக்கியமான ஒரு வரலாற்றுப் போக்கெனலாம். வர்ணாசிரம் நியாயப்படுத்திய சாதி, பால் அடிப்படையிலான ஏற்றத்தாழ்வு மட்டுமன்றி சமஸ்கிருதம், சமஸ்கிருதமல்லாத மொழி ஏற்றத்தாழ்வும் சென்ற நூற்றாண்டிற் கடுமையாகக் கேள்விக்குட்பட்டன. அதன் எதிரொலிகளைக் கூத்து மேடைகளிலும் கேட்க முடிந்தது. கீமாயணம் எனும் இராமாயண மறுப்பு முதல் பீற்றர் ஹாலின் (Peter Hall) மகாபாரதத்தின் மனிதகுல வியாக்கியானம் உட்பட, இந்துத்துவ நோக்குடைய, சினிமாத்தனமான மகாபாரத, இராமாயண வியாக்கியானங்கள் வரை, மூலத்தினின்று வெவ்வேறு வகை விலகல்களே. இவற்றுக்கும் ஷேக்ஸ்பியர் நாடகங்கள் சிலவற்றின் நவீன வடிவங்கட்கும் அடிப்படையிற் பாரிய வேறுபாடுகள் உள்ளன. பின்னையவை மூலச் சுவடியையொட்டி மேடையேற்றத்திற் புத்தாக்கங்களாகவோ அல்லது மூலத்தைத் தழுவிய புத்தாக்கங்களாகவோ அமைகின்றன. பொதுவாக மூலத்தின் நோக்குடன் முரணின்றி அவை அமைவது கவனிக்கத்தக்கது.

எவ்வாறாயினும் மூலத்தினின்று கணிசமாகப் பெயரும் எச்சுவடியும் விசுவாசமானதல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**துரோணர் ஏகலைவனுக்கு இழைத்த அநீதி வர்ணாசிரம தருமத்தின் அடிப்படையில் நியாயப்பட்டது. பாரதப்போருக்கு முன்பிருந்தே பாண்டவர்களின் நலனுக்காக அறஞ்சாராத செயல்கள் நிகழ்ந்தன.**

இங்கு நாம் கவனிக்கும் பிரச்சனை மூலத்தினின்று விலகுதற்கு எவருக்குமுள்ள உரிமை பற்றியதல்ல. விலகலின் நோக்கமும் விளைவுகளும் பற்றியது. மூலத்துக்கு விசுவாசம் என்பது மூலத்துடன் உடன்பாடும் உடன்பாடின்மையும் பற்றிய வினாவுமாகிறது. இவ்விடத்துத், திருத்திய அல்லது மாற்றிய சுவடி தனது நோக்கத்தைப் பற்றி நேர்மையாயும் தெளிவாயும் இருப்பது முக்கியம்.

ஒரு சுவடியைத் திருத்தவோ மாற்றி எழுதவோ நியாயமான பல காரணங்கள் உள்ளன. மூலக்கதைச் சூழலை அவையோர் விளங்குவதில் உள்ள இடர்கள பல. மூலத்தின் மொழிப் பாவனை சார்ந்த சிக்கல்கள் உள்ளன. மொழிபெயர்ப்புச் சிக்கல் போக, வட்டார வழக்கையும் மூலத்தின் உரையாடல்களின் மொழியையும் அவையோர் விளங்குவரா என்ற சிக்கல் உள்ளது. மௌனத்தின் மொழி உட்படக் காட்சிப்படுத்தல் வழங்கும் வசதிகளையும் வாய்ப்புகளையும் முழுமையாகப் பயன்படுத்துமாறு மேடைச் சுவடியை அமைத்தலின் சவால்கள் போன்றனவும் உடனடியாக மனதுக்கு வருவன. மூலத்தின் நோக்கத்தைச் செவ்வையாக விளங்கின் அதற்குக் கேடின்றி மேடைச் சுவடியை அமைக்கலாம். பிரச்சனை எங்குள்ளதெனில், மூலத்தின் ஒவ்வொரு வாக்கியமும், வாக்கியங்களிடையான உறவும், தனியாகவும் கூட்டாகவும் ஒட்டுமொத்தமாகவும் அவற்றின் தாக்கமும், பாரிய கவனிப்பை வேண்டுவன.

நாம் அதிகளவிற் பிரச்சனைகளை எதிர்நோக்குமிடம் அயல்மொழிச் சுவடிகளின் தமிழாக்கங்கள் எனலாம். மூலச் சுவடிக்குரிய வாழ்க் கைப் பின்புலமும் அதையொட்டிய சமூக, அற விழுமியங்களும் இலக்கு மொழிக்குரிய சமூகச் சூழலுக்கு அந்நியமாயிருக்கும் வாய்ப்புப் பெரிது. அவ்வாறே மொழி சார்ந்த சிக்கல்களும் உள்ளன. இவற்றுக்கு மப்பால் அரங்கு பற்றிய நோக்கு வேறுபடுதலும் அரங்குடனான பரிச்சயக் குறைபாடுகளும் சுவடிகளின் மொழிபெயர்ப்புகட்கு இடைஞ்சலாகின்றன.

ஐரோப்பிய மொழி நாடகங்கள் பல, குறிப் பாக ஆங்கில நாடகங்கள், ஆசியச் சூழலில் மூலச் சுவடியைக் கொண்டே முதலில் மேடையேறின. அவை அயல் மொழிப் பரிச்சயமுடையோரை ஓரளவு எளிதில் எட்டின. சில சுவடிகள் தமிழாக்கி மேடையேறியுள்ளன. எனினும் அயலிலிருந்து தென்னாசிய மொழிகளை அடைந்து ஏற்புப் பெற்றவை மிக அண்ணளவான மொழி பெயர்ப்புகளும் அவற்றினும் அதிகமாகத் தழுவல்களுமே.

இந்தியத் துணைக் கண்டத்தின் பண்பாட்டுப் பொதுமைகளையும் மொழிகளிடையே உள்ள உறவையும் மீறி இராமாயணமும் மகாபார தமும் அவை சார்ந்த கிளைக் காவியங்களும் வேறுபட்ட விதங்களிற் பல்வேறு மொழிகளிற் கூறப்படும் காரணம், வெறுமனே மொழிமாற்றஞ் சார்ந்ததல்ல. மூலத்திற் காணும் சமூக, அறவிழுமியங்கள் மொழி மாற்றச் சூழலின் விழுமியங்களுடன் வேறு படுவது ஒரு முக்கிய காரணமாகும்.

உதாரணமாக, வால்மீகி இராமாயணமும் கம்ப இராமாயணமும் கதை மாந்தரின் இயல்புகளிலும் நிகழ்வுகளின் சித்தரிப்பிலும் வேறுபடுங் காரணம், அவற்றின் கால, இடச் சூழல்களின் வேறுபாடே. இங்கு மூலத்துக்கு விசுவாசம் என்பது மிகவும் அடிப்படையான விடயங்கட்கு மட்டுப்படுகிறது. எனவே, கம்ப இராமாயணம் போன்று, பல்வேறு ராமாயணங்களும் வால்மீகி ராமாயணத்தின் தழுவல்களே.

மொழிபெயர்ப்பு ஏன் தேவைப்படுகிறது என விசாரித்தால், அறிவுத் துறைகளிற் போலன்றி ஆக்க இலக்கியத் துறைகளில் மொழி பெயர்ப்பை விடத் தழுவல் ஏன் உவக்கப் பெறுகிறது என விளங்கும். ஒரு செய்தியையோ விவரணத்தையோ விளக்கத்தையோ வழங்குவது ஆக்க இலக்கியத்தின் நோக்கமாயிருப்பினும், அதை வழங்கும் வடிவமும் முறையும் அதை வழங்குவதற்காக உருவாக்கும் துணை அமைப்புகளும் போன்றவை ஆக்க இலக்கியத்தில் முக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானவை. இவை அறிவுத் துறைகளில் இல்லாதளவு வலிய அழகியற் பரிமாணங்களுடையன. அறிவுத் துறையொன்றில் மக்களிடையே தகவல்களைக் கொண்டு செல்லப் பலவாறான கருவிகள் பயன்படுவன. அறிவுக்குரிய விடயங்களைப் பரந்த வாசகர்களிடையே கொண்டு செல்ல அலங்கார மொழிநடை பயன்பட லாம். ஆனால் அதிற் தகவல்களைத் தவறாக விளங்கும் அபாயமுண்டு. தகவல்கட்குச் சுவையூட்டுவதற்காக உண்மையான பிற தகவல்களையும் புனைவுகளையும் புகுத்தலாம். எனினும் அவை சொல்லப் புகுந்த விடயத்தினின்று கவனத்தைப் பெயர்ப்பதுடன் எழுத்தின் நோக்கத்தையும் சிதைக்கலாம். இதை நாங்கள் இன்று வாசிக்கும் விஞ்ஞான, தொழில்நுட்பக் கட்டுரைகளில் மட்டுமன்றி ஆன்மிகம் முதல் வரலாறு வரை யான பலதுறைகள் சார்ந்த ஆக்கங்களிலும் காணலாம். இவற்றை மூலத்திற்கு இழைக்கும் துரோகமாகவே கொள்வோம்.

ஆக்க இலக்கியம் பலவாறும் புனைவு சார்ந்தது. புனைவு என்பதால் புனைவின் விகாரப்படுத்தலை ஏற்க இயலுமா? ஆக்க இலக்கியமொன்றன் மொழிபெயர்ப்பு எவ்வளவு செவ்வையானது என்பது, மொழிபெயர்ப்பாளர் மூல மொழியிலும் இலக்கு மொழியிலும் எவ்வளவு ஆற்றலுடையவர் என்பதற்கப்பால், வழமையான மொழிக்கு வெளியே இயங்கும் மொழி வழக்கையும் நாடகச் சூழலிற் சொற்கள் தமது அகராதிப் பொருளுக்குப் புறம்பான பொருளை ஏற்பதையும் பற்றி அவருடைய தெளிவிலும் தங்கியுள்ளது. ஒரு மொழியில் இயலுமான அங்கதம், சிலேடை போன்றன பற்றிய விளக்கம் இல்லாவிடின் மொழிபெயர்ப்பு அவற்றைத் தவறவிடும். அண்மைய தமிழாக்கங்கள் பலவும் விறைப்பான மொழிநடையைக் கொண்டுள்ளமைக்குக் காரணங்கள் மொழியை யாந்திரீகமாக விளங்கலும் கையாளலும் என நினைக்கிறேன். இத்தகைய கோளாறுகள் எவ்வகை எழுத்துச் சுதந்திரத் துள்ளும் அடங்கா.

தழுவல்களின் நோக்கம் பற்றி முன்குறிப்பிட்டேன். தழுவல்கள் மூலத்தின் முக்கியமான கூறுகளைச் செவ்வையாகப் புலப்படுத்தும் நோக்குடையவை. செய்தி பார்வையாளர்களைச் சென்றடைவது முக்கியம் என்பதால் மூலத்தினின்று கணிசமான விலகல்கட்கு இடமுண்டு. மூலச் சுவடியில் எதிர் பார்த்த தாக்கம் தழுவலிற் தவறலாம். தழுவல் வேறு திசைகளில் அழுத்தம் வைக்கலாம். எனினும் மூலத்துக்கு விசுவாசம் என்ற நோக்கை அடிப்படையிற் பேணாவிடின், அச் சுவடியைத் தழுவல் என்பதினும் பொருத்தமாக, மூலத்தின் அருட்டுணர்வால் அமைந்த சுவடி என்பது தகும்.

**சமூகம் மாறும் போது சமூக விழுமியங்கள் மாறுகின்றன. மூலக் கதையில் அதன் சமூகச் சூழலில் ஏற்புடையதாக இருந்த ஒரு விடயம், மாறிய சமூகச் சூழலில் ஒவ்வாததாக லாம்.**

மேற்கூறிய விலகல்கள் யாவும் ஏட்டுச் சுவடியைப் பற்றியன. ஏட்டில் உள்ளதை அப்படியே மேடையேற்றுவது எளிதல்ல.

மேடையமைப்பு முதல் பொருத்தமான நாடக மாந்தர் வரை, மொழி நடை முதல் மேடைச் சித்தரிப்பு வரை, பிரதியை ஆக்கியவரின் நோக்கமும் மேடையேற்றுபவரது நோக்கமும் வேறுபட இடமுண்டு. எனவே ஏட்டுச் சுவடியை மேடைச் சுவடியாக்கும் போது நிகழும் மாற்றங்கள் ஏட்டுச் சுவடியை ஆக்கியவரின் உடன்பாட்டுடன் நிகழ்வது தகும். முடிந்தாற் கலந்தாலோசனையுடன் நிகழ்வது சிறப்பு.

நாடகம் என்பது கூட்டு முயற்சி என்கிறோம். எனின் அக் கூட்டு முயற்சி மூலச் சுவடிக்கோ மேடைக்கான அதன் தழுவலுக்கோ விசுவாசமாக இருப்பதை எவ்வாறு உறுதி செய்யலாம்?

சினிமா உலகு நாவல்கள் பலதைத் திரைப் படங்களாக்கிய போது நாவலின் முக்கியமான சில கூறுகள் மட்டுமன்றி அதன் செய்தியுஞ் சிதைந்துள்ளது. இதன் காரணம், திரைப்படத் தயாரிப்பாளருக்கும் இயக்கு நருக்கும் கதையில் சினிமாத் தன்மை முக்கியம். மூலத்தில் இல்லாத போது, அது வலிந்து நுழைக்கப்படுகிறது. சினிமாவில் அதன் தவிர்க்கவியலாமைக்குக் காரணம், சினிமா என்பது மேடையினின்று வேறு பட்ட ஒரு ஊடகம் என்பதுடன் அதற்கென ஒரு மொழி உள்ளமையும் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகம் மேடையேற்றத்திற்கு மேடை யேற்றம் மாற்றங்களை உள்வாங்கினும், ஏட்டுச் சுவடிக்கும் மேடைச் சுவடிக்கும் பாரிய முரணின்மை முக்கியம். அவ்வாறு முரண் இருப்பின், சுவடிகள் வெவ் வேறாகும்.

மூலத்துக்கு விசுவாசம் என்பதை, இவ் விடத்து, மேடையாக்கத்துக்கு எழுதிய ஏட்டுச் சுவடியை வைத்து அல்லது அதன் ஆதாரச் சுவடியை வைத்துக் கருதலாம். பல சமயங்களில், நவீன நாடக மேடை ஒரு சுவடியை மேடையேற்று முன்பே அதன் மூலம் எனக் கூடிய சுவடியைப் பற்றிய அக்கறையை இழக்கிறது. அதன் முக்கிய விளைவுகளில் ஒன்று நாடகம் எனுங் கூட்டு முயற்சியில் சுவடியின் கர்த்தாவின் இடம் கைதவறுகிறது. அதன் பயனாக, முதல் மேடையேற்றத்துடன் இல்லாவிடின், அடுத் தடுத்த மேடையேற்றங்களின் பின் சுவடிகள் அதன் கர்த்தாவின் நோக்கினின்று விலகும் சூழ்நிலை உருவாகிறது.

ஒரு நாடகச் சுவடியின் ஆசிரியர், அவை யோரைப் பொறுத்தவரை நாடக மாந்த ரையும் மேடையமைப்புடனும் பிற பகுதி களிற் பங்களிப்போரையும் விடத் தொலை விலேயே இருப்பதால், நாடக இயக்குநர், முக்கியமான நடிகர்கள், பின்னணியிற் பாடு வோர் போன்ற எவரதும் திரிப்புக்களைக் கட்டுப்படுத்த இயலாதவராகிறார். இவ் வாறு, இயல்பாகவன்றி, 'ஆசிரியரின் இறப்பு' வலிந்து நிகழ்கிறது.

சில சமயங்களில் அவையோரின் நுண் ணுணர்வைத் தாழ்வாக மதிப்பிட்டோ, மட் டகரமான ரசனைக்குப் பணிந்தோ அரசியல் நீரோட்டத்துடன் இசைய வேண்டியோ மூலப்பிரதியின் பகுதிகள் நீக்கவும் மாற்ற வும் படலாம். இத்தகைய செயல்களை மூலத்துக்கு விசுவாசமின்மை என்பதை விட மூலத்துக்குத் துரோகம் என்பது தகும்.

மூலத்தைச் செவ்வையாக விளங்காமை யாலோ மாற்றங்களின் தாக்கம் பற்றிய புரிதலின்மையாலோ நிகழும் விலகல்களைத் தவறுகள் எனலாம். விலகல்கள் எத்தகைய முரண்களைக் குறிக்கின்றன என்று அறிந்தே நிகழும் விலகல்கள்; தவறுகளல்ல. அவை குற்றங்கள் என்பது என் கருத்து.


இக் கட்டுரை சில விடயங்களைப் பொதுப்படக் கூறுங் காரணத்தாற் குறிப் பான நிகழ்வுகளைப் பேசாது தவிர்த்துள் ளேன். மேலும் விரிவாக இக் கட்டுரையின் விடயம் பேசப்படும் போது குறிப்பான விடயங்களை முன்வைத்துப் பேசுவது பொருந்தும்.

# நிகழ்வுகள்

தேசிய கலை இலக்கியப் பேரவை கொழும்பில் 19.08.2018இல் தமிழ்ச்சங்க வினோதன் மண்டபத்தில் நடாத்திய "நூலறிதல்" நூல்களின் அறிமுகமும் கலந்துரையாடல் நிகழ்வின்போது



கடந்த 29.05.2018 அன்று சமூகவிஞ்ஞான படிப்புவட்ட கருத்தரங்கின் "இயற்கை விரோத பெருமுதலாளியப் போக்கும் தூத்துக்குடிப் படுகொலைகளும்" நிகழ்வில் தூத்துக்குடி படுகொலைகளின் போது கொல்லப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்திய போது..





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யார் மெல்லியர்கள்?

வனஜா நடராஜன்

சித்ரா வேர்த்துக் களைத்து வீட்டை அடைந்தாள். நல்லதொரு தேத்தண்ணி குடித்தால்... அந்தத் தேத்தண்ணியை யாரேனும் ஊற்றித் தந்தால்... நினைத்தவள் அந்தச் சிந்தனையை ஒதுக்கி விட்டு வீட்டுக்குள் நுழைந்தாள். ஏனெனில் அது நடைமுறைச் சாத்திய மற்றது.

சித்ராவின் அம்மா முற்றத்தில் இருந்து ஆடுகளுக்குக் குழை ஒடித்துக் கொண்டிருந்தாள். அம்மாவைக் குழப்பக்கூடாது. இனி நிலத்திலிருந்து அம்மா எழுவதென்றால், அவள் உடற்பருமன் அவளுக்கு ஒரு உபாதை. அதைவிட அவள் கால்வாதம் வேறு.

சித்ரா சேலையைக் கழற்றிவிட்டு, வீட்டுக்குப் போடும் கவுணை அணிந்து கொண்டாள். இனி அவள் பம்பரமாகச் சுழல வேண்டும். அவள் அம்மாவின் உடுப்புகளும் அவளின் உடுப்புகளும் தோய்க்க வேண்டும்.

ஆடுகளுக்குப் புண்ணாக்கு குழைத்து வைத்து, ஆட்டுப்பட்டி கூட்டி அத்தோடு மாடுகளின் வேலையும் பார்த்துவிடவேண்டும். காலையில் வேலைக்குப் போகும் போது சமைத்த பாத்திரங்களை அவசரத்தில் அப்படியே போட்டது போட்டபடி போனவள் அவைகளை விளக்க வேண்டும்.

காலையில் சித்ரா காலைச்சாப்பாடு, மதியச் சாப்பாடு இரண்டும் சமைத்தே வேலைக்குப் போவாள். இரவில் அதற்கான முன்னேற் பாடுகள் சிலவற்றைச் செய்ய வேண்டும். இவ்வளவும் முடித்துத்தான் அவள் தன் மேற் படிப்புக்கான நேரத்தை ஒதுக்கவேண்டும்.

"எடி புள்ளை மாட்டிலை பாலைக்கறந்து போட்டு மற்ற வேலைகளைப்பார். பால் வாங்குகிற ஆட்கள் வரப்போகிறார்கள்." சித்ராவின் அம்மா முற்றத்தில் இருந்து குரல் கொடுத்தாள்.

சித்ராவிற்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது. எப்படி ஒரு தனி ஆளாலை இவ்வளவையும் செய்ய முடியும். இருந்து கொண்டு வேலை சொல்லுவா. ஆம்பிளைப் பிள்ளைகளுக்கு வேலை கொடுக்கமாட்டா. அவங்களை மாட்டு வேலையைப் பார் என்றால் மாடுகளை வில்லுங்கோ என்பான்கள். இடம் கண்ட இடத்திலை மடம் கட்டுகிறார்கள். நான் என்ன இயந்திரமா? எண்ணியவள் பாலுக்கு ஆட்கள் காத்து கொண்டு நின்றால்... அதைவிட அரியண்டம் வேறில்லை. அத்துடன் வீட்டிலை பால் குடிக்க மட்டும் ஆம்பிளைகள் முன்நிற்பினம். ஆடு, மாடு வேலைகள் செய்யாயினம். அண்ணன் எக்கவுண்டனாம். மற்றவை கம்பஸ்சாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் பி.எஸ்.சிதான். பள்ளிக்கூடத்திலை கத்தி சனி, ஞாயிறிலை ரியூசன் வேறு நடத்தி... இந்தக் குடும்பத்துக்கு கூடின பங்கு உழைப்பு இந்த சித்ராதான். சித்திரம் உழைக்குமா? உழைக்கிறதே. எண்ணிச் சிரித்துக்கொண்டாள்.

பாத்திரங்களை வேகமாக விளக்கிவிட்டு மூன்று மாட்டிலையும் பாலைக் கறந்து போத்திலில் ஊற்றி வைத்தாள்.

இப்பொழுது தாய்க்கும் தனக்கும் தேநீர் தயாரித்தாள். ஒரு மாட்டில் கன்று பாலை ஊட்டிவிட்டது.

சித்ரா இரவுச்சமையலில் ஈடுபட சித்ராவின் தாய்க்கு நல்லம்மாமி பேச்சுத்துணைக்குச் சேர்ந்தாள்.

நல்லம்மாமி வீட்டுக்கு வந்தால் சித்ராவுக்கு நெஞ்சு படபடவென அடிக்கும். அம்மாவுக்கு என்ன குழை அடிக்க வந்திருக்கிறாளோ நல்லம்மாமி. நல்லம்மாமி சித்ராவை தன் தமக்கையின் மகனுக்கு மணம் முடித்து வைக்கத் திட்டம். சித்ராவுக்கு முதலில் சற்று விருப்பம் இருந்தது. ஆனால் நல்லம் மாமி ஊரில் சித்ராவைத் தான் தேர்ந்தெடுக்கச் சொன்ன காரணம் "பெட்டை வேலைக்குப் போனாலும் வீட்டு வேலையும் மாடு போலச் செய்வாள். பிரச்சினை இல்லை" சித்ராவுக்கு கலியாணம் அருவருத்துப்போனது.

சித்ரா நல்லம் மாமிக்குத் தேநீர் ஊற்றிக் கொண்டு வந்தாள்.

"இஞ்சைபார் நல்லம், ராஜேசுக்கு குடல் இறக்கமாம். என்ன செய்வாள். பொம்பிளை களின்ரை உடம்பு தாங்குமோ? மெல்லிய உடம்பு. ஆம்பிளைகளுக்கு என்ன வேலை செய்தாலும் உடம்பு தாங்கும். பொம்பிளை யளாலை எல்லாத்துக்கும் மாரடிக்க முடி யுமோ?"

"பொம்பிளையகளுக்கு ஓய்வு வேணும். அவளும் நாலு பிள்ளைகளோட மாரடிக் கிறாள். அவளுக்கு வேலை கூட. கொஞ்சம் அவள் வேலைகளைக் குறைக்கவேண்டும்" சித்ராவின் அம்மா, நல்லம்மாமியுடன் சேர்ந்து ராஜேசுக்காக பரிந்து பேசிக்கொண்டாடுகிறாள்.

"ஓமடி, என்னாலும் அவளுக்கு உதவ முடி யாது" நல்லம் மாமியும் சேர்ந்து கவலைப் பட்டாள்.

சித்ரா இவற்றைச் செவிமடுத்துவிட்டு நல் லம் மாமியிடம் தேநீரைக் கொடுத்துவிட்டுக் குசுனிக்குள் நுழைந்தாள். மிகுதி நின்று கேட்க நேரம் இல்லை. அது மட்டுமல்ல காதில் விழுந்தால் அது குறித்து ஆழமாக சிந்திக்க அவகாசமுமில்லை அவளுக்கு.

இனித் தன் மூன்று ஆண் சகோதரங் களுக்கும் தனித்தனியாக விருந்து படைக்க வேண்டும். அண்ணனுக்கு முட்டைப் பொரி யல் வேண்டும். பாலுவுக்கென்று மினக் கெட்டு ஒவ்வொரு நாளும் குழல் புட்டும் சம்பலும். ரவிக்குப் புட்டுக்குச்சுடச்சுட குழம்பு வைக்க வேண்டும். அவன்கள் தமக்கை படும் சிரமங்களை உணரான்கள். என்ன விநோத மான உடம்பு? வீடு? எண்ணிக்கொண்டாள் சித்ரா.

"என்ன ஜென்மம் பெண்ஜென்மம். என்ர சகோதரங்கள் வேலைக்குப்போய்வந்து கடைக் குக் கூடிப் போவானுகள்"

"எனக்கு இண்டைக்குச் சரியா உடம்பு உழையுது. எனக்கும் ஒரு முட்டை அவிப் பம்" எண்ணிக் கொண்ட சித்ரா முட்டைப் பேணியை எடுத்துப் பார்த்தாள். ஒரு முட்டை தான் இருந்தது. "அண்ணனுக்கு முட்டை கிடக்குது. எனக்கு?"

அந்த நேரம் பார்த்து சித்ராவின் அண்ணன் வந்து சேர்ந்தான்.

"அண்ணா" சித்ரா குசினிக்குள் இருந்து குரல் கொடுத்தாள்.

"வந்த கையோடை கடைக்குப்போய் முட்டை வேண்டிவா"

"எனக்குப் பஞ்சியாய் இருக்குது. நீபோய் வேண்டு. எனக்குக் கட்டாயம் முட்டைப் பொரியல் வேண்டும்."

சித்ராவுக்கு ஆத்திரம் பற்றியது. அவனுக் குப் பஞ்சி. எனக்கு உடம்பு உழையுது. அத் தோடை தலைக்குமேல வேலை. இனி இரவு அவற்றை சேர்ட் அயன் பண்ணவேண்டும்." மனதுக்குள் பொருமினாள் சித்ரா.

அப்பொழுது அம்மா குசினிக்குள் வந்தாள்.

"முட்டை இல்லையோடி சித்ரா"

"ஒன்றுதான் இருக்குது, எனக்கு ஒன்று வேணும்"

"எடி புள்ளை கொண்ணனுக்கு முட்டை யைக் கொடு. அவன் ஆம்பிளையடி. பொம் பிளையள் எதோடையும் சாப்பிடுவாளவை யடி. ஆம்பிளை அப்படியாடி. அவனுக்கு உழைச்ச அலுப்பு வேறு"

"யார் மெல்லியர்கள்" சித்ராவின் மனதில் மிகப்பெரிய வினா தொக்கிட்டு நின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் போன கிராமங்கள்



கஸ்ரப்பட்டு உழைச்ச காசில்
கஞ்சி காய்ச்சி குடித்துவிட்டு
கூட்டுக் குடும்பமாய் கூடி வாழ்ந்த கிராமங்கள் எங்கே?
வேலிப் பொட்டுக்கூடாய்
நுழைந்து சென்று
பண்டமாற்றுச் செய்து
பசியாறி வாழ்ந்த
கிராமங்கள் எங்கே?
மரங்களின் கீழமர்ந்து படித்தாலும்
பாடங்களோடு பண்புகள் சொல்லித் தந்த பள்ளிகள் நிறைந்த
கிராமங்கள் எங்கே?
சுற்றத்தார் சுகம் விசாரித்து
பல கதைகள் பேசிப் பறைந்து
சுகதேகியாய் மனிதர்களும்
மனங்களும் வாழ்ந்த
கிராமங்கள் எங்கே?
ஊருக்கொரு ஆலமரம்
அதன் கீழமர்ந்து
ஆறுதலாய் அனைவரும்
அன்போடு பேசி மகிழ்ந்த
கிராமங்கள் எங்கே?
கிராமத்துக்கொரு குலதெய்வம்
கூடி அனைவரும்
வழிபாடு செய்து வாழ்ந்த
கிராமங்கள் எங்கே?
தெருவெல்லாம் நிழல் மரங்கள்
ஊரெங்கும் பசுமை நிலங்கள்
இயற்கையோடு இணைந்த
இல்லங்கள் நிறைந்த
கிராமங்கள் எங்கே?
சோம்பல் போக்கும் விளையாட்டுக்கள்
மகிழ்வு தரும் பண்டிகைகள்
பரிமாறி உண்ணும் பண்பாடு
கலாச்சாரம் போற்றும்
கலைகள் நிறைந்த
கிராமங்கள் எங்கே?
காலம் செய்த கோலம் தன்னில்
கிராமங்களும் நகரங்களாகி
நம் கண் முன்னே
காணாமல் போனதுவே!



எளிமைக்கவி றொபின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மறைந்திருக்கும் உண்மை

அவனின் மொழி
உனக்குப்புரிவதில்லை
உனது மொழியோ அவனுக்குப் புரிவதில்லை
அவன் உன் எதிரியென
தானே நம்புகின்றாய்..
அவனைக் கொன்றுவிட நீ
எப்பொழுதும் தயாராக
ஆயுதம் ஏந்திய வண்ணம்
தானே இருக்கின்றாய்
அவனோ உன்னை
சந்தேகத்துடன் தானே பார்க்கின்றான்
நீ அவனின் எதிரியென
தானே அவன் நம்புகின்றான்
உன்னைக் கொன்றுவிட அவன்
எப்பொழுதும் தயாராக
ஆயுதம் ஏந்திய வண்ணம்
அல்லவா இருக்கின்றான்.

அடுத்த கணத்தில்
எதுவும் நடக்கலாம்
நீ அவனைக்கொன்றுவிட்டு
வெற்றிவாகையை அணியலாம்
அவனோ உன்னைக் கொன்றுவிட்டு
வெற்றிவாகையை அணியலாம்
எது எவ்வாறு நடந்தாலும்
உங்கள் இருவருக்கும்
தோல்வி தான்
உங்கள் இருவருக்கும் தெரியாத தொரு
உண்மை உண்டு
நீ தான் அவனது சகோதரன்
அவன் தான் உனது சகோதரன்
உங்கள் இருவரினதும் இனம்
மனித இனமே தான்
இருவரும் கடவுளின்
உன்னத சிருஷ்டிதான்.

ஹேமசந்திர பதிரண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்காணிப்பு அரசியல்: சில எச்சரிக்கைக் குறிப்புகள்

தெ. ஞானசீர்த்தி மீநிலங்கோ

## அறிமுகம்

உங்கள் படுக்கையறைகள் உளவுபார்க்கப் படின் உங்கள் உணர்வு எவ்வாறிருக்கும்? அந்தரங்கம் எனவொன்று இல்லை என அறியும்போது நீங்கள் என்ன செய்வீர்கள்? உங்களுடன் எவ்வகை உறவுமற்ற எவ ரேனும் உங்களைப் பற்றி அனைத்தையும் அறிந்திருந்தால் உங்கள் மனநிலை என்ன வாக இருக்கும்? அச்சந் தரக்கூடிய ஒரு சூழ் நிலையுடன் இக் கட்டுரையைத் தொடங்க வேண்டி இருக்கிறது. நாம் விரும்பியோ விரும்பாமலோ உலகம் அத் திசையிற் பயணிக்கிறது.

சில அண்மைக்கால நிகழ்வுகளும் வெளிச் சத்துக்கு வந்துள்ள மோசடிகளும் நாம் கண் காணிக்கப்படும் விதம் பற்றியதோர் சித்தி ரத்தை எமக்குத் தந்துள்ளன. ஒருபுறம் நவீன தொழில்நுட்ப வசதிகள் அதை இயலு மாக்கின. இன்னொரு புறம் அத் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துவதனூடு எம் மைக் கண்காணிக்கும் வாய்ப்பை இலகுவாக வழங்குகிறோம்.

பிரபல சமூக வலைத்தளமான ஃபேஸ்புக் (face book) தனது பயனாளிகளின் தகவல் களை இன்னொரு நிறுவனத்திற்கு விற்றமை அண்மையிற் தெரியவந்தது. அத்துடன், ஃபேஸ் புக் தனது பயனாளிகளின் தரவுகள் அனைத் தையும் சேகரித்திருப்பதும் பிற தேவைகட் காக அவற்றை விற்று ஏராளமான வரு வாயை ஈட்டியதும் ஆதாரங்களுடன் நிறு வப்பட்டுள்ளது. தனிப்பட்ட பயனர்களின் தகவல்களை விற்று பேஸ்புக் காசு பார்த்த கதை இது.

அதே வேளை, கண்காணிப்பு சர்வவியாப கமாகிவிட்ட உலகில் யாருமே விலக்கல்ல என்ற உண்மை எமக்குச் சொல்லப்பட்டி ருக்கிறது. அதைச் சொன்னது எந்த் அமைப்போ, நிறுவனமோ, அரசோ அல்ல. தங்கள் உயிர்களைத் துச்சமாக மதித்து மனிதகுல மாண்பிற்காக அவ்வுண்மையை ஆதாரபூர்வமாக வெளிக்கொணர்ந்தோர் சில தனிமனிதர்கள். அது அவர்கள் சொன்ன நம்மைப் பற்றிய கதை. மொத்தத்தில் நாம் கண்காணிக்கப்படுவது பற்றிய இக் கதை யின் தீவிரம் விளங்கும் போது நாம் எவ்வெவ்வாறு கண்காணிப்புக்குட்படுகி றோம் என்பதை உணர்ந்து அஞ்சாமல் இருக்கவியலாது.

### ஃபேஸ்புக்: அந்தரங்கம் குறித்த கேள்விகள்

பேஸ்புக்கின் மோசடியை வெளிச்சத்துக் கொண்டுவந்த 'குழலூதி' (whistleblower) கேம் பிரிஜ் அனலிடிக்கா (Cambridge Analyti- ca) நிறுவன ஊழியரான கிறிஸ்தொஃபர் வைலி (Christopher Wylie) கேம்பிரிஜ் அனலிடிக்கா 50 மில்லியன் ஃபேஸ்புக் பயனாளிகளின் தகவல்களை ஃபேஸ்புக்கி லிருந்து பெற்ற தாகவும் அதைப் பாவித்து அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளில் செல் வாக்குச் செலுத்தி டொனல்ட் ட்ரம்ப் வெற்றிபெறப் பணியாற்றியதாகவும் அவர் தெரிவித்தார். அவ்வாறே, ஐரோப்பிய ஒன்றி யத்திலிருந்து பிரித்தானியா வெளியேறு தற்கான பிரசாரத்திற்கு வேலை செய்ததா கவும் சொல்கிறார். அத்துடன், ஃபேஸ்புக் வணிக நோக்கங்களுக்காகப் பயனர்களின் தகவல்களைச் சேகரித்து வியாபாரம் செய்வ துடன் அதற்கும் ஒரு படி மேற் சென்று ஃபேஸ்புக் செயலி (app) தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக்கேட் பதாகவும் சொல்லியிருக்கிறார்.

கேம்பிரிஜ் அனலிடிக்காவின் செயற்பாடு களை அம்பலமாக்க விரும்பிய பிரித்தானி யாவின் சனல்-4 தொலைக்காட்சி ஒரு இரகசியத் திட்டத்தில் இறங்கியது. சனல்-4 ஊடகவியலாளர் ஒருவர், தன்னை இலங் கையைச் சேர்ந்த பணக்காரர் என்று கூறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் தேர்தலில் வெல்ல கேம்பிரிஜ் அனலிடிக்காவின் உதவியை நாடி, அவர்களுடன் தனது உரையாடல்களை இரகசிய கமெராவில் பதிவு செய்கிறார். இலங்கையைச் சேர்ந்த பணக்காரர் என்ற போர்வையில் இருந்த ஊடகவியலாளரைச் சந்திக்கும் அந் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி அலெக்சாண்டர் நிக்ஸ், சர்வதேச அலுவல் இயக்குனர் ஆகிய உயர்மட்ட அதிகாரிகளைக் கலந்தாலோசித்து, 'அரசியல் எதிரிகளுக்கு பணம் கொடுப்பது, பெண்களை அனுப்புவது, அவற்றை ஒளிப்பதிவு செய்து மிரட்டுவது போன்றவற்றை அவர்கள் இலகுவாகச் செய்யலாம்' எனச் சொல்கிறார்.

ஃபேஸ்புக்கினதும் ஏனைய சமூக ஊடகங்களதும் வளர்ச்சியின் காரணம், வெகுஜன ஊடக நிறுவனங்கள் மூலம் கிட்டாத தகவல்களையும் நோக்குகளையும் பயனர்கள் அடைய அவை அனுமதிக்கின்றமையாகும். ஆனால், இப்போது அதுவும் மெதுமெதுவாக மாறுகிறது.

இரண்டாவதாக, அரசுகளுடன் நெருங்கி இயங்கும் ஃபேஸ்புக், கூகிள், ட்விட்டர் போன்ற சமூக ஊடக நிறுவனங்களும் தணிக்கையினதும் ஒடுக்குமுறையினதும்; கருவிகளாகுமாறு தகவல்-தொடர்பு இயங்குமுறைகளில் அவற்றின் வகிபாகத்தைப் பாவிக்க உளவுத்துறை அமைப்புக்கள் முயல்கின்றன.

மூன்றாவதாக, ஃபேஸ்புக் அதிகாரபூர்வச் சொல்லாடல்களை ஊக்குவிப்பதும் அவற்றை ஐயத்துக்குட்படுத்தும் சுதந்திர செய்தி ஆதாரங்களை முடக்குவதும் தனது நோக்கமென்று அறிவித்துள்ளது. எனவே ஃபேஸ்புக் இனியும் மாற்றுக் கருத்துக் களமாயிராது என்பது வெளிப்படை.

ஃபேஸ்புக் பற்றி அண்மையிற் சான்றுகளுடன் நிறுவப்பட்ட விடயங்கள் ஃபேஸ்புக்கில் பயனர் கணக்கை வைத்திருப்பதன் அபாயங்களைப் பகிரங்கமாக்கியுள்ளன. இதை விளங்க, அண்மையில் ஃபேஸ்புக் நிறுவனரின் கூற்றுப் போதுமானது. மார்க் ஸுக்கர்பெர்க் "ஃபேஸ்புக்கில் அனைத்துத் தரவுகளது கருத்தையும் விளங்குவதே நமது நோக்கம். அதை நாம் செயற்கை நுண்ணறிவின் உதவியுடன் மேற்கொள்கிறோம். ஒவ்வொரு பதிவும் புகைப்படமும் காணொளியும் செய்தியும் கருத்துரையும் உணர்வு வெளிப்பாடும் பகிர்வும் 'பாதகமான' உள்ளடக்கமா எனப் பகுத்தாராய்தல் தேவையெனக் கருதின் பொலிஸுக்கும் உளவுத்துறை முகமைகளுக்கும் தகவல் தெரிவிக்குமாறு எமது நிறுவனத்தின் அதி வலிய கணினி முறை வடிவமைக்கப்பட்டிருக்கிறது." இவர்கள் ஒரு புறம் பயனர்களின் தனிப்பட்ட தகவல்களை விற்பதுடன் மறுபுறம் கண்காணிப்புக் கருவியாகச் செயற்படுகிறார்கள்.

**தொழில்நுட்பம்: மெய்நிகர் கனாவின் அபத்தங்கள்**

தொழில்நுட்பத்தால் என்ன மோசமான விளைவுகள் ஏற்படலாம் என நீங்கள் ஐயுறலாம். தொழில்நுட்பத்தின் அபத்தங்களும் ஆபத்துக்களும் ஆழமானவை. அவை நம் எல்லோருக்கும் பொருந்துவன. "மெய்நிகர் வாழ்வு" பற்றிய கனாவில் இருப்போர் கட்டாயம் கவனிக்கவேண்டியன பல இங்குண்டு.

இணையத்தின் வளர்ச்சியும் கைத்தொலைபேசித் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியும் புதிய சாத்தியங்களை உருவாக்கியுள்ளன. முதலாளியச் சந்தையின் ஆட்ட விதிகளை இணையப் பரவலும் அதன் மூலம் குவியும் மின் தரவுகளும் தீர்மானிக்கின்றன. குரல் அழைப்புகள் மெல்ல மெல்ல மின் தரவுப் பொதிகளின் பரிமாற்றங்களாகின்றன. தொலைபேசி மட்டுமின்றித் தொலைக்காட்சிப் பெட்டி முதல் வீடுகளில் உள்ள மின்னணுவியல் சாதனங்கள் யாவும் திறன் சாதனங்களாவதும் (smart devices) அவை யாவும் இணையத்தின் மூலம் இணைவதுமான ஒரு நிலையை நோக்கித் தொழில்நுட்பம் முன் னேறுகிறது.

தொழிற்புரட்சியின் நவீன காலகட்டத்தை 'நான்காம் தொழிற்புரட்சிக் காலம்' என்பர். இணையப் பரவலும், இணையவழி இணைவுறும் பொருட்களின் தொகையும் பெருகுகையில், மின் தரவுகள் மலையாகக் குவியும் போக்கு வலுக்கும். எனவே, மின் தரவுகளைக் கட்டுப்படுத்துவதுடன் அதனை வினைத்திறனுடன் பகுப்பாய்வதன் அடிப்படையிலான செயற்பாடுகளே நான்காம் தொழிற்-புரட்சியின் வெற்றி தோல்விகளை நிர்ணயிக்கும்.

18ம் நூற்றாண்டில் இயந்திரங்களின் - குறிப்பாக நீராவியியந்திரத்தின் - வருகையுடன் முதலாவது தொழிற்புரட்சி தொடங்கியது. 1780 முதல் 1840 வரை ஐரோப்பிய மறுமலர்ச்சியோடு இணைந்த தொழில் உற்பத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றங்களை முதலாவது தொழிற்புரட்சி என்பர். 1870 முதல் 1915ம் ஆண்டில் முதலாம் உலக யுத்தம் தொடங்கும் வரை, தொழிற்றுறை நவீனமடைந்தது. உற்பத்திக் கருவிகள் தொழில்நுட்ப உதவியுடன் புதிய பணிகளை வினைத்திறனுடனும் வேகமாயுஞ் செய்யலாயின. இது 'இரண்டாவது தொழிற் புரட்சி' ஆகும்.

1970கள் தொட்டு 1990களின் தொடக்கப் பகுதி வரை ஏற்பட்ட மின்னணுவியல் தொழில் நுட்ப வளர்ச்சியும் கணிணியின் விருத்தியும் இலத்திரனியற் தொடர்பாடலின் எழுச்சியும் தொழிற்றுறையைத் துரிதமாகக் கணிணிவய மாக்கி, உற்பத்தியை அளவிலும் வினைத் திறனிலும் உயர்த்தின. அது 'மூன்றாம் தொழிற்புரட்சி' எனப்பட்டது.

நான்காம் தொழிற்புரட்சி, மூன்றாம் தொழிற் புரட்சியின் நீட்சியாகும். கணினித் தொடர் பாடலின் விருத்திப் போக்கில் ஏற்பட்ட இணையத்தின் பரவலால் உற்பத்தியும் தொழிற்துறையும் பொருளாதாரமும் பாரிய மாற்றங் கண்டன. பாரிய அளவில் விளைந்து துரிதமாகப் பரப்புறும் மின் தரவுகள் இப் புதிய போக்கை அடையாளங் காட்டுகின்றன. மேலும், கணினித் துறையிலும் உற்பத்தித் துறையிலும் ஏற்பட்ட பாரிய வளர்ச்சிகளை இணையத் தொழில் நுட்பம் மையப்பபடுத்தி இணைக்கிறது. பொருட்களின் இணையம் (Internet of Things – IOT) எனும் அதன் புதிய போக்கு, ஏராளமான மின் தரவுகளைக் குவிக்கின்றது.

இவ்வாறு குவியும் மின் தரவுகளை பெரும் மின்தரவுகள் (big data) என்பர். இம் மின் தரவுக் குவியலைப் பகுப்பாய்வது சந்தையைப் 'விளங்குவதற்கும்' நடப்பிலுள்ள தொழில்நுட்பங்களின் துல்லியத்தை மேம்படுத்தற்கும் உதவும் என்பதை கூகிள், ஐ.பி.எம், மைக்ரோசொஃப்ற் உள்ளிட்ட பன்னாட்டு நிறுவனங்கள் விளங்கியுள்ளன.

இதே காலகட்டத்தில் உருவான "பெரும் தரவும் பகுப்பாய்வும்" (big data & analytics) தொழில்நுட்பம், நான்காம் தொழிற்புரட்சிக் காலத்தின் முக்கியமான நிகழ்வாகும். பின் வரும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் அதன் தனித்த அடையாளங்களாம்.

மூன்றாந் தொழிற் புரட்சியின்போது உருவான ரோபோட்டிக்ஸ் எனும் தானியங்கி

**சமூக வலைத்தளங்களின் மேற்படி வடிவமைப்பு, அத் தளங்களில் தொடர்ந்து இயங்கும் பயனர்களைச் சில மாதங்களுள்ளேயே மேலும் தீவிரமாகவும் வரட்டுத்தனமாகவும் முட்டாள்தனமாகவுங் கூடச் சிந்திக்கச் செய்கின்றது. இவ்வகையிற், பெருந் தொகையானோரின் கருத்துக்களை வடிவமைக்கவும் குறித்த திசைகளிற் செலுத்தவும் சமூக வலைத்தளங்கள் ஆளும் வர்க்கங்களின் கைகளில் ஆயுதமாகின்றன.**

முறை வளர்ந்து பல்வேறு தொழில்களில் தானியங்கலை (automation) வலுவாக்கியது. மீநுண் தொழில்நுட்பம் (nano-technology) அணு, மூலக்கூறு, உப-மூலக்கூற்றுப் பரிமாணங்களிற் பொருட்களைக் கையாளும் தொழிற்கலை, அணு மற்றும் மூலக்கூற்றியல் விஞ்ஞானத்தில் வளர்ச்சிப் பாய்ச்சலை உண்டாக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, நான்காம் தொழிற்புரட்சிக் கட்டத்தில் செயற்கை நுண்ணறிவுத் (artificial intelligence) துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியும், அவ் வளர்ச்சிக்குப் பெரும்-மின் தரவுப் பகுப்பாய்வு ஆற்றியுள்ள பங்கு கணிசமானது. இத் தொழில்நுட்பங்களின் வளர்ச்சிக்குப் பங்காற்றிய மின் தரவுகளின் திரட்சி இப்போது வியப்பூட்டும் அளவுகளை எட்டியுள்ளது.

இங்கு, மின்தரவுகள் பற்றிச் சுருக்கமாகச் சில சொல்லலாம். ஃபேஸ்புக், ட்விட்டர், வட்ஸ்-அப் போன்ற சமூக வலைத்தளங்களிற் பதிவேறும் புகைப்படங்களும் நிலைத் தகவல்களும் தொட்டு, குறிப்பிட்ட சமூக வலைத்தளங்களில் நாம் எதைப் பார்க்கிறோம், எதை விரும்புகிறோம், எவரெவரைப் பின்தொடர்கிறோம் என்பவை உள்ளிட்டு, எப்போது எங்கே பயணிக்கிறோம் என்பன வரை, விவரங்கள் மின் தரவுகளாகத் திரளுகின்றன. அதைவிட, இணையத்திற் பொருட்களை வாங்குதலும் இணைய மூலம் பணப்பரிவர்த்தனைகளில் ஈடுபடுதலும் யூ-டியூபில் வீடியோக்கள் பார்ப்பதும் வரை நமது செயல்கள் பற்றிய அனைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவரங்களும் மின் தரவுகளாகத் திரளு கின்றன.

உதாரணமாக யூ-டியூபில் ஒருவர் எவ் வளவு நேரம் காணொளிகள் பார்க்கச் செல விடுகிறார், எம் மாதிரிக் காணொளி களைப் பார்க்கிறார், எந்த வரிசையில் பார்க்கிறார், எவற்றுக்கு விருப்புத் தெரிவிக் கிறார், எவற்றைப் பகிர்கிறார் போன்ற விவரங்களும் மின் தரவுகளாகத் திரளு கின்றன.

மேலும், இணையத்துடன் இணைத்த மருத்துவ உபகரணங்கள், உணரி (sensor) பொருத்திய வாகனங்கள், வீடுகளிலுள்ள திறன் தொலைக்காட்சி (smart TV) பிற திறன் சாதனங்கள் என இணைய இணைப்புப் பொருட்கள் (IOT) யாவும் மின்தரவுகளைப் பிறப்பிக்கின்றன. சமூக வலைத்தளச் செயல் கள் - படங்கள், காணொளிகளைப் பகிர்தல், விருப்புத் தெரிவித்தல், இணைய உரையா டல், யூ-டியூப் போன்ற தளங்களில் காணொ ளிகள் பார்த்தல் - யாவையும் பற்றிய விவ ரங்கள் உலகளவிற் திரளும் மின் தரவுகளின் மிக முக்கியமான மூலங்களாம்.

இதன் வழி, ஒருவர் இணையத்தில் செல விடும் நேரமும் அதன் போது அவர் பார்க்கும், கேட்கும், படிக்கும் விடயங்களும் அவ் விடயங்களின் அரசியல், சமூக, வணி கப் பெறுமதிகளையும் செயற்கை நுண்ணறி இயந்திரங்கள் துல்லியமாகக் கணிக்கின்றன. மேலும், ஒருவரின் ஓய்வு நேரத்தையும் அந்த நேரத்தை அவர் எதிற் செலவிடுகிறார் என்பதையுங் கொண்டு அவரின் ஆளுமை யைத் துல்லியமாக கணிக்கலாம். அதன் வழி ஒருவர் விரும்புவதை இணையம் பல்வேறு வழிகளில் தொடர்ந்து வழங்கும்.

ஒவ்வொரு தனிமனிதரும் தனக்கு வேண் டிய அனைத்தையும் இணைய மூலமே செய்வதால் அவர்கள் தனியர்களாகி, மக்க ளிடமிருந்தும் சமூகத்திலிருந்தும் அந்நியமா கின்றனர். மக்களிடமிருந்து துண்டிக்கப்பட்டு எப்போதும் இணைய மூலமாகவே அரசியல் கதைக்கும் ஒருவர் விரைவில் ஒரு நச்சு வட்டத்துக்குள் அகப்படுகிறார்.

உதாரணமாக, ஃபேஸ்புக் ஒரு பயனரின் விருப்பத்தை அறிந்து தொடர்ந்து அதற்கு உடன்பாடான ஒற்றைப்-பரிமாண நோக் குடைய தகவல்களை அவரது இணையப்- பக்கத்தில் காட்சிப்படுத்துமாறு. சமூக வலைத்தளங்களின் பின்னுள்ள செயற்கை நுண்ணறி நிரலி வடிவமைக்கப்பட்டுள்ளது.

சமூக வலைத்தளங்களின் மேற்படி வடிவ மைப்பு, அத் தளங்களில் தொடர்ந்து இயங் கும் பயனர்களைச் சில மாதங்களுள்ளேயே மேலும் தீவிரமாகவும் வரட்டுத்தனமாகவும் முட்டாள்தனமாகவுங் கூடச் சிந்திக்கச் செய் கின்றது. இவ்வகையிற், பெருந் தொகையா னோரின் கருத்துக்களை வடிவமைக்கவும் குறித்த திசைகளிற் செலுத்தவும் சமூக வலைத்தளங்கள் ஆளும் வர்க்கங்களின் கைகளில் ஆயுதமாகின்றன.

நிறப்-புரட்சிகளுக்கு மக்களைத் தயாரிப் பதிற் சமூக வலைத்தளங்களே முதன்மைக் கருவிகளாகப் பயன்பட்டன. அரபு வசந்தத் திலும் சமூக வலைத்தளங்கள் இதையே செய்தன என்பதை நினைவூட்டத் தகும். தனி ஒருவரின் ஆளுமையைச் சமூக வலைத் தளங்கள் வடிவமைப்பதும், தொடர்ந்து, போதைப் பழக்கத்தைப் போன்று அடிமை யாக்குவதும் இவ்வாறே நடக்கிறது.

இணையத் தேடுபொறி இயந்திரமான கூகுள் மற்றும் சமூக வலைத்தளக் கூட்டாண் மையான ஃபேஸ்புக் போன்ற நிறுவனங்கள் பெரும்-மின்தரவுகளின் அடிப்படையிலான பகுத்தாய்தலையும், செயற்கை நுண்ணறித் தொழில்நுட்பத்தையும் வெற்றிகரமாகப் பயன்படுத்துகின்றன. சமூக வலைத்தளச் செயற்பாடுகள் யாவும் மின்தரவு மூலங்க ளாகின்றன. சமூக வலைத்தளங்கள் மூலமும் இணைய மூலமும் சேகரிக்கும் தரவுகளே பெரும்-மின்தரவின் விற்பனைப் பொருளா கின்றன. அவ்வகையில் தரவுகளின் ஊடு இவை உலகைக் கட்டுப்படுத்த உதவுவன.

இப் பின்புலத்தில் இவ்வருடம் வந்த வொரு இக்கனோமிஸ்ற் இதழின் தலைப்பு “அடுத்த போர்: தொழில்நுட்ப, பூகோள-அரசியற் பெயர்வுகள் மிரட்டலைப் புதுப் பிக்கும் விதம்” (Next war: How shifts in technology and geopolitics are renewing the threat). இத் தலைப்பே அச்சுறுத்துவது. தொழில்நுட்ப வளர்ச்சி நவீன போர் ஆயுதங்களையும் இராசயன, உயிரியல் ஆயுதங்களின் நவீன மயமாக்கலையும் இயலுமாக்கியுள்ளது. இதை அறிவிக்கும் இக்கனொமிஸ்ற் புதிய உலக ஒழுங்கின் மிகப்பெரிய பயனாளியான அமெரிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வொழுங்கைத் தக்கவைக்கக் கடும் முயற்சி எடுக்க வேண்டியிருக்கும் எனக் கணிப்பதோடு அதை உடன் செய்யாவிடின் அமெரிக்காவும் அதன் சகாக்களும் நீண்ட துன்பத்துக்கு ஆளாக நேரும் எனவும் எச்சரிக்கிறது. மக்களைப் பொறுத்தவரை ஆறுதலடைய எதுவுமில்லை. அஞ்ச நிறைய உள்ளது.

**விக்கிலீக்ஸ்:வேவுபார்த்தலை வெளிப்படுத்தல்**

நாம் உபயோகிக்கும் மின்னணுக் கருவிகள் மூலம் நம்மை வேவுபார்த்து, நம் அனுமதியின்றி நமது அந்தரங்கங்களைப் பதிவு செய்யும் வேலைகளில் உளவு நிறுவனங்கள் ஈடுபடுவதை விக்கிலீக்ஸ் அம்பலப்படுத்தியது. விக்கிலீக்ஸ் அதன் முதல் பகுதியை வால்ட்-7 என்ற பெயரில் வெளியிட்டது. மிக ஆபத்தானதும் நம்பிக்கையற்றதுமான சூழலை நோக்கி நாம் நகர்கிறோம் என்பதை அது வெளிப்படுத்திய தகவல்கள் உணர்த்தின.

அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ., நமது கணினியைச் செயற்படுத்தும் இயங்குதளங்களை (Operating Systems) ஊடுருவக்கூடிய மல்வெயர்களை (Malware) உருவாக்கி, அவற்றூடு எம்மைக் கண்காணிக்க வழியேற்படுத்தியுள்ளது. அதன் மூலம் நமது கணினியின் அனைத்துத் தகவல்களையும் திருடவும், அதன் வெப்-கமராவையும், மைக்கையும் எப்போது வேண்டினும் நாமறியாமல் உபயோகித்து ஒலி, ஒளிப்பதிவு செய்து, தனது வழங்கிக்குக் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் அனுப்பவும் ஏற்ற வகையில் இந்த மல்வெயர்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்தக் கண்காணிப்பு கணினிகளுடன் நிற்பதில்லை. நாம் பயன்படுத்தும் ஸ்மார்ட் ஃபோன்களின் (Smart Phone) இயங்கு தளங்களுட் புகுந்து ஆக்கிரமிக்கும் மல் வெயர்களும், செயலிகளும் (Apps) உருவாக்கப்பட்டுள்ளன. இச் செயலிகளும் மல்வெயர்களும் நமது அலைபேசியின் தகவல்களைத் திருடுவதோடு, நாமறியாமலே நமது செல்போனின் கமராவையும், மைக்கையும் எப்போது வேண்டுமானாலும் இயக்கலாம். கடந்தாண்டு "பூச்சிய நாட்கள்" (Zero Days) எனப் பெயரிட்ட இரகசிய நடவடிக்கைகளின் மூலம் ஆண்ட்ராய்ட் இயங்குதளங்கட்கான 24 இரகசிய செயலிகளை சி.ஐ.ஏ. உருவாக்கியுள்ளது. இந்தச் செயலிகள் வாட்ஸ் ஆப், வைபர், வீபோ போன்ற சமூக

**ஒவ்வொரு தனிமனிதரும் தனக்கு வேண்டிய அனைத்தையும் இணைய மூலமே செய்வதால் அவர்கள் தனியர்களாகி, மக்களிடமிருந்தும் சமூகத்திலிருந்தும் அந்நியமாகின்றனர். மக்களிடமிருந்து துண்டிக்கப்பட்டு எப்போதும் இணைய மூலமாகவே அரசியல் கதைக்கும் ஒருவர் விரைவில் ஒரு நச்சு வட்டத்துக்குள் அகப்படுகிறார்.**

தகவல் பரிமாற்ற செயலிகளில் நாம் பகிரும் குறுஞ் செய்திகளையும், தொலைபேசி அழைப்புகளையும், வீடியோ அழைப்புகளையும், சி.ஐ.ஏ.யிற்கு இரகசியமாக அனுப்புகின்றன. அவ்வாறே அப்பிள் தொலைபேசிகளின் இயங்குதளமான ஐ.ஓ. எஸ்.ஸின் செயலிகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்தக் கண்காணிப்பின் அடுத்த கட்டமாக இப்போது பரவலாகப் பயன்படும் ஸ்மார்ட் தொலைக்காட்சிகளின் (Smart Television) கட்டுப்பாட்டையும் பெறும் வழிவகைகளை சி.ஐ.ஏ. உருவாக்கியிருக்கிறது. "அழும் தேவதை" (Weeping Angel) எனப் பெயரிடப்பட்ட சி.ஐ.ஏ. திட்டத்தின் கீழ் ஸ்மார்ட் தொலைக்காட்சியின் முன் நிகழும் உரையாடலை ஒட்டுக்கேட்க வியலும்.

இவ்வுபகரணங்களைப் பயன்படுத்தாமல் அணைத்து வைத்தாலும் அவை மூலம் ஒட்டுக் கேடகக்கூடிய வாய்ப்புக்களைத் தொழில்நுட்பம் உருவாக்கிக் கொடுத்துள்ளது. எனவே விரும்பியோ விரும்பாலோ நாமனைவரும் கண்காணிக்கப்படுகிறோம். இதைப் பொது வெளியில் அம்பலப்படுத்தியவர்களில் முதன்மையாவரான எட்வேட் ஸ்னோடன் கண்காணிப்பின் ஆபத்தான பக்கங்களைப் பின்வருமாறு விளக்குகிறார்:

"எதை வேணடினும் ஒட்டுக் கேட்கவல்ல ஒரு கட்டமைப்பை அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆணையம் உருவாக்கியிருக்கிறது. அதன் மூலம் குறிப்பான தேவையின் அடிப்படையிலன்றித், தகவல் பரிமாற்றங்களிற் பெரும்பகுதி தானாக ஒட்டுக் கேட்கப்படுகிறது. உங்கள் மின்னஞ்சல்களை அல்லது உங்கள் மனைவியின் தொலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாட்டின் பாதுகாப்புக்காகத் தனி மனிதர் தனது அந்தரங்கங்களை விட்டுக் கொடுக்கும் தியாகம் தேவை என்று அமெரிக்காவும் ஏனைய அரசுகளும் சொல் கின்றன.**

**தனி மனிதரை விடத் தேசம் பெரிது, தனி மனித அந்தரங்கத்தைக் காப்பதை விடத் தேசத்தின் பாதுகாப்பு பெரிது என வாதிடப் படுகிறது.**

பேசியை நான் பார்க்க விரும்பின் ஒட்டுக் கேட்பை செயற்படுத்திற் போதும். உங்கள் மின்னஞ் சல்கள், கடவுச் சொற்கள், தொலைபேசிப் பதிவுகள், கடன் அட்டைகள் எதை வேண்டு மானாலும் நான் அடைய முடியும்."

ஸ்னோடன் சி.ஐ.ஏ.யிலும், அமெரிக்கப் பாதுகாப்பு ஆணையகத்திலும் நீண்டகாலம் பணியாற்றியவர். அமெரிக்காவுக்காக எல்லா நாடுகளையும் உளவு பார்த்தவர். கிட்டத் தட்ட 20 கோடி ரூபாய் சம்பளத்துடன், ஹவாய் தீவில் சொந்தமான பண்ணை வீட்டுடன் வாழ்க்கையை நடத்தியவர். அமெரிக்காவின் இச் செயல்களை ஏற்க மறுத்து அம்பலப்படுத்துபவராக மாறியவர். தனது உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று தெரிந்தும், தாங்கள் கண்காணிக்கப்படுவதை மக்கள் அறிய வேண்டும் என்பதற்காக அமெரிக்காவின் இச் செயலை வெளிப் படுத்தியவர். அவரது எச்சரிக்கை வார்த்தை கள் கலக்கம் தருவன:

"எதெல்லாம் சாத்தியம் என உங்களுக்கு தெரியாது. அவர்கள் செய்ய இயல்பவற்றின் வீச்சு திகிலூட்டக் கூடியது. உங்கள் கணினிகளில் வேவு மென்பொருளைப் புகுத் தலாம். நீங்கள் இணையத்தில் இணைந்ததும் உங்கள் கணினியை அடையாளங்காண முடி யும். எத்தகைய காப்பு நடவடிக்கையை நீங்கள் செயல்படுத்தினாலும், நீங்கள் பாது காப்பாக இருக்க முடியாது."

இவ்வாறான ஆபத்தான சூழலிலேயே நாம் இன்று வாழ்கிறோம். அமெரிக்கா வுக்கு விரோதமாக நாமெதனையும் செய் யாததால் நம்மைக் கண்காணிப்பதால் பிரச்சனை இல்லை என நீங்கள் நினைக் கலாம். கண்காணிப்பின் ஆபத்தை அமெரிக்கா சார்ந்து மட்டும் கணிப்பிடலா காது. அதன் ஆழ அகலங்கள் பெரியன. அமெரிக்கா தனக்கு ஆதரவான அரசுகளுடன் ஒத்துழைக்கிறது; கண்காணிப் புத்தகவல் களைப் பரிமாறுகிறது. எனவே உங்கள் நாட்டின் அரசாங்கத்துக்கெதிராக நீங்கள் முன் வைக்கும் கருத்துக்கள், பரிமாறும் தக வல்கள் என யாவும் கிடைக்கவேண்டிய கைகளில் கிடைக்கின்றன. அவை மாற்றுக் கருத்துக்களை மறுக்கவும் எதிர்ப்புக் குரல் களை நசுக்கவும் அரசாங்கங்கட்குப் பயன்படு கின்றன.

எம்மை நாமே கண்காணிப்பதற்கு இல குவாக வழிகளையும் நாம் அமைத்துக் கொண்டுள் ளோம். "உங்கள் மனதில் என்ன இருக் கிறது" என்பதை பகிரக் கேட்கிறது ஃபேஸ்புக். "புதிதாக உள்ளதைப் பகிர்க" என்று அன்பாகச் சொல்கிறது கூகுள் பிளஸ். நாம் இருக்கும் இடமும் உண்ணும் உணவும் முதல் எமது அனைத்து விருப் பங்களையும் தெரிவுகளையும் நாமே வெளிப்படுத்தும் வழிகளை சமூக வலைத் தளங்கள் உருவாக் கியுள்ளன. ஃபேஸ்புக் முதலில் அமெரிக்க இராணுவத்தின் நோக்கங்களுக்காகவே உரு வானது என நம்மில் பலர் அறியோம்.

இந்த ஆபத்தின் ஒரு முனையில் தேசி யப் பாதுகாப்பைக் காரணங்காட்டி அரசுகள் கண் காணிப்பை நியாயப்படுத்துகின்றன. மறு முனையில்; தனிமனித சுதந்திரத் தினதும் நமக்குரிய தனிப்பட்ட வாழ்க்கை யும் நாம் இழக்கிறோம். இவையனைத்துக்கும் மேலாக, தனிப்பட்டவர்கள் பல தீமை களைச் செய்யும் வாய்ப்பை இச் செயல்கள் வழங்குகின்றன. இவ்வாறான கண்காணிப் புப் பணியில் உள்ள ஒருவர் அரசுக்காகத் திரட்டிய தகவல்களைத் தனிமனிதத் தேவை களுக்குப் பயன்படுத்த இயலும்.

உதாரணமாக அடுத்தவர்களின் அந்த ரங்கத் தகவல்களை சேகரித்து அவற்றைக் கொண்டு மிரட்டுவது, பணப் பரிவர்த் தனையை முடக்குவது, வங்கிக் கணக்கில் இருந்து பணத்தைத் திருடுவது என எல் லாவகை மோசடிகளையும் செய்யலாம். ஆகவே தனி மனித சுதந்திரத்தில் தலை யிடுவதைத் தாண்டிய ஆபத்துக்களை வேவு பார்த்தல் தன்னுட் பொதித்துள்ளது.

இன்று இவை பற்றிய விவாதங்களின் தொடக்கப்புள்ளி "தேசியப் பாதுகாப்பு" ஆகும். நாட்டின் பாதுகாப்புக்காகத் தனி மனிதர் தனது அந்தரங்கங்களை விட்டுக் கொடுக்கும் தியாகம் தேவை என்று அமெரிக்காவும் ஏனைய அரசுகளும் சொல் கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனி மனிதரை விடத் தேசம் பெரிது, தனி மனித அந்தரங்கத்தைக் காப்பதை விடத் தேசத்தின் பாதுகாப்பு பெரிது என வாதிடப் படுகிறது. இங்கு எழும் முக்கியமான வினா ஏதெனில், இத்தகைய கண்காணிப்பு 'தீவிர வாதிகளையும் பயங்கரவாதிகளையும் மட்டுமே குறிவைக்கிறதா என்பதாகும். எனின், அமெரிக்காவிலும் பல்வேறு மேற்குலக நாடுகளிலும் தொடர்ந்து நடக்கும் பயங் கரவாதத் தாக்குதல்களை தடுத்திருக்க முடியு மல்லவா?

உண்மையில் நடப்பது யாதெனில் பயங்கரவாதிகளை பிடிப்பது என்ற பெயரில் இந்தக் கண்காணிப்பு தனது தோற்றத்தை நியாயப்படுத்துகிறது. பயங்கரவாதத்தை ஒழிக்கும் பெயரில், ஜனநாயக ரீதியான எதிர்ப்பு உட்பட, எவ்வகையான அரச எதிர்ப்பும் இடம்பெறக்கூடாது என்பதே இக் கண்காணிப்பின் இறுதி நோக்கம். இப்போது மேற்கு கிழக்கு என்ற வேறுபாடு ஏதுமின்றி உலகளாவிய முறையில் அரசுகள் மேன் மேலும் சர்வாதிகாரத் தன்மையுடையனவாகின்றன. கண்காணிப்பு அதைத் தக்கவைக்கும் பிரதான கருவியாயுள்ளது.

இப்போது நடப்பது யாதெனில் மேற்குலக நாடுகளின் பொருளாதார நெருக்கடியின் பயனான முதலாளித்துவ எதிர்ப்புப் போராட்டங்கள் பயங்கரவாத அச்சுறுத்தலை விட அபாயகரமாகத் தோன்றுகின்றன. ஏனெனில் ஒரு குண்டுவெடிப்போ பயங்கரவாதச் செயலோ ஆட்சியதிகாரத்தை அசைக்காது. ஆனால் மக்களின் எழுச்சிமிக்க போராட்டங்கள் அதை சாதிக்க வல்லன. எனவே அதைக் கட்டுப்படுத்தக் கண்காணிப்பு அவசியம். குண்டு வைக்கும் ஓரிரு பயங்கரவாதிகளைப் பிடித்து அழிப்பது எளிது.


**மேற்குலக நாடுகளின் பொருளாதார நெருக்கடியின் பயனான முதலாளித்துவ எதிர்ப்புப் போராட்டங்கள் பயங்கரவாத அச்சுறுத்தலை விட அபாயகரமாகத் தோன்றுகின்றன. ஏனெனில் ஒரு குண்டுவெடிப்போ பயங்கரவாதச் செயலோ ஆட்சியதிகாரத்தை அசைக்காது. ஆனால் மக்களின் எழுச்சிமிக்க போராட்டங்கள் அதை சாதிக்க வல்லன. எனவே அதைக் கட்டுப் படுத்தக் கண்காணிப்பு அவ சியம்.**

ஆனால் நாடு முழுதிலும் திரண்டு எழும் மக்கள், முதலாளிய அமைப்பிற்கு எதிராகப் போர்க்குணமிக்க போராட்டங்களை தொடர்ந்து நடத்துவதைச் சமாளிப்பது அரசுகளுக்குப் பிரச்சினையாகிறது.

**நிறைவாக**

இவை கண்காணிப்பு அரசியலின் சில முக்கியமான கேள்விகளை எழுப்புகின்றன. அது நாட்டின் பாதுகாப்பிற்குக் கண் காணிப்புத் தவிர்க்கவியலாதது என வாதித்து அரசாங்கங்கள் அதை நியாயப்படுத்துகின்றன. ஆனால் தனிமனித உரிமைகளை மனிதர் விட்டுக்கொடுக்கும் போது தமது அனைத்து உரிமைகளையும் விட்டுக்கொடுத் தற்கான முதற்படியை எடுத்து வைக்கின் றனர் என்பதே உண்மை.

அம்பலத்துக்கு வந்துள்ள இச் செய்திகள் மிக முக்கியமான சவாலொன்றை விடுத்துள்ளன. நாம் எமது படுக்கையறைகளை உளவு பார்ப்பதை அனுமதிக்கப் போகிறோமா என்பது தான் அச் சவால். தேசப் பாதுகாப்பின் பேரால் அதை அனுமதிப்பது எம் எதிர்கால சந்ததியரையும் என்றென்றைக்கும் பாதிக்கும். இவ்வாறான செயல்கள் ஜனநாயகத்தின் பெயரால் ஃபாசிசத்தை செயற்படுத்தும் வேலைகளன்றி வேறில்லை.



## அஞ்சலி

### முருகேசு தர்மராஜா

பொதுப்பணிகள் பலவற்றிலும் முன்னின்று உழைத்தவர்.
தமிழ் அரசியல் தலைவர்கள் - சட்ட நிபுணர்கள் - பத்திரிகையாளர்கள் பலருடனும் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தவர்.
கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்திற்கு பெருந்தொகையான சட்ட நூல்களை வாங்கிக் கொடுத்து சட்டப் பிரிவை உருவாக்க பேருதவி புரிந்தவர்.
தேசிய இலக்கியப் பேரவையின் இலக்கிய கூட்டங்களிலும் தவறாது கலந்துகொள்ளும் அன்பர் தாயகம் இதழின் வாசகர்.
அன்னாருக்கு தேசிய இலக்கியப் பேரவையும் தாயகம் இதழும் இணைந்து அஞ்சலி செலுத்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டைகளின் அடிமைகளாய்...

அழ. பகீரதன்

தோன்றில் புகழோடு தோன்றுக
என்றோதிய வள்ளுவன் வழி
தோன்றிய பாரதி பாரதில்
தோன்றிய புரட்சியை வியந்தே
ஆகா எழுந்தது பார் யுகப்புரட்சி
என்றே
அடிமை நிலையில்
மிடிமை கொடுமையில் சிக்கிய
மாந்தரின் விடிவிற்காய் பாடியும்
மாந்தர் நாம் உணர்ந்தமோ
தெரிந்தமோ தேர்ந்தமோ...
மாகவி எனப் புகழ்ந்தோமே
மாபுரட்சிக்கு வித்தாகினோமோ?

நேர்ந்தவை நிலைத்திடா
நிலையினில்
ஆண்டனர் மீண்டும்
சுரண்டிட கண்டனர் பாதை
மிடிமை நிலையில் தோய்ந்தவர்
அறியாமையை உரமாக்கிப்
பரம்பரையினரே பயனனுபவிக்க
பேந்த விழித்திடும் நாமோ..

இய பேசிக்குள் இயலுமாகின்ற
இளமைகள் கரையும் நாட்கள்
தயவை நாடும் மனங்களைத்
தவிர்த்திட வலை அமைப்பு
சேய்மையில் கண்டவர் யாரும்
நட்பெனக் கொள்ளாக் காலம்
உட்பொதிந்து இயபேசிக்குள்
பொத்தானுக்குள் சினேகம் நாடத்
தூயவை என எதுவுமிலையென
காய்கின்ற மனதொடு இருப்பு!

சூழ்ச்சிக்குள் மாய்ந்த நிலையெனில்
வேவுபார்த்திட நம்மை நாமே
காட்டிக் கொடுத்திட கற்றோம் எனில்
மதிக்கின்ற வகையினில் யார்க்கும்
பொறுப்பில்லா நிலையிலென்ன விதைப்பு
சேதிகள் பொறுக்கிட நாட்கள்
சேதிகளாய் விரிந்திட கூடுமெனில்
சேதிகளாய் ஆவதில் தான் தவிப்பு
சேதியே சேதியை தேடிடத்
தேவைகள் சேதியை நோக்கியே!

யாரிடம் யாருக்காய்
யாரொடு யாராகி
யாரொடு யார் மோதி
யாருக்காய் தேசமென
யாருக்கும் ஓர் தேசமென
தேசமே விமோசனமென
தேசத்தை தேசம் மேவ
தேசியம் தேடி குறுந்தேசியம் பேசி
தேசங்கள் கடந்த தேசியம் காண
ஓர் நாடு இரு தேசமென
ஓர் மதத்திற்கே தேசமென மதமே ஆழுமென
ஒடுக்கப்பட்ட சாதிகளின் தேசியமென
விடுக்கப்படுகின்ற தாள்களில் எங்கும்
பாசம் நாசம் பண்பு நாசம்
உறவு நாசம் உயிர்மை நாசம்!

வேசம் கூடும் பொய்மை மேவும்
கோசம் மாய கொள்கை மாய
மீட்பர் வருவர் கேட்பர் குறைகள்
ஏந்திடும் கைகள் ஏதிலியாய் எங்கும்
மாய்ந்தவர் பெயரில் மாயக் கனவுகள்
உயிர்ப்பர் உயிரோடு இருப்பர்
உயிரழியா உடம்பொடு நாளையும்
வேய்ந்தவர் வருவர் வேதனை தீர்த்திடவென
யார்க்கு யார் காவலர்
யார்க்கு யார் மீட்பர்!

நஞ்சு கலந்த தேசத்து நிலங்கள்
நஞ்சே கலந்த விஞ்சும் பொதிகள்
நஞ்சே விளையும் கலவையில் உணவுகள்
நஞ்சை உண்டே செத்தே போகிட
தந்திரம் வியாபாரமாய் வியாபாரம் தந்திரமாய்
தேசம் ஆண்டபரம்பரையின் ஆணைப்படி!

ஆண்டைகளின் அடிமைகள் மிடிமையில்
ஆண்டைகளின் அடிமைகள் அறியாமையில்
ஆண்டைகளின் அடிமைகள் இழப்புக்குள்
ஆண்டைகளின் அடிமைகள் இறப்புக்குள்
ஆண்ட பரம்பரையே ஆழுவரெனில் நாம்
தோண்டி அறிந்து மூத்தகுடி
தமிழ் குடியென அறைவதில்
பெருமிதம் கொண்டே மாய்வோம்
போக்கு மாற்றிச் சிந்தியாதிருந்திடில்!

மாறுவமோ
தோன்றுவமோ
தோள்களில் சுமப்பமோ
அடிமைகள் எழுந்து நின்று
மானிடர் தேசமென ஒளிர்ந்திட!
மீண்டுமோர் யுகப் புரட்சியில்
பாட்டாளி வர்க்க சர்வதேசியம்
எழுந்து நிமிர்ந்திட1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்ல் மார்க்சின் ஆளுமை மற்றும் உலகக் கண்ணோட்டத்தினுடைய வளர்ச்சியின் வரலாறு

## மதத்தின் மூலவேர்கள் பூமியில் இருக்கின்றன- கார்ல்மார்க்ஸ்

*வினவு குறிப்பு : கார்ல் மார்க்சின் வரலாற்றை வெறுமனே நாள், சம்பவம், திருப்பங்கள், இட ம், என்று புரிந்து கொள்ள முடியாது . அவரது உலகக் கண்ணோட்டம் எப்படி வளர்ந்தது என்பதே மார்க்சின் ஆளுமையை அருகில் பார்த்து புரிந்து கொள்வதற்கு உதவும். இந்நூலாசிரியரின் நோக்கமும் அதுதான். இந்த அத்தியாத்தில் கார்ல் மார்க்ஸ் கடவுள் குறித்த விவாதங்களை அதாவது கடவுள் இல்லை என்பதன் அடிப்படையை நிரூபிக்கிறார்.*

*நாத்திக ஆத்திக விவாதங்கள் பொதுவில் பகுத்தறிவு, தத்துவ நோக்கில் மட்டும் நடக்கும். ஆனால் கடவுளின் நிலையை வானில் இருந்து அல்ல பூமியில் இருந்து கொண்டு மட்டுமே விளக்க முடியும் என்கிறார் மார்க்ஸ். மனிதன் வர்க்க ரீதியாக முரண்படும் சமூக வாழ்வின் வழியே தன்னை இழப்பதால், கற்பனையான ஆன்மீகத்தில் தன்னை பெற முயற்சிக்கிறான்.*


*இயற்கையின் இயக்கத்தை மேலும் மேலும் புரிந்து கொள்ளும் போது கடவுள் கொஞ்சம் கொஞ்சமாக விடைபெறுகிறார். இயற்கை குறித்த பிரம்மாண்டத்தை அறியாததால் கடவுளுக்கு அளிக்கப்பட்ட வலுவான ஆயுதங்கள் அதே இயற்கைய குறித்து அறியும் போது ஒவ்வொன்றாய் உதிர்கின்றன. போலவே வர்க்கப் போராட்டத்தில் மனிதனின் சுய மதிப்பு மீட்குமளவுக்கு கடவுளின் கற்பித மதிப்பு கரைந்து போகிறது.*

ஜெர்மனியில் ஹெகல் உட்பட பல சமயத் தத்துவஞானிகள் மாபெரும் கிரேக்க அணுவாதிகளைப்(1) பற்றி ஏளனமாகப் பேசினார்கள். இளம் மார்க்ஸ் அந்தச் சமயத்தில் ஹெகலிய வாதிகளுக்கு நெருக்க மானவராக இருந்த போதி லும் ஹெகலின் பெயர் அவரைத் தடுக்க வில்லை. ***மற்ற எல்லாவற்றையும் காட்டிலும் உண்மையே அவருக்கு முக்கியமானது. உண்மையே அவர் வணங்கிய கடவுள்.***

கிரேக்கத் தத்துவஞானம் மற்றும் பொதுவாக கிரேக்க அறிவின் வரலாற்றில் எபிகூரிய, ஸ்டோயிக் மற்றும் ஐயுறவுவாத அமைப்புக்களின் மாபெரும் முக்கியத் துவத்தை "மாபெரும் சிந்தனையாளரான" ஹெகல் அங்கீகரிக்காதபடி அவருடைய "ஊக முறை" தடுத்தது என்று மார்க்ஸ் தன்னுடைய ஆராய்ச்சிக் கட்டுரையின் முன்னுரையில் குறிப்பிட்டார்.(2)

மேலும் மத அரங்கத்தில் தத்துவஞானத்தைக் கொண்டு வந்த ப்ளூடார்கைப் பற்றி எழுதுகின்ற பொழுது மார்க்ஸ் உண்மையில் ஹெகலுடன் அல்லது, சரியாகச் சொல்வதென்றால், அவரு டைய ஆதரவாளர்களின் வலது அணியினருடன் வாதம் புரிகின்றார்.

ஹெகலைப் பொறுத்தமட்டில், "கடவுள் இருப்பதைப் பற்றிய நிரூபணங்கள்" தொடர்பாக மார்க்ஸ் அவரையும் விமர்சனம் செய்கிறார். இந்த "நிரூபணங்களை" காண்ட் ஏற் கெனவே மறுத்துவிட்டார். ஆனால் ஹெகல் அவற்றைத் தலைகீழாக நிறுத்தி விட்டார், "அதாவது அவற்றை நியாயப்படுத்துவதற்காக நிராகரித்து விட்டார்." ***"ஆதரித்து வாதாடுகின்ற வழக்குரைஞர் தம்முடைய கட்சிக் காரர்களைத் தாமே கொலை செய்வதன் மூலமாகவே அவர்களை தண்டனையிலிருந்து காப்பாற்ற முடியுமென்றால் அந்த நபர்கள் எந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள்?(3)"*** என்று மார்க்ஸ் கிண்டலாகக் கேட்கிறார்.




***"கடவுள் இருப்பதைப் பற்றிய நிரூபணங்கள்" உண்மையில் தலைமையான மனித உணர்வு இருப்பதைப் பற்றிய நிரூப ணங்களே, ஆகவே "கடவுள் இல்லை" என்பதற்குரிய நிரூபணங்களே*** என்று மார்க்ஸ் எடுத்துக்காட்டுகிறார். இயற்கை நன்கமைக் கப்பட்டிருப்பதால் கடவுள் இருக்கிறார் என்று "நிரூபணங்களில்" ஒன்று கூறுகிறது. ஆனால் இயற்கை அமைப்பின் "பகுத்தறிவுத் தன்மை" கடவுள் மிகையானவர், கடவுள் தேவையில்லை என்பதை நிரூபிக்கிறது.

***"கடவுள் இருக்கிறார்" என்பதற்கு மெய்யான நிரூபணங்கள் பின்வருமாறு கூற வேண்டும்: "இயற்கை மோசமாக அமைக்கப்பட்டிருப்பதால் கடவுள் இருக்கிறார்"; "உலகத்தில் பகுத்தறிவு இல்லாதபடியால் கடவுள் இருக்கிறார்"; "சிந் தனை இல்லாதபடியால் கடவுள் இருக்கிறார்."***

"உலகம் பகுத்தறிவுடன் தோன்றவில்லை என்பவருக்கு.... அவருக்குக் கடவுள் இருக்கிறார், அல்லது பகுத்தறிவு இல்லாததனால் கடவுள் இருக்கிறார்."(4) இந்த முடிவு அக்காலத்துக்கு முற்றிலும் துணிவானதாகும்.

***மனித சுய உணர்வே "உயர்ந்த கடவுள்" "அதைத் தவிர வேறு எதுவும் கிடையாது"*** என்று மார்க்ஸ் உறுதியாகப் பிரகடனம் செய்தார்; "உண்மையைச் சொல்வதென்றால் நான் கடவுள் கூட்டத்தை வெறுக்கிறேன்" என்று புரோமித் தியஸ் துணிச்சலாகக் கூறியதை "வானத்திலும் பூமியிலும் உள்ள அனைத்துக் கடவுள்களுக்கும் எதிரானதாக" அவர் திருப்பினார். இந்தத் துணிவான கருத்து மத எதிர்ப்பு மட்டுமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாமல் அரசியல் தன்மையும் கொண்டிருந்தது.

மார்க்ஸ் பல்கலைக்கழகத்தை விட்டு வெளி யேறுகின்ற பொழுது ஆட்சியில் இருப்பவர்களின் "பரிதாபகரமான பிறவிக ளுக்கு" உணர்வு பூர்வமாகச் சவால் விட்டார். விலங்குகள் மாட்ட பபட்ட கலகக்காரனான புரோமித்தியசை "பகுத் தறிந்து" பணியும்படி ஜேயசின் ஊழியனான ஹெர்மஸ் முயற்சி செய்த பொழுது அவன் அதை இகழ்ச்சியாக நிரா கரித்தான். மார்க்ஸ் எஷ்கிலசின் புரோமித்திய சுடன் அவர்களை நோக்கிப் பின்வருமாறு கூறினார்:

இது உறுதி: என்னுடைய நிலையை உங்க ளுடைய அடிமைத்தனத்துக்கு மாற்றிக் கொள்ள மாட்டேன்; ஜேயசுக்கு ஊழியம் புரிவதைக் காட்டிலும் இந்த மலைக்கு ஊழியம் செய்வது மேல். (5) மார்க்சின் மிகையான "இடதுசாரி" நிலையைக் கண்டு "பரிதாபகரமான பிறவிகள் அதிர்ச்சியடைந்தனர். மார்க்சின் அஞ்சா நெஞ்சத் தைப் பற்றி அர்னோல்டு ரூகே எழுதினார். தத்துவத்தின் பயங்கரவாதத்தை ஆதரித்த பௌவர் கூட மார்க்சின் சவாலைக் கண்டு அஞ்சினார், ஆராய்ச்சிக் கட்டுரையின் துணிச்சல் மிக்க முன்னுரையின் தொனியைக் குறைக்கும் படி அவரைக் கேட்டுக் கொண்டார்; பிற்போக்கு வாத அமைச்சரான எய்ஹகோர்னிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளும்படி ஆலோசனை கூறினார்; போராட்டத்தில் ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும், அரசாங்கத்தைத் தாக்கக் கூடாது என்று அறிவுரை கூறினார்.

***இப்படிப்பட்ட அறிவுரை – தகப்பனாரோ அல் லது நண்பர்களோ – யாரிடமிருந்து வந்தாலும் அதற்குச் செவிசாய்க்கக் கூடியவர் அல்ல மார்க்ஸ்.*** வானத்தையும் பூமியையும் சேர்ந்த கடவுள்களுக்கு முன்னால் இரும்புக் கையுறை யைக் கழற்றியெறிந்த மார்க்ஸ் அத்துடன் நின்றுவிடவில்லை. போராட்டத்தில் இறங்கி விட்ட மார்க்ஸ் கடைசி வரை போராடுவ தற்குத் தயாராக இருந்தார்; இப்போராட்டத்தில் அவர் எவ்வளவு தூரம் போகக் கூடும் என்பதை அவருடைய நெருங்கிய நண்பர்கள் கூட ஊகிக்க முடியவில்லை.

இளம் ஏங்கெல்ஸ் 1841ம் வருடத்தின் முடிவில் எழுதிய நம்பிக்கையின் வெற்றி என்ற கவி தையில் மார்க்சின் முறியடிக்கப்பட முடியாத போராட்ட உணர்வைச் சிறப்பாக வர்ணிக் கிறார். கவிதையின் ஆரம்பத்தில் அவர் புரூனோ பௌவரைச் சித் திரிக்கிறார்:

பச்சைக் கோட்டணிந்த ஒல்லியான வில்லன் பிதற்றுகிறார்; அந்த முகத்துக்குப் பின்னால் நரகத்தின் குழந்தையைப் பார்க்க முடியும். அவர் கொடியை உயர்த்துகிறார்; அவரது பைபிள் விமர்சனப் பொறிகள் பறப்பதை மேலே அரை வட்டத்தில் பார்க்க முடியும்.

பிறகு மார்க்ஸ் தோன்றுகிறார்:

கட்டுக்கடங்காத் துடிப்புடன் ஓடுவது யார்? டிரியர் நகர இளைஞன், கறுப்பு நிறம் அவன் தாண்டுவதில்லை, குதிப்பதில்லை, துள்ளிக் குதித்து ஓடுகிறான், வானத்திலிருக்கும் பந்த லைப் பிடித்து பூமிக்குக் கொண்டு வருவதைப் போல கைகளை விரித்து வானத்தைத் தொட முயல் கிறான்.(6)

மார்க்சும் புரூனோ பௌவரும் 1841இல் மதத்தைப் பற்றிய விமர்சனத்தில் ஒன்றாகப் பணியாற்றிய பொழுது அவர்களுடைய வாழ்க் கைப் பாதைகள் ஒன்று கலந்தன என்றாலும் பிற்காலத்தில் அவை அதிகமாகப் பிரிந்தன. காலப் போக்கில் பௌவரின் தத்துவ ரீதியான "பயங்கர வாதம்" அரசாங்கத்தின் பால் மென் மேலும் அதிகமான விசுவாசமாக மாறியது; பிறகு ஜெர்மன் சமூக-ஜனநாயக வாதிகளுக்கு எதிராக முதலாளி வர்க்கத்தின் பயங்கர ஆட்சிக்குத் தலைமை தாங்கிய பிஸ்மார்க்குக்கு மிகவும் விசுவாசமான ஆதரவாக மாறியது முற்றிலும் தர்க்க ரீதியானதே.

மத விமர்சனத்தைப் பொறுத்தவரை மார்க்ஸ் ஏற்கெனவே 1843க்குள் பௌவரைக் காட்டிலும் வெகு தூரம் போய்விட்டார். Deutsch-Französische Jahrbücherg இல் ("ஜெர்மன்-பிரெஞ்சு வருடாந்தர சஞ்சிகை") அவர் எழுதிய கட்டுரைகளில் மதத்தைத் தீவிரமான முறையில் விமர்சிப்பதற்கு மதத்தைப் பற்றிய தத்துவஞான மறுப்பு மட்டும் போதுமானதல்ல என்று அவர் எடுத்துக்காட்டினார்.

***ஒருவர் மேக மண்டலங்களுக்கு இடையில் சஞ்சரித்தால் "வானத்தின் பந்தலைப் பிடித்து பூமிக்குக் கொண்டு வர" முடியாது. அதற்கு அவர் பூமியில் நிற்க வேண்டும். மதத்தின் மூல வேர்கள் "பூமியில்" இருக்கின்றன. மதஞ்சார்ந்த அவல நிலை சமூக உறவுகளின் மெய்யான அவல நிலையின் வெளியீடுதான். அவை அதை வளர்க்கின்றன.***

பரம்பொருளுக்கு முன்னால் "கடவுளின் அடி மைகளின்" பணிவான நிலை சமூகத்தில் மனித னுடைய அடிமைத்தனமான, ஒடுக்கப்பட்ட, சார்ந்திருக்கும் நிலையின் பிரதிபலிப்பு மட் டுமே, சமூக உறவுகள் இன்னும் மெய்யாகவே மனிதப் பண்பை அடையவில்லை என்ற உண்மையின் பிரதிபலிப்பு மட்டுமே.

**"மதம் என்பது தன்னை இன்னும் அறிந்து கொள்ளாத அல்லது மறுபடியும் தன்னை இழந்து விட்ட மனிதனின் சுய உணர்வு மற்றும் சுய மதிப்பே."**(7) மனிதனுக்கு விரோதமான சக்திகள் மனிதனை ஆள்கின்ற மனிதத் தன்மையற்ற உலகத்தின் உற்பத்தியே அது.

***"தலைகீழாக இருக்கும் உலகம்" "தலை கீழான" உலகக கண்ணோட்டத்தை ஏற்படுத்து கிறது.*** கண்ணீர்க் கடலில் மிதக்கும் பொழுது தன்னை இன்னும் அறிந்து கொள்ளாத" மனிதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மார்க்ஸ் மற்றும் ஏங்கெல்ஸ்

மறு உலக வாழ்க்கையைப் பற்றிக் கற்பனையான கனவுகளில் ஆறுதல் தேடு கிறான். பூமியில் தனக்கு மகிழ்ச்சி இல்லை என்பதால் சொர்க்கத் திலிருக்கும் இன்பங்களைப் பற்றிய சமயப் பிரசங்கங்களில் நம்பிக்கை வைக்கிறான்.

மனிதன் தன்னுடைய விடுதலைக்காகவும் இயற்கையை எதிர்த்தும் நடத்துகின்ற போராட் டத்தில் பலவீனத்தையும் ஆதரவற்ற நிலையையும் உணர்கிறான்; எனவே கடவுளுக்கு வலிமையையும் எல்லாம் வல்ல தன்மையையும் தருகிறான். மனிதன் பூமியில் தன்னுடைய வாழ்க்கையின் அவல நிலைக்குப் பரிகாரத்தைக் கடவுளிடம் தேடுகிறான். அதனால்தான் அக்காலத்திய மதம் "இதயமற்ற உலகத்தின் இதயமாகவும்" "உணர்ச் சியற்ற நிலைமைகளின் உணர்ச்சி யாகவும்" இருப்பது மட்டுமின்றி, இந்த உலகத்துக்கும் அதன் நிலைமைகளுக்கும் எதிர்ப்பாகவும் இருக்கிறது.

ஆனால் இந்த எதிர்ப்பு மௌனமானதே. அது அடிமையின், "ஒடுக்கப்பட்ட பிறவியின் பெரு மூச்சே"; சமூக மற்றும் தனிநபருடைய அவல நிலை தெய்வீகத் தன்மைக்கு எதிரான ஒன்றல்ல, அதன் அத்தியாவசியமான குணாம்சமாக இருக் கிறது. ஒன்று மற்றொன்றை வளர்க்கிறது, நிர்ணயிக்கிறது.

மதத்துக்கு எதிரான தீவிரப் போராட்டம் "அந்த மதத்தை ஆன்மிக வாசனையாகக் கொண்ட உல கத்துக்கு" எதிரான போராட்டத்தை முன்வைக் கிறது. இது அந்நியப்படுதலின் எல்லா வடிவங் களிலிருந்தும் மனிதனுடைய விடுதலைக்காக நடைபெறுகின்ற போராட்டம், மனிதனுடைய முழு வளர்ச்சிக்கான போராட்டம்.

புரூனோ பௌவரும் லுட்விக் ஃபாயர் பாஹூம் மதத்தை விமர்சனம் செய்வதுடன் நின்றுவிட்டார் கள்; ஆனால் மதத்தைப் பற்றிய விமர்சனம் "எல்லா விமர்சனங்களுக்குமே முற் கருதுகோளாகும்"(8).

ஃபாயர்பாஹ் கூறியதைப் போல மனிதனே மனிதனுக்குக் கடவுள் என்றால் மனிதனை இழிவு படுத்துகின்ற, அடிமைப்படுத்துகின்ற, கைவிடு கின்ற, புறக்கணிக்கின்ற எல்லா உறவுகளும் தூக்கி யெறியப்பட வேண்டுமென்று மார்க்ஸ் தர்க்க ரீதியாக முடிவு செய்தார். நாய்கள் மீது வரி விதிப் பதற்குத் திட்டமிட்டதைக் கேள்விப்பட்ட ஒரு பிரெஞ்சுக்காரர் "பாவம் நாய்கள்! உங்களை மனிதர்களைப் போல நடத்துவதற்கு விரும் புகிறார்கள்!"(9) என்று கூறினாராம். இந்த உறவுகளை வர்ணிப்பதற்கு இந்தக் கூற்று மிகப் பொருத்த மானது.

மார்க்சின் டாக்டர் பட்ட ஆராய்ச்சிக் கட்டுரை யில் கடவுளை நோக்கித் துணிவாகச் சவால் விட்டதன் விளைவுகளை எடுத்துக்காட்டுவதற் காக நாம் கால ரீதியில் முன்னே போய் விட்டோம். *"பகுத்தறிவு இல்லாததுதான் கடவுள் இருப்பதற்குக் காரணம்" என்ற ஆராய்ச்சிக் கட்டுரையின் முடிவிலிருந்து "பகுத்தறிவில்லாத" உலகத்தைப் புரட்சிகரமாக மாற் றியமைப்பது அவசியம் என்ற முடிவுக்கு வருவதற்கு ஒரு அடி முன்னால் வைப்பது போதுமானது. ஆனால் இந்த ஒரு காலடியே தீவிரமான இளம் ஹெகலிய வாதிக்கும் புரட்சிக்காரனுக்கும் உள்ள வேறுபாடாகும்.*

இளம் மார்க்சின் விஞ்ஞான ரீதியான உலகக் கண்ணோட்டம் வளர்ச்சியடைந்த திசைகளில் ஒன்று தான் மதத்தைப் பற்றிய விமர்சனம். மாணவப் பருவத்தின் பிற்காலத்தில் தத்துவ ஞானமே அவருடைய முக்கியமான அக்கறை யாக இருந்தது. மதத்தைப் பற்றிய மார்க்சின் விமர்சன அணுகுமுறையுமே அவருடைய தத்துவஞான வளர்ச்சியினால் பெரு மளவுக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

நன்றி: வினவு இணைய தளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாங்கள் விழித்திருக்கும் வரை

எங்கே பயணிக்கின்றோம்
எமது சமூகத்தின் இன்றைய நிலை பற்றி
நொந்து கொண்டோமா? அதைக்
கண்டும் காணாமலும்
தெரிந்தும் தெரியாமலும்
புரிந்தும் புரியாமலும்
அறிந்தும் அறியாமலும்
எமக்கென்ன இலாபமென்று
ஒட்டாமல் வாழ்கின்றோமா...

நாம் கற்றபாடம்
நமக்கு சுய நலத்தை ஊட்டியதா
தனிமனித இலாபத்தைப் பெற்றுக்கொடுத்ததா

சமூகப்பொறுப்போடு
சமூக அக்கறை கொண்டு
சமூகத்தில் விழிப்போடு வாழ்கின்றோமோ

விழித்திடுவோம் தூங்கமாட்டோம்
எம்முடைய சூழலிலே உரிமைக்காக
போராடும் மக்கள் கூட்டம்

காணி உரிமைக்காய்
காணாமலாக்கப்பட்டோருக்கான பதிலுக்காய்
அரசியல் கைதிகளின் விடுதலைக்காய்
சையிட்டம் மருத்துவக் கல்லூரிக்கு எதிராய்
வேலையில்லாப் பிரச்சனையின் தீர்வுக்காய்
கொட்டகைகள் அமைத்து- கோசங்கள் முழங்குகின்றாய்
கும்பகர்ணன் போல நாமும் தூங்குகின்றோம்.
எங்கள் பார்வையில்
விழுந்தாலும் காதுகளால் கேட்டாலும்
எமக்கு என்ன
இவை எல்லாம் எமக்கு வேண்டாச் சங்கதிகள்.

முகநூலில் தமிழனடா
வீர மறவனடா என வீர
வசனம் பேசும் நாம்
எம்முடைய சமூகம் இன்று
வீதியோரங்களில் தவிக்கின்ற போது எம்
வீரப்பேச்சும் செயல்திறனும் எங்கே மழுங்கியது

எம் கல்வி எமக்கு எதைத் தந்தது?
பெற்ற கல்வியே எம்மை பிரதிபலிக்கும் கண்ணாடி.

சுயமின்றி பிரதிபலிக்கும் காட்சிப்
பொருளாய் மாற்றியவர் யார்?
பணம் சம்பாதிக்கும் இயந்திரமாய்
மாற்றியவர் யார்?
எங்கள் மூளையை சுரண்டும்
பொருளாக மாற்றியவர் யார்?
வெளிநாட்டு மோகத்திற்கு ஆளாகின்றவர் யார்?
போதைவஸ்து கலாசாரத்திற்கு அடிமையாக்கியர்
யார்?
தொலைக்காட்சி நடிகர்களாக மாற்றுகின்றவர் யார்
உலக வங்கியோ
ஆசிய அபிவிருத்தி வங்கியோ
கொள்ளை லாபம் பெறும் பன்னாட்டுக் கம்பனியோ
இவையோடு கூட்டுச்சேர்ந்த
நல்லாட்சி அரக்கர்களோ
இவர்கள் தான் காரணம் என்று அறியாது
தூங்குகின்றோம்.
முகநூல் கையடக்கத் தொலைபேசி
ரியூற்றர் கருவிகளால்
சேகுவேரா படத்தைப் போடுகின்றோம்
மார்க்சைப் பற்றி சொல்கின்றோம்
லெனினின் தத்துவத்தை லைக் வேண்டுகின்றோம்
மாவோவின் வசனத்தை பரிமாறுகின்றோம்
இருந்தும் அவற்றைச் செயலாக்கும் விருப்பம்
சிறிதுமின்றித் தூங்குகின்றோம்
வீணான உணர்ச்சித் தூண்டலுக்கு ஆளாகி
உயிரை மாய்க்கின்றோம்
அவர்கள் பாதையில் செல்ல
உறுதி கொள்வோம்
அயர்வு நீங்கி துயில் கலைவோம்
விழித்தெழுவோம்
சமூகக் கொடுமைகளின் மூலவேரை
உற்று நோக்கி பிடுங்கித் தூ ர எறிந்திடுவோம்
நாங்கள் விழித்தெழுவோம்
விழித்தெழும் வரை விடிவில்லை என்றுணர்வோம்
நாங்கள் விழித்தெழுவோம்

**கே. ஜிந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(80 களின் முற்பகுதியில்) நாடக அரங்கக் கல்லூரியின் தயாரிப்பில் குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களின் எழுத்துரு, நெறியாள்கையில் உருவான "உறவுகள்" நாடகத்தின் காட்சிகள்.













தேசிய கலை இலக்கியப்பேரவையின் மலையகக் கிளை 04.08.2018அன்று ஹட்டனில் நடத்திய "தேயிலைப் பெருந்தோட்டங்கள் பாதுகாக்கப்படுவது அவசியம் ..! அவசியமில்லை...!" எனும் தலைப்பிலான பட்டிமன்றமும் கலந்துரையாடலும்" நிகழ்வின் படங்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த 29.04.2018இல் "இஸ்ரேலின் 70 ஆவது ஆண்டு நிறைவும் பலஸ்தீனத்தின் இருப்பும்" என்ற தலைப்பில் இன்று இடம்பெற்ற சமூக விஞ்ஞானப் படிப்பு வட்ட கலந்துரையாடல்






கடந்த 27.06.2018 அன்று "வரணி JCB தேர் இழுப்பும் பண்பாட்டு ஆதிக்கமும்" என்ற தலைப்பில் இடம்பெற்ற சமூக விஞ்ஞானப் படிப்பு வட்ட கலந்துரையாடல்






27.07.2018இல் "கறுப்பு யூலையும் கற்றுக்கொள்ளாத பாடங்களும்" என்ற தலைப்பில் இடம்பெற்ற சமூக விஞ்ஞானப் படிப்பு வட்ட கலந்துரையாடல்






கடந்த ஞாயிற்றுக் கிழமை தேசிய கலை இலக்கியப் பேரவையில் (22.07.2018) அன்று இடம்பெற்ற திவ்யராஜனின் "மாறிய நாட்களும் மாறாத சூரியனும்" நூல் அறிமுக நிகழ்வு








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org